ரிஜிஸ்டர் நெ. 2041 தனிப்பிரதி விலை ஒரு அ

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	—	ரூ. 3—0
6-மாத சந்தா ,,	—	,, 1-12
வெளி நாட்டிற்கு ,,	—	,, 4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி ஆனிமீ 28உ (12—7—1931) | மலர் 11

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசுபெற்றது,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

உலகப்பிரசித்திபெற்ற உண்மையான மருந்துகள்.

காமகேசரி குளிகை.

(தங்கபஸ்பம் சேர்ந்தது)

தாதுபுஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இம்மாத்திரைகள் தாதுபுஷ்டியையும் தளர்ந்த நரம்புகளைக் கெட்டிபடுத்துவதிலும் பிரசித்திபெற்ற பலவித யூனானி சரக்குகளும் அசல் தங்க பஸ்பமும் சேர்த்து சாஸ்திர முறைப்படி தயார் செய்யப் பட்டது.

வயது சென்றதாலும், மிதமிஞ்சிய சம்போகத்தாலும், பலவித துர் அப்பியாசங்களாலும் இழந்து போன ஆண் தன்மையானது இம்மாத்திரைகளை சாப்பிட ஆரம்பித்தவுடன், மீண்டும் அதி கரிக்கச் செய்கிறது. பலக்குறைவு, கைகால்அசதி, சோம்பல், இடுப்புவலி, சம்போக காலத்தில் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி, துரி தஸ்கலிதம், சொற்பனஸ் கலிதம் முதலிய கொடிய வியா திகளைப்போக்கும். சரீர புஷ்டியும், திரேககாந்தியும், வீரிய விருத்தி யும், மிகுந்த ஆண் தன்மையும் உண்டாகும். தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி இல்லர இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். யாதொரு பததியமில்லை.

80 மாத்திரைகள் விலை ரூ. 10—0—0
40 மாத்திரைகள் விலை ரூ. 5—8—0

மஹா சந்தனாதித் தைலம்.

(ஓர் யோகீஸ்வரரின் அனுபவ முறை)

இத் தைலத்தில் அநேகவித பச்சிலை மூலிகைகள் சேர்ந்திருப்ப தால் சரீரத்திலுள்ள உஷ்ணத்தை யும் நீக்கிக் குளிர்ச்சியைக் கொடுப் பதுடன் கண்களில் உண்டாகும் பலவித வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்கிறது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்த தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கண் கூச்சம், கண்ருத்தல் சதைவளர்தல், மேகநீர் வெள்ளெழுத்து, மண்டையிடி, ஒருத்தலை நோய், பீனிசம், காதுநோய், காதுமந்தம், சரீரத்தில் அதிக உஷ்ணத்தி னால் உண்டாகும் திரேக காந்தல், கிருகிருப்பு, மயக்கம், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், மூளைகொதிப்பு, நித்திரை யின்மை, தலைமயிர் உதிர்தல் முதலிய சகலவித நோய்களையும் குணம் செய்வதுடன் சரீரத் திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

இத்தைலததை ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். இத்தைலத்தை உபயோகித்தவர்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்து குவிகிறது. ஒரு முறை இத்தைலத்தை உப யோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0
12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம். முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்குக் கேட்லாக் இனமாய் அனுப்பப்படும். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் 5 ரூபாய் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

வெளிவந்து விட்டது! வாங்கத்தவராதீர்கள்!!

முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டுமீ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் ௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

அரசாங்க இஞ்சினியர்களில் 14 பேர்களாலும், மற்ற பிரபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், சென்னை.

அகத்தியர் ஆராய்ச்சி.

இது சென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலாவல்லவருமான பண்டிதர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அனேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும்.

விலை அணா 0—2—0 தான். வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

பகுத்தறிவே விடுதலை.

அல்லது ஜீவாத்மா இல்லை, என்னும், இப்புத்தகம் சிறந்த ஆராய்ச்சி நூலாகும். முன், பின், ஜென்மம், மூடப்பழக்கவழக்கங்கள் முதலியன ஆராயப்பட்டிருக்கின்றன. சடங்குகள், அதனை சிலவு, கடவுள் ஆராதனை விக்ரக வணக்கம் முதலியன கண்டிக்கப்பட்டிருப்பதோடு பல ஆதாரங்களினாலும், மேற்கோள்களாலும் விளக்கப்பட்டிருக்கின்றது. சித்திரப்படங்களுடன் 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணா 6, 7 அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

நிமிஷக்கணக்கில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறீர்?

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல் அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவைகளையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்துமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியடின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,

அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம், S. I.

சோல் ஏஜண்டுகள்:—

தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.

K. S. மேதா & Co., 234, சைனாபஜார் ரோட் மதராஸ்.

வெள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

இனிது இனிது, இன்ஜெக்ஷனிலும் இனிது

R. K. பழனிஸ்வாமிகள்

இன்டியன் சக்தி முக்தி ஆயில்.

இவ்வற்புத சஞ்சீவினியை, எந்த ஜீவராசிகளுக்கேனும் உடல் வாதனையேற்பட்ட காலத்தில், டைரக்ஷனில் கூறியவண்ணம் மேல்பிரயோகமாக, சகல வியாதிகளுக்கும் உபயோகிக்க, உடனுக்குடனே நற்குணமளித்து, ஆபத்ரக்ஷகனைப்போல் நன்கு குணப்படுத்துவதால் ஒவ்வொரு குடும்பங்களிலும் பல ஆபீஸ், மில்கள், பற்பல இஞ்சின் சகலடிரைவர்களிடமும், மிஷின்கள் ஓட்டுமிடங்களிலும், நானாவித ஆயுதங்கள் புழங்கும் கிடங்கு, பட்டரை, ஒர்க்ஷாப், முதலானவிடங்களிலும், பல மிருக ஜாதிகளிடம் பழகுபவர்களிடமும், காடுகரை, தோட்டம், மலை, மரம், மண், நவலோக நவரத்தினஞ்சிவுபரசக்கனிகளில் தொழில் புரிபவர்கள் முதலான மகாஜனங்கள் ஒவ்வொருவர்களிடமும், முக்கியமாய் இத்தைலமிருக்குமானால், உலகத்தில் பம்பரம்போல் சுழன்றாடி ஓடிக்கொண்டிருக்கும் பற்பல அபாய விபத்துகளின் இம்சைகளினின்றும் பல அபமிர்த்துக்களினின்றும், சில கர்ம நோய்களினின்றும் விஷக்கடி, வெட்டுக்காயம், ரண வியாதிகளினின்றும் மீட்கப்படலாமென்பது மிகவும் உறுதி. இதின் முழு விபரங்களைப்பற்றிய நமது கேட்லாக மூலமாய் சகல உண்மைகளும் அறியலாம்.

கேட்லாக் இனம்.

1 அவுன்ஸ் சக்தி முக்தி ஆயில் விலை ரூ. 2—0—0

1/4 அவுன்ஸ் ... ... விலை ரூ. 0—8—0

கோ. கோவிந்தராஜுலு செட்டியார்,

மளிகை அண்டு ஷாப் வியாபாரி,

(துறையூர்) முசிரி தாலூகா, திருச்சி ஜில்லா.

சித்த ரசம்.

சகலவியாதிகளுக்கும் ஏற்றது

ஒரு முறை பரீட்சியுங்கள்.

புட்டி 1க்கு ரூ. 1—0—0

டஜன் 1க்கு ரூ. 10—0—0

ஏஜண்டுகள் தேவை!

அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்புக

சி. பி. சாமி, சித்தமருந்து, செய்சாலை பழனி S. I.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.

வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று)

சி. சுவாமி சிவநேசம்,

"சன்மார்க்கன்" பழனி.

அவியல்.

21ம் பாகம்.

(கைவல்யம்)

இவ்வுலகத்தையும் இதிலுள்ள பொருள்களையும் நாம் உற்று நோக்கும்போது இவை எப்படி உண்டாயின என்று நம்மனம் எண்ணுகின்றது. அவை ஒரு கடவுளால் உண்டாக்கப்பட்டவை என்று தீர்மானமும் பண்ணப்பட்டிருக்கின்றது.

அந்தக்கடவுள் யார்? அவர் எங்கிருக்கிறார்? எப்படி யிருப்பார்? அவரைப்பார்த்தவர்கள் உண்டா? என்னும் விவகாரங்களிலும், உலகத்தையும் அதிலுள்ள எல்லாப் பொருள்களையும் படைத்துக் காக்கும் பரம்பொருளே கடவுள், அவர் எல்லாப் பொருளிலும் நிறைந்து இருக்கிறார், அவர் இல்லாத இடமேயில்லை, அவருக்கு உருவம் கிடையாது. நாமளித்த உருவத்தை அவராகப்பாவித்தால் அந்த உருவமாக அவர் ஆகிவிடுவார் என்னும் விவகாரங்களிலும் காலத்தையும், புத்தியையும் செலவு செய்வதற்குச் சுயமரியாதை இயக்கம் வந்ததல்ல.

உலகமும் அதிலுள்ள பொருள்களும் கடவுளாலோ, இயற்கையாலோ, மாயையாலோ, மற்றெதினாலோ தோன்றி யிருந்தாலும் அதற்காகக் கவலைப்படச் சுயமரியாதை இயக்கம் வந்ததல்ல.

அனாதியான வேதமானாலும், கடவுளானாலும், அவர் சொன்ன சாஸ்திரமானாலும், அவர் அருள்பெற்றுச் சொன்னவர்களின் அன்பு மொழியானாலும் உலக பொது விதிக்கு ஒத்தும், நீதிக்கு இசைந்துமிருக்கவேண்டும். அவ்விதமில்லாத எந்த விதிகளும் சம்பிரதாயங்களும் தள்ளப்படவேண்டுமென்பதே சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையாகும்.

"சுயராஜியம் வந்தஉடனே கோவில்களுக்குள் ஆதிதிராவிடர்களை அனுமதிக்க மறுத்தால் அந்தக் கோவில்களை சுயராஜியக்கவர்ன்மெண்டு பறிமுதல் செய்துவிடும்" என்று மோத்திலால் நேரு சொன்னதை மகாத்மா காந்தியும் சொல்லுகிறார் என்று பத்திரிகைகள் சொல்லுகின்றன. வரப்போகும்கவர்ன்மெண்டுஎந்த மதத்திற்குள்ளும் நுழையாது என்று கராச்சி காங்கிரஸ் தீர்மானம் பண்ணியிருக்கையில் காங்கிரஸால் வரப்போகும் சுயராஜிய கவர்ன்மெண்டு கோவிலை பறிமுதல் செய்வது எப்படி? வரப்போகும் சுயராஜிய கவர்ன்மெண்டில் அதிகாரம் வகிப்பவர்களும் ஜாதி இந்துக்கள் தானே? ஆதிதிராவிடர்களை உள்ளேவிட மறுக்கும் கோவில்களைப் பறிமுதல் செய்யும் உத்தரவும் அந்த உத்தரவை நடத்தும் அதிகாரமும் ஜாதிஇந்துக்களின் கவர்ன்மெண்டாரிடமிருக்குமேயல்லாமல் ருஷியா, ஜப்பான் கவர்ன்மெண்டினிடமிருக்காதே? இப்பொழுதிருக்கும் இந்துக்கள் தானே அப்பொழுது மிருப்பார்கள். மனிதர்கள்தானே சுயராஜியத்தை நடத்துகிறவர்கள். இந்துக்களுக்கெல்லாம் கோவில்களில் சமத்துவமளிக்காமலிருப்பதற்கு இப்பொழுது எந்த சுயராஜியம் தடையாக விருக்கிறது? இந்தியா கவர்ன்மெண்டுசட்டமெம்பர் முதற்கொண்டு கிராமச்சட்டமெம்பர் வரையிலும் இருப்பவர்கள் ஜாதி இந்துக்களல்லவா? இவர்கள்தானே இந்தியா கவர்ன்மெண்டை நடத்திக்கொடுப்பவர்கள்? வீதியில்நடக்கப்படாதென்றும், ஆதிதிராவிடர்கள் பொதுக்கூட்டம் கூட்டப்படாதென்றும் 144-வது சட்டம் போடுகிறவர்களும் இவர்கள் அல்லவா? வரப்போகும் சுயராஜியத்தில் இவர்களெல்லாம் எங்கிருப்பார்கள்? இவர்கள் மனம் மாறுதல் எப்படி சீரடையும் என்பதற்கு விபரங்கள் வேண்டாமா? ஒன்றோ இவர்களின் மனம் மாறுதலடைய வேண்டும், அல்லது வேறு எதாவதுதொப்பிக்காரருடைய சுயராஜியமிருக்கவேண்டும். இல்லாமற்போனால் பறிவார்த்தை எப்படி செய்யமுடியும்?

நல்லெண்ணங்களும், நடு நிலைமைகளும், இருந்தாலொழிய நமக்குச் சுயராஜியம் பலிக்காது. வெள்ளைக்காரர்கள் சுயராஜியம் கொடுத்துவிட்டுப்போனாலும் ஜாதியென்னும் கற்பனையால் கொடுமைகளும், அநீதிகளும் நடக்கும் வரையிலும், பின்னொரு தொப்பிக்காரன் நமது சுயராஜியத்தைப்பிடிங்கிக் கொள்ளுவான்.

'வாலிப ஆணும் வாலிபப்பெண்ணும் சேர்ந்து பிறக்கும் பிள்ளைகளின் சுயராஜியமத்தியில் குழந்தையும், குழந்தையும் கூடிப்பிறக்கும் பிள்ளைகள் சுயராஜியம் செய்வது எப்பொழுதும் அபாயம்தானே? பக்குவமாகாதபெண்ணைக் கலியாணம் செய்து கலியாணமானநாளாநாள் படுக்கைக்குவிட்டு ஆணையும், பெண்ணையும் கட்டிலில் படுக்கவைத்து கம்பளியால் மூடிவைப்பதே கடவுள் சொன்ன சாஸ்திரமென்று நம்பிக்கொண்டிருக்கும் ஜாதி, என்வாழ்க்கைக்கு என் கையே சாஸ்திரமெழுதும், என்னுடையகாரியங்கள் என்கைக்குள் அடங்கி நடக்காவிட்டால் எனக்கு கையிருந்து என்ன பயன்? என்று கேட்கும் ஜாதியின் மத்தியிலிருப்பதும் கஷ்டமல்லவா?

சரக்குவிலை, சாமான்விலை, பூமிவிலை, மனிதனுக்குவேண்டிய மற்ற சாமான்களின் விலையெல்லாம் குறைந்துவிட்டன. பணம் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள வட்டிகள் குறையவில்லை. அன்று போட்டவட்டி அழியாமல் வட்டிக்கணக்கு ஏறிக்கொண்டேயிருக்கின்றன. நாட்டுக்கோட்டைநகரத்தார்களோ தருமல்தர்கள். சிவபக்திச்செல்வர்கள். சிவபக்தியோ ஜீவகாருண்யமுடையது. சிவகைங்கரியமோ ஜீவர்களின் துன்பங்களைத்துலைப்பது. அவ்வித சிவபக்தியை யுடைய நகரத்தார்கள் காலத்தைக்கருதியும், சிவபக்தியின் செயலை அறிந்தும் பூமியின் விலைக்கும் அகவிலையின் அளவிற்கும் ஏற்றபடி வட்டிகளைக் குறைத்தும் தள்ளியும் பணம் வசூலித்தால் அதுவே சிவ கைங்கரியப்பலனை அளிப்பதாகும்.

வழக்காடி வழிமறித்து வட்டிக்கு வட்டிவாங்கி கோவில் கட்டிக்கும்பாபிஷேகம் செய்து சோம்பேரிகளுக்கு சோறும் தக்ஷணையும் கொடுப்பதைவிட வட்டிக்கு வட்டி கொடுப்பதால் வாடிநிற்கும் குடும்பங்களுக்கு உதவி புரிவது பெருங்புண்ணியமல்லவா? குடும்பத்தை அழித்துக் கோவில் கட்டுவதைவிட குடும்பத்தை அழிக்காமல் கோவிலை நிறுத்துவதுமேலல்லவா?

பசியாலும், பஞ்சத்தாலும், நோயாலும், வேலையில்லாத கஷ்டத்தாலும் துன்பப்படும் நமது ஜனங்களுக்குக் கோவிலுக்குப்போகக்கூடப் பிரியமிருக்கிறதா? இருக்கும் பிரியத்திற்கு இப்பொழுதிருக்கும் கோவில்கள் போதாதா? இனியும் கோவில்களும் கும்பாபிஷேகங்களும் செய்யும் பணத்தை சனசமூகவிருத்திற்கு உபயோகப்படுத்துவதே புண்ணியமாகும். சிவபெருமானுக்கு ஏராளமான பொருள் செலவுசெய்து எவ்வளவோ கைங்கரியம் செய்தோம். அன்னிய நாட்டில் நமக்குத்துணையாக அவருடைய பிள்ளைகளில் ஒருவரையாவது அனுப்பவில்லை. அன்னியநாட்டில் நாம் சம்பாதித்த சொத்துக்களில் பல பாகங்களை அவருக்கே செலவுசெய்தோம். அதை அவர் ஏற்றுக்கொண்டிருந்தால் நமக்கு உதவி செய்யாமலிருப்பாரா?

"பாத்திரமல்லாதவனுக்கு எவன் தானம் கொடுக்கிறானோ அவனின் உயர்ந்த நிலைகெட்டுவிடும்" என்று மோக்ஷத்தைக்கோறிக் கருமம் செய்யும் தரும சாஸ்திரம் சொல்லுகிறது. பார்ப்பனர்களுக்கும், லோக குருவென்னும் சங்கராச்சாரிக்கும் தானதருமம் பாதகாணிக்கைகொடுத்த குடும்பங்கள் பல உயர்ந்தநிலை கெட்டுக்கிடப்பதற்குக் காரணமென்ன? ஒரு உத்தம பார்ப்பனனாவது பிராமணனாக அதிலிருந்தால் காப்பாற்றப்பட்டிருக்க வேண்டுமே? நாயுடு ராஜியம் அழிந்ததும் தஞ்சாவூர் ராஜியம் தரைமட்டமானதும் பார்ப்பனன் பெருத்து பாழான துரைத்தனங்களல்லவா?

ஆங்கிலேய நாட்டில் அவர்கள் நாட்டு மாணவர்களுக்கும் நமது நாட்டு மாணவர்களுக்கும் படிப்பில் இருவித்தியாசம் பாராட்டுகிறார்களாம்! அதைப்பற்றி கனம் இரங்காதம் அவர்கள் ஆங்கிலேயர்கள் மத்தியில் பிரசங்கம் செய்யப்போகிறார் என்பதாக பத்திரிகை சொல்லுகிறது. கனம்இரங்காதம் அதிகாரம் வகிக்கும் சர் அண்ணாமலைப் பள்ளியில் உள்ளவித்தியாசத்திற்கு ஏன் பிரசங்கம் செய்யவில்லை? ஆங்கிலேய நாட்டில் உண்மைக்குப்பரிந்து பேசி தரும மகிமையைக் கொண்டாடும் ஜனங்களிருக்கிறார்கள். நமது நாட்டில் உண்மையைச் சொன்னால் சொன்னவனைக் கெடுப்பதே தொழிலாக உடைய மகாபாவிகளிருக்கிறார்கள் என்பதே காரணம்.

ராமேஸ்வரத்தில் ராமர், அவருடைய பரிவாரங்கள், புரோகிதர்கள், அர்ச்சகர்கள், இவர்களுடைய சிப்பந்திகள், யாத்திரைவாசிகள் இவர்களே பெரும் கூட்டம். இந்த ஊர் சாராயக்கடையோ, மாதம் 1300 ரூபாய் குத்தகை? இத்தனை சாராயத்தையும் குடிப்பவர்கள் யார்? இவர்களெல்லாம் பாவத்தைச் சுமந்து சமுத்திரத்தில் தள்ளவேண்டியிருப்பதால் மனதைரியத்திற்கு அத்தனை சாராயமும் வேண்டும்போலும்!

முன் காசிக்குப்போக ஆறுமாதம், வர ஆறுமாதம், ஒரு வருடம் நடந்து காசி தீர்த்தம் கொண்டுவந்து ராமேஸ்வர லிங்கத்திற்கு அபிஷேகம் செய்தால் புண்ணியமென்பார்கள். இப்பொழுதோ கங்கா தீர்த்தம் ஒரு ரூபாயிக்கு ஒரு அவுன்சு, ராமேஸ்வரத்தில் விற்கிறது. அதை வாங்கி ஒன்னேகால் ரூபாய் கொடுத்தால் ராமேஸ்வர சுவாமிக்கு அபிஷேகம் செய்து பாவத்தையும் பறிமுதல் செய்து விடுவார்கள். இரண்டேகால் ரூபாயில் எல்லாப்பாவமும் போய் புண்ணியம் வந்து கைலாசத்திற்கோ, வைகுண்டத்திற்கோ போய்ச் சேர்ந்துவிடுகையில் இந்த உலகத்தில் சீர்திருத்த வேண்டியவேலை நமக்கென்ன வென்றுநினைக்கும் நமது சுயராஜியத்தில் ஆலயபறிவர்த்தனை இருக்குமென்பது நம்பக்கூடியகாரியமா?

பம்பாயில் ஆங்கிலேயர்கள் சங்கம் கூடி இந்துக்களையும் அதில் சேர்ந்து பேசவும், கூடிப்பழகவும் கூப்பிடுகிறார்களாம்! ஆதிதிராவிடர்கள் பி. ஏ. பி. எல். பாஸ் செய்திருந்தாலும் சென்னை கால்மாபாலிட்டன் கிளப்பில் காலடி எடுத்துவைக்க விடுவதில்லை. இனி வரப்போகும் சுயராஜிய கவர்ன்மெண்டை நடத்தும் மகான்களெல்லாம் அந்தக்கிளப்பிற்குள்தான் நுழைந்து கொண்டிருக்கிறார்கள். நாளை கோவில் பறிவர்த்தனை பண்ணும்சாவி இவர்களிடம்தானே இருக்கவேண்டும்?

நமக்கு ஆங்கிலேயர்கள் சுயராஜியம் கொடுத்து விடுவதினால் அவர்களுக்கு அதிகாரம், பொருள், பிழைப்பு முதலியவைகள் நஷ்டமடைகின்றன. ஆதிதிராவிடர்களை நாம் ஆலே

(தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க)

பெண்மக்களும் சுதேச சமஸ்தானங்களும்.

[திருமதி S. நீலாவதி]

சென்ற கட்டுரையில் இந்தியாவில் பெண்களின் நிலைமையையும், அதற்காதாரமாயுள்ள மதத்தைப்பற்றியும், சட்டங்களைப்பற்றியும் சிறிது எடுத்துக்கூறப்பட்டது. இக்கட்டுரையில் மற்றவைகளைப்பற்றி வரையத் தொடங்குகின்றேன். வாசகர்கள் பொறுமையோடு ஊன்றி நோக்குவார்களாக. புண்ணிய பூமியாகிய நம்மிந்தியாவில் பெண்மக்களின் வாழ்வு நாகரீக உலகு நகையாடும் தன்மையிலுள்ள தென்பதை எவ்விடத்தும் அஞ்சாது அறையத் தயாராயிருக்கின்றேன். எவ்விதத்து நோக்கினும் நிலைமை அவ்விதமேயென்பதை அறிவாளிகள் உணராது போயினும், அறிஞர்கள் நன்குணர்ந்தே தீருவார்கள். அம்மம்ம! இந்தியாவில் பெண்பிறவி யெடுப்பதே பெரும் பாவமாகும். முதலாவது எந்நாட்டிலும் அருவருத்துத் தள்ளக்கூடிய சண்டாள பாலிய விவாகம், இந்நாட்டில், பொன்னுய் விளையும் இப்புண்ணிய நாட்டில், இன்னும் தலைவிரித்தாடுகின்றதே? நீக்கப்பட பட்டபாடுகள் யாவும் அந்தோ! சண்டாள வைதீகத்தால் நீர்மேல் எழுத்திற்கு நேராயினவே! பன்னிரண்டு வயதிலும், பதின்மூன்று வயதிலும், பாலிகைகளை மனைவியராக்கும் கொடுமை எங்குண்டு? எந்நாட்டிலுண்டு? நம்மைத் தவிர வேறு யாரிடத்து நாம் இப்பாதகச் செயலைக்காணப் போகின்றோம்? "மழை பெய்தும் துவாணம் விடவில்லை" "சாமி வரங்கொடுத்தாலும் பூசாரி இடங்கொடுக்க வில்லை" என்னும் பழமொழிக்கேற்பப் படாத பாடு பட்டு சட்டமொன்று நிறைவேற்றியும், சனியன் வாசற்படியில் வந்து நின்றுகொண்டு தானே வழி மறித்துப்பகற் கொள்ளையடித்து வருகின்றது. சட்டம் ஒன்று வராதா, வராதா, என்று எதிர்பார்த்ததறு போய், வந்ததும் நிறைவேற வேண்டும், நிறைவேற வேண்டும் என்று அல்லும், பகலும், அதேநினைவாய்ப் பைத்தியம் கொள்ளும் தன்மையில் வாயைப் பிளந்துகொண்டிருந்து முடிவில், சீர்திருத்தக்காரர்கள் அனைவோர் சித்தமும் மெத்தக் களிப்புற சட்டம் நிறைவேறியும் ஐயோ! கொடுவினையே! சாதித்த தொன்றுமில்லையே! சாரதா சட்டம் வந்து சாதித்துப் பெண்மக்களின் இன்னல்களனைத்தையும் தவிர்த்து இன்பம் அளித்துவிடுமென இறும்பூதெய்திடவர் மனம் இன்றிருக்கும் நிலைமை என்னென்று கூறுவது? கொதிக்கும் தண்ணீரின் நிலையை ஒத்திருக்கின்றதென்றால், அது குற்றமெனவோ, பொருந்தாதெனவோ குறைகூறுவார் எவரெனவே கேட்கின்றேன்? இளமை மணத்தால் பெண்ணுலகிற்கு எத்துணை கேடுகள் சூழுகின்றன? இதையொழிக்க இவ்விருபதாம் நூற்றாண்டிலும், நமது வைதீகமதம் இடங்கொடுக்காத நிலையில் தான் அந்நிய அரசாங்கத்தினிடமிருந்து விடுதலை பெற கடும்போர்புரிய வேண்டுமென்கின்றோம். ஒரு பன்னிரெண்டு என்பதைப் பதினைன்காக வைத்துக்கொள்ள சம்மதப்படாத, சண்டாள மதத்தையும், சாத்திரத்தையும் வைத்துக்கொண்டு, தேசியவாதிகள் சுயராஜியக்கூக்குரல் போடுவதுதான் வேடிக்கையாயிருக்கிறது! பார்ப்பனீய மதமும், வைதீக சட்டங்களும் என்று நமது நாட்டை விட்டொழிகின்றதோ, அன்றே நமது நாடு அன்னிய அரசாங்கத்தினின்று விடுபடவேண்டிய நாளாகும். விடுபட்டே தீரவும் செய்யும். செல்லரித்த எடுகளுக்குக் கண்மணிகளன்ன பெண்மணிகளையும், தாழ்த்தப்பட்ட மக்களென்போர்களையும், அடிமைகளாக்கி வைத்திருக்கும் ஒருமதம் அழிந்தொழிந்து போக ஆசைப்படாமல், ஆல்போல், தழைத்தோங்க ஆசைப்பட, சீர்திருத்தக்காரர்கள் மனம், குறிப்பாக சுதந்தர தாகங்கொண்ட பெண்மணிகளின் மனம் எவ்விதத்தில் சம்மதிக்க முடியும்? என்றே கேட்கின்றேன். வீணாக சுயமரியாதைக்காரர்களை நிந்திப்பதால் விளைவது யாதென சிந்திக்கும் பொறுப்பை அறிவாளிகளுக்கே விட்டு விடுகின்றேன். குறிப்பிட்ட சில சமூகங்களை என்றென்றும் அடிமை வாழ்க்கையையே, ஆனந்தமாயனுபவிக்கக் கட்டளையிடும் மதமோ, சாத்திரமோ, சட்டமோ, சாமியோ, எதுவாயிருப்பினும் அது கண்டிப்பாய் அழிக்கப்பட வேண்டியதென்றே, குழிதோண்டிப் புதைக்கப்பட வேண்டியதென்றே, தூள் தூளாக ஆக்கப்பட்டு, மண்ணோடு மண்ணாய், மடிந்து மறைந்துபோக வேண்டுமென்றே அழுத்தத்தோடும் திருத்தத் தோடும் அஞ்சுதலின்றி அறைகின்றேன். மனித உரிமையை மறுத்து, மிருகஉரிமையை யளிக்க முன்னிற்பது எதுவாயிருப்பினும் காக்கப்பட வேண்டியது என்ன அவசியம் என்பது யோசிக்கத்தக்கது. நிற்க, பாலிய விவாகம் ஒன்றோடு போகவில்லை. விபசார வாழ்க்கையான பொட்டுக்கட்டுதல் முன்னையதைவிட மோசமானதாகும். பாலிய விவாகமாவது ஒருசமயம் சிலநாடுகளில் இருந்திருக்கலாம். ஆனால் மானத்தை விற்று வாழவேண்டிய ஒரு கொள்கை எந்நாட்டிலும், எக்காலத்திலும் இருந்ததாக சரித்திரவாயிலான்கூட நம்மால் அறிய முடியவில்லை. குழவிக்கல் லொன்றை நட்டுவைத்து, குருக்கள் பார்ப்பான் தரகின் மூலம் பொட்டுக்கட்டி காலமெல்லாம் விபசாரத்தைக் கைகொண்டு வாழவேண்டிய ஒருசமூகம், வாழ்ந்துவரும் ஒரு சமூகம், இந்தியாவில் நிலைத்திருப்பது கண்டு நாகரீக உலகு நகையாடாதென் செய்யும்? இதற்கும் ஒரு மதம் ஆதரவாயிருப்பது ஒன்றே போதுமல்லவா இந்தியாவின் பெருமையை எடுத்துக்காட்டுதற்கு? அம்மா! இதையொழிக்க வேண்டுமென்றால், வந்துவிடுதே மதவெறியும், சாத்திரத்திமிரும். இந்த மதவெறியும் சாத்திரவெறியும், சாதித்திமிரும் சட்டக்கட்டுப்பாடும் இந்திய நாட்டை விட்டு என்றொழியுமோ தெரியவில்லையே! இதொழிக்கப்படா திருக்கும்வரை இதன் கீழ் அடிமைகளாக்கப்பட்ட சமூகங்களுக்கு விமோசனம் ஏற்படாதென் றமேறு என்ன வேண்டியிருக்கிறது. ஆம்! அதில் சிஞ்சிற்றும் சந்தேகமில்லை. வாசகர்களே! பெண்மக்கள் வாழ்வு நாகரீக உலகு நகையாடு நிலையிலுள்ளதென யான் மொழிந்தது குற்றமென நீங்கள் கருதுகின்றீர்களா? அன்றி சரியென நீங்கள் ஒப்புகின்றீர்களா? அடிமை வாழ்க்கையில் ஆழ்ந்திருப்பது ஒருவிதக் கொடுமையென்றால், மானத்தை இழக்கும் வாழ்க்கையில் மூழ்கியிருப்பது மறுவிதக்கொடுமையன்றோ!

சுதேச சமஸ்தானங்கள்.

நிற்க, சுதேச சமஸ்தானங்களைப் பற்றி சிறிது வரைய ஆசை மிக்குடையவளாயுள்ளதால் வாசகர்கள் ஆட்சேபிக்காமல் விடை கொடுக்க வேண்டுகிறேன். நமது சுதேச சமஸ்தானங்களைப்பற்றி அநேகமாகக் குறை சொல்ல இடமில்லையென்றே சொல்லவேண்டும். பெரும்பாலும் போற்றத்தக்க நிலையிலேயே யிருக்கின்றது. சுதேச சமஸ்தானங்களுள் முக்கியமாய்க் குறிப்பிடவேண்டியது, மைசூர், திருவிதாங்கூர், பரோடா, ஆகியவைகளேயாகும். மேற்கூறப்பட்ட மூன்றுசமஸ்தானங்களும்பெண்மக்கள் விஷயத்தில் மிகவும் தாராளமாக நடந்து கொண்டதைப்பற்றி, இப்போதும் நடந்துகொண்டு வருவதைப் பற்றி மகிழாதார் மிகச்சிலரே யாவார். பெண் மக்களும் மனிதப்பிறவியென மதிக்கப்படுகின்றார்கள் என்பதை எங்கு காண வேண்டுமெனில் குறிப்பிட்ட மூன்று சமஸ்தானங்களிலே காணுதல் வேண்டும். பெண்கள் முன்னேற்றம் நம் கண் முன் காணும் இடங்களும் அவைகளேயாகும். அநேக நாட்களுக்கு முன்னே மைசூரில் பாலிய விவாகம், பொட்டுக்கட்டுதல் முதலிய கொடிய பேய்கள் சட்டமூலம் ஒழிக்கப்பட்டாய் விட்டது. அக்காலையில் வைதீகர்களும் "பழைய குருடி, கதவைத்திறடி" என்றபடி தங்கள், பல்லவியைப்பாடத்தான் செய்தார்கள். மதம் போச்சென்றார்கள், சாமி போச்சென்றார்கள், தர்மம் போச்சென்றார்கள். எது போனாலும்சரி, நீங்களும் இத்தோடு தொலைந்து போனாலும்சரி, என்று சுதந்தர வீரர்கள், விடா முயற்சியோடிருந்து, வேற்றுமை விருட்சத்தை வெட்டி வீழ்த்தினார்கள். இப்போது வேற்றுமை விருட்சந்தான் வேரோடு வீழ்த்தப்பட்டதே தவிர, மற்றபடி, இந்துமதமோ, சாமியோ, வைதீக வெறியர்கள் பயந்தபடி, செத்துப்போய் விடவில்லை. சிவலோகம் சேர்ந்துவிடவில்லை. அதெல்லாம் சுயநல சூழ்ச்சியேதவிர வேறொன்றுமில்லை. இப்போது சில வைதீகர்கள் மைசூரில் கூடி, பாலிய விவாகத்தடைச் சட்டத்தின்மீது தங்களுக்குள்ள ஆத்திரத்தைக்காட்டியிருக்கின்றார்கள். அதில் குறிப்பிடத்தக்கது யாதெனில், பாலிய விவாகத்தைப்பற்றிப் பெண்மணி யொருவர் கூறியது ஒப்புக்கொள்ளத்தக்கதல்லவாம். ஆஹா! இவர் தம்கூற்று அழகு! அழகு!! வெகு அழகு!!! பாலிய விவாகத்தைப்பற்றிய கஷ்ட நஷ்டங்கள், பெண்களைச சேர்ந்த பல விஷயங்கள், பெண்களுக்குத் தெரியாது. இப்பேயர்களுக்கு, அதிலும், மதவெறிகொண்டு கத்திக்கத்தி, மூளைவரண்டு, மேல்மாடியில் களிமண்ணை நிறப்பியிருக்கும், இம்மதியிலிகளுக்கு என்ன தெரியுமென்று கேட்கின்றேன்? பெண்மக்கள் விஷயத்தில் தலையிட்டு வாய்க்கு வந்தபடி உளறிக்கொட்ட இவர்கள் யாரென்பதே எனது கேள்வி. முன்காலத்தைப்போல், இவர்களை எதிர்த்துப்பேச யாரும் இல்லையென்ற அழுத்தம் இவர்கள் நெஞ்சில் திருத்தமாய்ப்பதிந்து விட்டது போலும்! ஓ! வைதீகப்பித்தர்களே! மதவெறியர்களே!! பெண்ணுரிமை மறுக்கும் பேயர்களே!!! அந்த எண்ணம் வேண்டவே வேண்டாம். விட்டுவிடுங்கள். பெண்மை அரசு இந்நூற்றாண்டில் கொஞ்சம் தலையெடுத்திருக்கின்ற தென்பதை இதுவரை உணராதிருந்திருப்பினும், இனியேனும் உணருமாறு எச்சரிக்கின்றேன். முன்னையச் சட்டங்களெல்லாவற்றையும்விட சமீபத்தில் நிறைவேறியிருக்கும் சட்டம் பொன்னேபோல் போற்றி மகிழத்தக்கதாகும். அச்சட்டத்திற்கிருந்த எதிர்ப்பை நோக்கும் பொழுதுதான் சிரிப்பு வருகின்றது. மூன்று ஓட்டுகள் எதிரிடையாயும், 2 ஓட்டுகள் ஆதரவாயும் கிடைத்திருப்பது ஒன்றே, மைசூரில் வைதீகத்துக்குள்ள செல்வாக்கு இவ்வளவென்று தெரிவதற்குப்போதிய சான்றாகும். சொத்துரிமைச்சட்டம் மைசூரில் நிறைவேற்றப்பட்டது வைதீகப்புலிகளுக்கு வயிற்றெரிச்சலையுண்

தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க

ரோஜா முத்தையா

தொழிலாளர்களும், காங்கிரஸ் இயக்கமும்.

"காங்கிரஸ் தலைவர்கள் ஒழிக!

டில்லி ஒப்பந்தக்காரர்கள் ஒழிக!!

சுபாஸ் சந்திரபோஸ் மீது நம்பிக்கையில்லை!!!"

சக்லத்வாலா சேதி.

"காந்தியின் வண்டவாளமும், அவரைப் பின்பற்றுகிறவர்கள் யோக்கியதையும், நான் விளக்கிவிட்டேன். நீங்களும் பொது ஜனங்களுக்கு அவர்களது துரோகத்தை எடுத்துச் சொல்லுங்கள்"

கல்கத்தாவில் தொழிலாளர் காங்கிரஸ் ஒன்று திரு. சுபாஸ் சந்திரபோஸ் தலைமையில் கூடிற்று. அது சமயம் பம்பாய் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் 'காங்கிரஸ் தலைவர்கள் ஒழிக, டில்லி ஒப்பந்தக்காரர்கள் (அதாவது காந்தி) ஒழிக' என்று கோஷித்துக்கொண்டிருந்தார்கள்.

லண்டனிலிருந்து பொதுஉடைமைக்கட்சி திரு. சக்லத்வாலா அவர்கள் "சென்றதடவை நான் இந்தியாவுக்கு வந்திருந்த பொழுது காந்தியின் வண்டவாளத்தையும் அவரைப் பின்பற்றுகின்றவர்களின் புரட்டுகளையும், துரோகங்களையும் வெளியிட்டேன் ஆனால் இந்த சமயம் பிரிட்டன் என்னை அங்குவர அனுமதிக்கவில்லை. ஆனாலும் இந்தியாவில் உள்ள பொது உடைமை மக்கள் காந்தியின் பித்தலாட்டத்தை தைரியமாய்" வெளிப்படுத்தவேண்டும் என்று எழுதியிருந்தார்.

சுபாஸ் சந்திரபோஸ் தலைமை பிரசங்கத்தில், கராச்சி காங்கிரஸ் தீர்மானத்தை வரவேற்று அதில் காணும் வார்த்தைகளைவிட கருத்து நல்லதென்று சொன்னதுடன் ருஷியமாஸ்கோகட்டளைக்கு சரணாகதி அடையவேண்டியதில்லை என்றும் சொன்னார். இதனால் மறுநாள் குழப்பம் ஏற்பட்டு "சுபாஸ் சந்திர போஸ் மீது நம்பிக்கை இல்லை" என்பதாக பொது உடைமைக்கக்ஷி தொழிலாளர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதில் சுபாஸ் சந்திர போசும் இருந்து கொண்டார். ஒரு ஓட்டினால் அது தோல்வியுற்றதானாலும் கூட்டத்தை ஒத்திபோட்டுவிட்டதாகச்சொல்லிவிட்டு சுபாஸ் சந்திர போஸ் வெளியேறிவிட்டார். பிறகு எல்லோரும் கூடி "சுபாஸ் சந்திர போஸ்மீதும் அவரது கோஷ்டி மீதும் நம்பிக்கை இல்லை" என்கின்ற தீர்மானம் நிறைவேற்றிவிட்டார்கள்.

பொது உடைமைக் கக்ஷி தொழிலாளர் அறிக்கை.

"திரு. சுபாஸ் சந்திர போஸ் விவாதத்தில் கலந்துகொள்ளுவதில்லை என்று வாக்களித்ததினால் அவர்மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்திற்கு அக்கிராசனம் வகிக்க அனுமதித்தோம். ஆனால் அவரும்ஓட்டு கொடுத்ததால்ஒரு ஓட்டில் அத்தீர்மானம் தோற்றுப்போய்விட்டது" அத்தீர்மானம் முதலில் தோற்றுவிட்டதற்குக் காரணம் இதுதான் காரண"மென அவ்வறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறார்கள்.

இது ஜுலை-மீ 6, 7 தேதி திராவிடன், சுதேசமித்திரன், இந்தியா, தமிழ்நாடு ஆகிய பத்திரிகைகளில் காணப்படுகின்றன. எல்லாபத்திரிகைகளையும் வைத்துப்பார்த்தால் இன்னும் பல விஷயங்கள் விளங்கும்.

தமிழ்நாட்டில் உள்ள சில தொண்டர்கள் "காங்கிரசும், நவஜீவன் பாரத சபையும் பொது உடைமைக்காரர் கொள்கையும், தொழிலாளர் கொள்கையும் ஒன்று' என்று சொல்லுவதும் 'காங்கிரஸ் தொண்டர்களும், காங்கிரசை ஆதரிப்பவர்களும், நவஜீவன் பாரத சபை மகாநாடு நடத்துகிறோம்' என்பதும் ஒரு கடையில் லாபத்தின் நிமித்தம் பல சாமான்கள் வைத்து விற்பதையே யொக்கும்.

திரு. சக்லத்வாலா தொழிலாளர் காங்கிரசுக்கு அனுப்பிய சேதியில் நன்றாய் எழுதியிருக்கிறார். 'நான் முன் இந்தியாவுக்கு வந்தபோது காந்தியின் வண்டவாளத்தை நன்றாய் விளக்க முயற்சித்தேன். இவ்வருஷம் சர்க்கார் என்னை இந்தியாவுக்கு அனுமதிக்கவில்லை. ஆனால் நீங்கள் (பொது உடைமைத் தொழிலாளர்கள்) இந்த சமயத்தில் காந்தியின் பித்தலாட்டங்களையும் அவரது கோஷ்டியின் மோசங்களையும் துரோகங்களையும் நன்றாய் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள் எனக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

ஆகவே தொழிலாளிகள் மனிதர்களாய் வாழவேண்டுமானால், இந்தியாவில் பொது உடைமை தத்துவம்ஏற்படவேண்டுமானால், முதலாவதாக காங்கிரசும், காந்தியும், அவரது கோஷ்டியும் ஒழிந்தாகவேண்டுமென்பதே அவர்களது அபிப்பிராயம் என்பது நன்றாய் விளங்குகின்றது.

இதே திரு சுபாஸ் சந்திர போஸ் அவர்கள் கராச்சி காங்கிரசில் திரு காந்தியவர்களால் அழைக்கப்பட்டுகாந்தியைப்பார்ப்பதற்கு முன் பேசிய பேச்சில் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால் உண்மை விளங்கும்.

அதாவது:—

"காங்கிரஸ் நமக்கு சுதந்திரத்தை சம்பாதித்துக் கொடுக்குமென்ற நம்பிக்கை எனக்கில்லை. காங்கிரசின் கொள்கை பயனற்றதாயும், பலஹீனமானதாயுமிருக்கிறது.

காங்கிரஸ் தலைவர்கள் கூறுவதில் முன்னுக்குப்பின் முரணானவைகள் பலவிருப்பதோடு அவர்கள் சொல்லொன்றும், செயலொன்றுமாகச்செய்து வருகிறார்கள். அவர்களுடைய வேலைத்திட்டம் புதிய மாறுதலையுண்டாக்கும் நோக்கங்கொண்டதாயில்லை. ஆனால் விஷயங்களைச் சரி கட்டிக்கொண்டு போகிறவைகளாகவே யிருக்கின்றன.

ஜமீன்தாரர்களுக்கும், குடிகளுக்கும், பணக்காரனுக்கும், கூலிக்காரனுக்கும், தீண்டப்படாதாரெனக் கூறப்படுகிறவர்களுக்கும் ஆண்களுக்கும், பெண்களுக்கும், யாவருக்கும் நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்வதென்பதையே அவர்கள் தங்கள் கொள்கையாகக் கொண்டிருக்கிறார்கள்."

என்று சொன்னார். பிறகு திரு. காந்தியைப் பார்த்த பிறகு திரு. சென்குப்தா கக்ஷியின் தொல்லைக்குப் பயந்து திரு. காந்தியை சரணாகதி அடைய நேர்ந்ததின் பயனாய் "காங்கிரசுக்குஜே! காந்திக்குஜே!!" போடவேண்டிய அவசியத்தில்வந்துவிட்டார். "பாவம்" இல்லையானால் ஒருமணி நேரத்தில் எப்படி ஞானோதயம் ஏற்பட்டிருக்கும் என்பதை யோசித்தால் இந்த உண்மை விளங்கும்.

இப்பொழுதும் நமது நாட்டில் காங்கிரசு தொண்டர்கள், தலைவர்கள் என்பவர்கள் பொது உடைமை தத்துவம் பேசுவது என்பது பொது உடைமை தத்துவத்தைஒழிப்பதற்காகச்செய்யும் காரியமாகத்தான் முடியுமே யொழியமற்றபடி அதனால்எவ்விதபயனும் ஏற்படப் போவதில்லை என்பது உறுதியானாலும் இந்த முட்டுக்கட்டைகளைஎல்லாம்இலக்ஷியம் செய்யாமல் பொது உடைமை உணர்ச்சி ஏற்படக்கூடிய வேகம் நமது நாட்டில் தோன்றிவிட்டதால் இதற்காக யாரும் பயப்பட தேவையில்லை என்பதையும் ஆனால் தைரியமாய் உண்மையை வெளிப்படுத்திக் கொண்டு வரவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். "யார் எழுதினாலென்ன"

திரு. மாளவியா.

திருவாளர் பண்டித மதன் மோகனமாளவியாகூட 'ஒருவருஷத்தில் சுயராஜியம்' என்று சொல்லி சீக்கிரம் வாங்கிக்கொடுத்துவிடப்போவதாக உறுதிகூறுகிறார். இதிலிருந்தாவது சுயராஜியத்தின் யோக்கியதை எப்படி இருக்கும் என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது.

நாகலாபுரம்

ஆனந்தா வாசகசாலை திறப்புவிழா.

திரு. வி. வி. இராமசாமி தலைவர்.

திரு. கோபாலகிருஷ்ண நாயக்கர் விழா ஆற்றியவர்.

ஈ. வெ. இராமசாமி விஜயம்.

—:0:—

இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டைக்கு அடுத்த நாகலாபுரத்தில் 2-7-31-ல பிற்பகல் 3 மணிக்கு திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி, விருதுநகர் வி. வி. இராமசாமி, அருப்புக்கோட்டை கோபால கிருஷ்ணசாமி நாயக்கர் சு. அ. முத்துநாடார் ஆகியவர்கள் வந்த மோட்டாரில் பாண்டுவாத்தியங்களுடன் ஜின்னிங் பேக்டரியில் இருந்து ஊர்வலமாக வாசகசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஊர் கொடிக தோரணம் வாழை, தட்டிப்பந்தல் ஆகியவைகள் கட்டப்பட்டிருந்தன. பல இடங்களில் ஊர்வலம் நிறுத்தப்பட்டு மாலைகள் போடப்பட்டதுடன், பழம், கற்கண்டுகள் வழங்கப்பட்டன. ஊர்வலம் எல்லாத்தெருக்கள் வழியாகவும் விடப்படவேண்டுமென்று வாதாடி தெருத்தெருவாய் இழுத்துக்கொண்டு போனார்கள். சரியாக 4 மணிக்கு ஊர்வலம் வாசகசாலைக்கு வந்து சேர்ந்ததும், திரு ஈஸ்வரம் பிள்ளை அவர்கள் தனது ஒரே குமார்த்தியின் தேக அசௌக்கியத்தால் வரமுடியாது போனதால் விருதுநகர் திரு. வி. வி இராமசாமி தலைமைவகிக்க கேட்டுக்கொண்டார். பிறகு திரு ஈ. வெ. இராமசாமிக்கு நாகலாபுரம் பொதுஜனங்களால் வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. தலைவர் முகவுரைக்குப் பின் அருப்புக்கோட்டை பிரபல மிராசுதார், ஜில்லா போர்ட் மெம்பர் சுயமரியாதை வீரர் உயர்திரு கோபால கிருஷ்ணசாமி நாயக்கர் அவர்களால் ஒரு பெரிய வெள்ளி சாவியைக்கொண்டு வாசகசாலையை திறந்து வைக்கும்போது பேசியதாவது:—

கோபாலகிருஷ்ணசாமி நாயக்கர்.

"தனவான்களே!

இன்றையதினம் இந்தவூரில் ஆனந்தாவாசகசாலை என்னும் வாசகசாலையை திறந்து வைக்கும் பெருமையை எனக்களித்ததற்காக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மக்கள் அறிவுபெறவும் உலக விஷயங்களை அறிந்து அனுபோகம் பெறவும் இதுபோன்ற வாசகசாலைகளே மிகவும் பயனளிக்கத்தக்கதாகும்.

இதில் அனேகப் பத்திரிகைகள் பல தேசசங்கதிகளைக் கொண்டதாக வருமாதலால் ஒவ்வொருவரும் அவற்றை படித்தால் எவ்வளவோ விஷயங்களை தெரிந்து கொள்ளலாம்.

இந்தமாதிரி வாசகசாலை ஏற்படுத்துவது மாத்திரம் போதாது. இதைப் பொது ஜனங்கள் வாலிபர்கள் ஆகியவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதற்கு இந்தஊர் மகாஜனங்களும் ஆதரவளிக்க வேண்டும்.

இதில் பெண்மக்களும் அங்கத்தினர்களாகி பத்திரிகைகளை வீட்டுக்குத் தருவித்தாகிலும் படிக்க வேண்டும்.

ஊரார் எல்லோரும் அங்கத்தினர்களாகவேண்டும்.

எவ்வித அபிப்பிராயமுள்ள பத்திரிகைகளையும் படிக்க வேண்டும்.

வெறும் புராணங்களைப்படிப்பதை விட அறிவைப்புகட்டும் பலவித அபிப்பிராயங்கொண்ட, பல பெரியார்களெழுதிய புஸ்தகங்களையும், ஆங்கில பாஷையில் இருந்து மொழிபெயர்த்த அறிவு ஞான புஸ்தகங்களையும் படிக்க வேண்டும்.

அவைகளைத்தருவித்து வைக்கவேண்டும் என்கின்ற இச்சிறு மொழிகளுடன் இவ்வாசகசாலையை திறந்து வைக்கின்றேன், என்று பேசினார்.

பிறகு அருப்புக்கோட்டை 'நாடார் குலமித்திரன்' பத்திராதிபர் சு. அ. முத்துநாடார் அவர்கள் பேசியபின்பு திரு. ஈ. வெ. இராமசாமி 2-மணி நேரம் பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பிறகு சந்தனம், பழம், கற்கண்டு வழங்கி எல்லோருக்கும் மாலை போட்ட பிறகு கூட்டம் முடிவுக்கு வந்தது. கூட்டத்திற்கு 2000 பேர்கள் ஆண்களும், பெண்களும் விஜயம் செய்திருந்தார்கள் அவர்களில் முக்கியஸ்தர்கள்;

கூடியிருந்தவர்களின் பெயர்கள் புதூர் க்ஷத்திரியர் வித்தியாசாலை மானேஜர் வே. சங்கரலிங்க நாடார், சு. அ. முத்துநாடார் அருப்புக்கோட்டை, சங்கர அய்யர் உபாத்தியாயர் புதூர், செ. நடராஜ பிள்ளை, சுப்பிரமணியபிள்ளை செங்கோட்டை, ஆறுமுகச்சாமி நாடார், மாரியப்ப நாடார் விருதுநகர், அம்பலம் சாமியப்பா நாடார், ப. க. மு. மாரியப்பநாடார், மு. தாத்தைபாபிள்ளை விளாத்திகுளம், மூகம்மது மொய்தீன் சாயபு, கணபதி நாடார் கரிசல் குளம், அ. துரைசாமி நாடார் தூத்துக்குடி, சாமிய்யா நாடார் புதூர், ராமய்யா நாடார், தனுக்கோடி நாடார் கரிசல்குளம், மீரா கன்னி சாயபு, ப பால்வண்ணம் செட்டியார், கணபதி ஓதுவார், ப. த. வெள்ளையஞ் செட்டியார், கி. நா. ஆறுமுகம் பிள்ளை, இராமசாமி நாடார் பேரிலோகன்பட்டி, சிதம்பர நாடார், அக்காசாமி நாயக்கர் புதுப்பட்டி, பொய்யாளிக்கவுண்டர் கல்லூரணி, ஜி மனுவேல், சுப்பையா நாடார் பேரிலோசன்பட்டி, இராமசாமி நாயக்கர் சங்கரலிங்கபுரம், அருணாசலம், ஆள்வார், ஆறுமுக முதலியார், வேல் முதலியார், சுண்ணுமியான் சாயபு, மூ. பொன்னுசாமி செட்டியார் புதூர், மாதரசுத்தேவர் ரெட்டிபட்டி, மீனாக்ஷிசுந்தரம் செட்டியார், பொன்னையா பிள்ளை, நமசிவாய முதலியார், சண்முகசுந்தரம் பிள்ளை, ராமசாமி பிள்ளை, மகாலிங்கம், மாரிடாக்டர், ஜெயபால் ராஜ் விளாத்திகுளம், அ. சி. சேர்வைகாத்தேவர், அருணாசல நாடார், ரசூல் மைதீன் சாயபு, சையித்து மைதீன் சாயபு, குருசாமி அருப்புக்கோட்டை முதலியவர்களாவார்கள்.

விளாத்திகுளத்தில் சமீபத்தில் ஒரு மகாநாடு கூட்டுவதாக முயற்சிகள் நடைபெறுகின்றன.

இரவு 9-மணிக்கு எல்லோரும் கார்வழியே விருதுநகர் சென்றார்கள்.

அதிசயச்சாமியாரும், நம் பாமர மக்களும்.

நமக்கேன் சுயராஜியம்?

சகோதரர்களே!

இராமநாதபுரத்திற்கடுத்த சுமார் 15-மைலுக்கப்பால் திருப்பாலைக்குடி என்னும் ஊரில் ஓர்சாமியார் இருக்கின்றார். அவர் மகமதிய சாமியாராம். அவர் வெளிவந்து நான்கு மாதம் ஆயிற்றாம். அதற்கு மூன்று மாதங்களுக்கு முன அவர் பூமிக்குள் உயிருடன் புதைக்கப்பட்டாராம். 3-மாதகாலமாய் உள்ளேயே இருந்து பின் வெளிவந்து அந்த திருப்பாலைக்குடிக்குச்சென்று அங்குள்ள ஓர்வாண்ட குளத்தில்போய் அவர் கைவைத்தமாத்திரத்தில் தண்ணீர்பெருகிவிட்டதாம். அவரிடம் வரம் கேட்க போகின்றவர்களுக்கு அந்த குளத்துத்தண்ணீரை எடுத்துவரச்சொல்லி கொடுக்கின்றாராம். அதைச்சாப்பிட்ட மாத்திரத்தில் சகல நோய்களும் ரோகங்களும் நிவர்த்தியாகின்றதாம். ஆஹா! என்னே ஆச்சரியம்! இவ்விருபதாம நூற்றாண்டில் கடவுள் என்ற ஒன்று அருபி, என்று சொல்லுவதற்கும் ஆதாரமில்லாமல் தத்தளிக்கும் பொழுது ஒரு மனிதன் மேற்சொன்ன கடவுளும் செய்யொண்ணாத காரியங்கள் செய்வதென்றால், பகுத்தறிவுள்ள எவரும் நம்பஹேதுவுண்டா?

நிற்க, இன்னுமோர் அதிசயமாம் குழந்தையில்லாதவர்களுக்கு அந்தக்குளத்துத்தண்ணீரைச்சாப்பிட்டமாத்திரத்தில் கெர்ப்பம் உற்பத்தியாகின்றதாம்!

முன்தேவர்களுடைய சலிதமான இந்திரியத்தைச் சாப்பிட்டபின்னுவது குழந்தைகளோ மிருகங்களோ உற்பத்தியானதாகப்புராணங்கள் சொல்லுகின்றன. இப்பொழுதோ குளத்துத்தண்ணீரைக்குடித்த மாத்திரத்தில் குழந்தை உற்பத்தியாகின்றதென்றால், என்போன்றசகோதர ஆண்பிள்ளைகளுக்கு இனி அந்த சம்பந்தப்பட்ட வேலையில்லை என்றே நினைக்கின்றேன்.

இருந்தாலும் குழந்தை பெரும்வழி இலேசானதாக இருந்தாலும் கர்ப்பத்தடை அவசியம் என்பதை சகோதரர்கள் அறிவார்கள் என்று நம்புகின்றேன்.

இந்தசாமியாரிடம் வரங்கேட்க நூறுமைல் சுற்றுப்புறமிருந்து நம் இந்து சகோதர சகோதரிகள் பதினாயிரக்கணக்காக வந்து குவிந்து ஒரு செம்பு தண்ணீர்கொண்டுபோகின்றார்கள். செலவோ:-ரயில்சார்ஜ், கார் சார்ஜ், வண்டி சார்ஜ், சாப்பாட்டுச்செலவு, சாமியார் தக்ஷிணை, சிப்பந்திகள் பிடுங்கள் வகைகளில் லக்ஷக்கணக்காகவிரயமாகின்றது. கூடிய சீக்கிரம் அவ்வூரில் ஜனநெருக்கமிகுதியால் காலரா போன்ற வியாதிகள் கண்டிப்பாய் வரும்போலிருக்கின்றபடியால் சுகாதார உத்தியோகஸ்தர்கள் அதை உடனே நிவர்த்தி செய்ய வேண்டுமாயும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம் இந்தியர்கள் இந்த அற்ப விஷயத்தில் பகுத்தறிவைச்செலுத்த அசக்தர்களாயிருக்கையில் சுயராஜியபாரத்தைத் தாங்குவதற்கு அருகதையுள்ளவர்களா என்பதைச்சற்று யோசித்துப்பார்த்தால் பள்ளிப்பிள்ளைகளுடைய நகைப்பார்களென்றால், கனம் மிஸ். மேயோ போன்றவர்கள் நமக்கு புத்தி புகட்டுவதில் நாம் அவர்களை குற்றம் சொல்லுவது பொறாமையும், ரோஷமின்மையுமல்லவா! ஆதலால் சகோதரர்களே! சகோதரிகளே!! இம்மூன்றுமாதங்களும் உங்களுடைய உடல்,

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

காங்கிரசும்--சுயமரியாதையும்.

ஆண்டுவிழாவில் ஈ. வெ. இராமசாமி உபன்யாசம்.

கோட்டாறு.

அன்புள்ள தலைவரவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!!

இன்று, இங்கு சுயமரியாதை வாசகசாலை ஆண்டுவிழாவை உத்தேசித்து நடைபெறும் உபந்யாசங்களில் நான் "காங்கிரசும் சுயமரியாதையும்" என்பதுபற்றிபேசவேண்டும் என்பதாய் குறிக்கப்பட்டிருக்கின்றது.

இது விஷயமாய் எனது அபிப்பிராயங்கள் அனேகமாக தமிழ்நாடு முழுவதும் அறிந்ததேயாகும். எப்படியெனில் 'குடி அரசு' பத்திரிகை வாயிலாகவும் அனேக உபந்யாசங்கள் மூலமாகவும், சுமார் 5, 6 வருஷங்களாக வெளிப்படுத்திக் கொண்டே வந்திருக்கின்றேன். அதற்றில் இருந்து மறுமபடியான நிலைமையும் இப்போது ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை.

சமீபகாலத்தில், அதாவது இந்த ஒருவருஷ காலத்தில் காங்கிரசுக்கு செய்யப்பட்ட விளம்பரத்தின் காரணமாய் பொதுஜனங்களில் பலருக்கு ஒரு உணர்ச்சிதோன்றி அதைப்பற்றி பேசப்படுகின்றது என்பதை தவிர வேறில்லை. ஒரு நாட்டில் புதிதாக ஏதாவது விஷயம் தோன்றினால் அதைப்பற்றி வெகும் பேச்சாய் இருப்பது சகஜமேயாகும். அதுபோல்தான் இப்போது காங்கிரசைப்பற்றியும் பேசப்படுகின்றது. ஆதலாலேயேதான் நீங்களும் என்னை அதைப்பற்றியே பேசக்கேட்டு இருக்கின்றீர்கள் என்று கருதுகின்றேன். காங்கிரஸ் ஏற்பட்டு சுமார் 45 வருஷமானபோதிலும், அது எதை உத்தேசித்து, எப்படிப்பட்டவர்களால் ஆரம்பிக்கப்பட்டது என்பது காங்கிரஸ் அனுபோகம் பெற்ற யாவரும் அறிந்ததேயாகும். அது இராஜவிசுவாசப் பல்லவியைப் பாடி உத்தியோகம் பெற ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனமேயாகும். உதாரணம் வேண்டுமானால் நமது நாட்டில் இதுவரையிலும், இப்போதும் பெரிய உத்தியோகஸ்தர்கள், பெரிய வக்கீல்கள், பெரிய பட்டதாரிகள் முதலியவர்கள் எல்லாம் காங்கிரசினாலேயே பெரிய மனிதர்களானவர்கள் என்பதை கவனித்துப் பார்த்தால் விளங்கும். நானும் 10, 15 வருஷங்களுக்கு முன்பு இரண்டொரு பழைய காங்கிரசுகளுக்கும் சென்றிருக்கின்றேன்.

இராஜ விசுவாசம்.

அப்பொழுதெல்லாம் காங்கிரசின் முதல் தீர்மானம் இராஜவிசுவாசத் தீர்மானமேயாகும். உதாரணமாக 1914-ம் வருஷம் சென்னையில் கூடிய காங்கிரசுக்கு நான் சென்றிருந்தபொழுது கல்கத்தா திருவாளர் பூபேந்திரநாத் போஸ் தலைமை வகித்திருந்தார். காங்கிரசு நடவடிக்கை நடந்து கொண்டிருக்கையில் சென்னை கவர்னர் லார்ட் பெண்ட்லண்ட் துரையவர்கள் காங்கிரசுக்கு விஜயமானார். அவர் விஜயமானதும மற்ற நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு திருவாளர் சுரேந்திரநாத் பானர்ஜீ அவர்கள் உடனே எழுந்து ஒரு இராஜவிசுவாசத்தீர்மானத்தை பிரேரேபித்து, வெகு அழகாக அதாவது "இந்தியாவுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் கடவுளால் அனுப்பப்பட்ட"தென்றும், 'இந்திய மக்கள் தலைமுறை தலைமுறையாய் இராஜவிசுவாசிகளாயிருக்க வேண்டு'மென்றும் பேசி முடித்தார். பலர் ஆமோதித்துப்பேசிய பின், 5 நிமிஷ நேர சம்பாஷணைக்குடன் அதை (இராஜவிசுவாச தீர்மானம்) நிறைவேற்றி சென்னை "அமிதவாத தேசிய வாதி"களான அய்யங்கார் கூட்டத்தினர்கள் சமீபத்தில் லார்ட் எட்வார்ட் மன்னரும், ஜார்ஜ் மன்னரும் விஷ்ணு அம்சமென்றே பேசி வேதங்களிலிருந்தும், சாஸ்திரங்களிலிருந்தும ஆதாரங்கள் எடுத்துக்காட்டி வந்தார்கள். (அதாவது அரசர்கள், விஷ்ணு அம்சமென்று வேதம் கூறுவதாக உரைத்துக்கொண்டு வந்தார்கள்).

ஒத்துழையாமை.

கடைசியாக சமீபகாலத்தொட்டுதான் அதாவது காங்கிரசின் பலனை (உத்தியோகங்களை) ஒரே கூட்டத்தார் (பார்ப்பனர் மாத்திரம்) அனுபவிப்பதில் "பொறாமை"ப்பட்ட சென்னை மாகாண பார்ப்பனரல்லாதார் 'காங்கிரசின் பலன் எல்லோருக்கும் கிரமமாய் பங்குகிடைக்க வேண்டு'மென்று கேட்க ஆரம்பித்தது முதல் அதுபோலவே காங்கிரசு பலனும் எல்லோருக்கும் பங்குபோக ஆரம்பித்தபிறகேஇராஜவிசுவாசம் போய்ஒத்துழையாமையாகி இராஜவிசுவாசமாய் இருப்பவர்களை "தேசத்துரோகிகள்" என்றும், 'சுய நலக்காரர்கள்' என்றும், 'வகுப்பு வாதிகள்' என்றும்சொல்லவேண்டியதாகி வழக்கமாய் அனுபவித்து வந்த பலனை அடைய முடியாமல் போனவுடன் காங்கிரஸ்காரர்கள் (பார்ப்பனர்; "தேசிய வாதிகளாக" ப்ரிணமிக்கத்தொடங்கி விட்டார்கள். ஜஸ்டிஸ் கக்ஷி என்பதாகவும், முஸ்லீம்லீக் என்பதாவும் மற்றும் வகுப்புச் சங்கங்கள் என்பதாகவும் சில ஸ்தாபனங்கள் தோன்றி காங்கிரஸ் பலனில் (உத்தியோகங்களில்) பங்கு கேட்காது இருந்திருக்குமானால் இன்றையதினம் இந்தியாவில் இராஜவிசுவாசம்என்பதுகாங்கிரசுக்கே சொந்தமான ரிஜிஸ்டர் செய்யப்பட்ட (டிரேட் மார்க்காய்) அதாவது உரிமை செய்த வியாபாரக்குறியாய் இருந்து வரும். சென்னபட்டணம் ஜார்ஜ் டவுன் ஆனதுபோல் பார்ப்பனர் மக்கள் பெயரும் ஜார்ஜ் அய்யர் ஜார்ஜ் சாஸ்திரி ஆயிருக்கும். உதாரணமாக,

ராஜா விஷ்ணு அம்சம் என்பது கூட பார்ப்பனர் சொல்லி இருக்காவிட்டால் இன்று மற்ற யாருக்குமே தெரிந்திருக்காது என்பதேயாகும். அவர்கள் அப்படிச்சொன்னதிலிருந்தே இன்னும் பலர் அப்படி நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நிற்க,

காங்கிரஸ் யாருக்கு?

இன்றும் காங்கிரஸ் என்பதற்கும் ஆறுகோடி தீண்டாதார் என்பவர்களுக்கும் சிறிதும்சம்பந்தமில்லை. அவர்கள் இராஜவிசுவாசிகள் மேலும் 8 கோடி மகமதியர் என்பவர்களுக்கும்காங்கிரசுக்கும்சம்பந்தமில்லை இவர்களும் இராஜவிசுவாசிகள். வருணாச்சிரமம் பேசும் பார்ப்பனர்களும் தங்களை இராஜவிசுவாசிகள் என்றே சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்த இரண்டு மூன்று கூட்டத்திலும் 100க்கு ஒருவர் இருவர்கூட காங்கிரஸ் காரர்களாய் இருக்கிறார்கள் என்று தைரியமாய்ச்சொல்ல முடியாது. ஒரு சமயம் மகமதியர்களில் ஒருவர், இருவர் என்கின்ற எண்ணிக்கைஇருந்தாலும் கூட தீண்டப்படாதார் என்பவர்களில் சுத்தமாய் 'தேசியவாதிகள்' இல்லையென்பதை யாரும் மறுக்க முடியாது. சிறிசுவர்களிலும்மிகசிலரே இருக்கக்கூடும். அவர்களும் வயிற்றுப்பாட்டிற்கு சர்ச்சுகளில் இராஜவாழ்த்துப்பாடிவிட்டு வெளியில் வந்து வேடிக்கை கூட்டத்தில் 'ஜே!' போடுபவர்களாகத்தான் இருக்க முடியுமேயொழிய 'இராஜா வேண்டாம்' என்கின்றவர்கள் இல்லை என்றேசெல்லலாம்.மற்றபடி சென்னை மாகாணத்தை எடுத்துக்கொண்டால் பார்ப்பனர்கள் தவிர பார்ப்பனரல்லாதார்களில் வயிரார்க்கஞ்சி குடிக்கும் 100க்கு 95 பேருக்கு மேலாகவே காங்கிரசினிடம் கவலையில்லாதவர்களும் அதை ஒப்புக்கொள்ளாதவர்களுமே இருப்பார்கள். வேண்டுமானால் தேர்தலில் ஓட்டுப்பெறவேண்டியவர்கள் இரண்டுக்கும் கல்லபிள்ளைகள் போல காட்டிக்கொள்வார்கள். மற்றும்இதை ஒருவியாபாரமாய் கருதுகிறவர்கள் அதுவும்லாபநஷ்டம் பார்த்து இதைபயன்படுத்திக்கொள்ளுபவர்களாகவே இருப்பார்கள். இவற்றைத்தவிர வகுப்பு மகாநாடுகள் என்பவைகள் பெரிதும் இராஜவிசுவாசப்பல்லவி பாடிக்கொண்டுதான் வருகிறது என்றாலும் ஒரு சிலவாலிபர்கள் பார்ப்பனரல்லாதாரிலும் காங்கிரசை பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் மறக்கவில்லை. அதுவும் அப்படிப்பட்ட வாலிபர்களும் ஒரே கொள்கையாய் தொடர்ந்து அதில் இருக்கின்ற வாலிபர்கள் என்பவர்கள் பூதக்கண்ணாடிவைத்து பார்க்கவேண்டியவர்களாகவே இருப்பார்கள். எந்த ஸ்தாபனமானாலும் அது ஒரு சம்பளம் கிடைக்கும் ஸ்தாபனமாகவும் வாழ்வுக்கு சௌகரியமான ஸ்தாபனமாகவும் விளம்பரத்துக்கு அநுகூலமானதாகவும் ஏற்பட்டுவிட்டால் பிறகு அதில் கலந்துகொள்ளும் மக்கள் ஏராளமாகி விடுவார்கள் என்பதையும் அந்த ஸ்தாபனத்தைப்பற்றி புராணம்பாடுவார்கள் என்பதையும் நான் உங்களுக்கு எடுத்துச்சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. ஆதலால் அதைப்பற்றியே காங்கிரசின் யோக்கியதையை நிர்ணயித்துவிடமாட்டீர்கள்.

காங்கிரஸ் கொள்கை.

ஆகவே இவை ஒருபுறமிருக்க காங்கிரசின்கொள்கைகள்தான் என்ன என்பதை யோசித்துப் பாருங்கள்.

எந்தக்காரணங்களால் இந்த நாடு 'அன்னியநாட்டார்' என்பவர்களின் ஆட்சிக்கு ஆளாக நேரிட்டதோ' அதிலும் பார்ப்பனர்கள் ஆதிக்கம் நிலைசிறக்க நேரிட்டதோ அந்தக்காரணங்களை இல்லாமல் செய்ய இந்தக்காங்கிரசில் ஏதாவது ஒரு கொள்கை இருக்கின்றது என்பதாக யாராவது சொல்லமுடியுமா? என்று கேட்கின்றேன்.

இந்தியாவின் பெருமையைப்பற்றி யார் என்ன பேசுவதாயிருந்தாலும் இந்தியாவில் பலமதம், பலஜாதி, பல விதஉயர்வு தாழ்வு என்பவைகள் இருந்து வருகின்றதை யாரும் மறுக்க முடியாது. இந்தியாவில் தெருவில் நடக்காத,கண்களில் தென்படாத 'இழிமக்கள்'இருந்துவருவது இரகசியமல்ல இந்தக்காரணங்களே இன்று அன்னிய ஆட்சி இந்த நாட்டில் இருந்து வருவதற்கும், பார்ப்பனன் பாடுபடாமல் வாழ்ந்து ஆதிக்கம் செலுத்தி வருவதற்கும் காரணம் என்பதையும் ஒப்புக்கொள்ளாதவர்கள் இல்லை இதைச்சரிப்படுத்த யார் என்ன செய்தார்கள்? எந்தக்கொள்கை காங்கிரஸ் திட்டத்தில் ஏற்படுத்தி இருக்கின்றார்கள்? அல்லது அன்னிய ஆட்சியை ஒழித்தபிறகாவது இதற்கு என்ன மார்க்கம் செய்வதாகக்காங்கிரஸ் தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள்? என்பதை கவனித்துப்பாருங்கள்.

சுயராஜிய உரிமை.

சுயராஜியத்தில் 'மதங்கள் ஒழிக்கப்படும்' என்றாவது 'மத ஆதிக்கங்கள் ஒழிக்கப்படும்' என்றாவது அல்லது அதுதான் இல்லாவிட்டாலும் 'ஜாதிகள் ஒழிக்கப்படும்'என்றாவது'ஜாதிப் பாகுபாடுகள் ஒழிக்கப்படும்' என்றாவது எங்காவது தீர்மானரூபமாகவாவது எழுதப்பட்டிருக்கின்றதா? எங்காவது, யாருடைய வாயினாலாவது சொல்லப்பட்டிருக்கின்றதா? என்று

Library's copy lacks p. 7-8.

கேட்கின்றேன். மற்றும் மதங்களையும் ஜாதிப் பாகுபாடுகளையும் காப்பாற்றப்படும் என்று உறுதிகூறப்பட்டுஇருக்கிறதா? இல்லையா? என்றும் கேட்கின்றேன்.

அதாவது மதத்தில் நடுநிலைமை வகிப்பதாகவும், வருணாச்சிரமம் காப்பாற்றப்படும் என்பதாகவும், ஜாதியில் எந்த ஒரு தனிப்பட்ட வகுப்பருடைய உரிமைக்கும் பங்கம் விளைவிக்கப்படமாட்டாது என்பதாகவும் எந்த மனிதனுடைய மாறுபட்ட அபிப்பிராயத்தையும் புண்படுத்தப்படமாட்டாதென்பதாகவுமல்லவா ஒவ்வொரு ஜாதிமத ஆதிக்கக்காரனுக்கும் உறுதி கூறப்பட்டு வருகின்றது. பிரஜா உரிமைத் திட்டத்தில் 14வதாக "மத விஷயங்களில் சர்க்காரார் தலையிடமாட்டார்கள்" அதாவது மதக்கொள்கைகளை மாற்ற முயற்சிக்க மாட்டார்கள் என்றும், 17வதாக "மாறுபட்ட அபிப்பிராயங் கொண்டோர் மனது புண்படும்படியாக எந்த காரியமும் செய்யமாட்டார்கள்" என்றும், அதாவது "பிராமணர்கள்" மனம் புண்படும்படி எதுவும் செய்யப்பட மாட்டாது என்றும் ஸ்பஷ்டமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றதா? இல்லையா?

ஆதியிலும், இந்தக்கொள்கைகளையேதான் நமது பார்ப்பனர் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டையும் ஒப்புக்கொள்ளச் செய்து இதையே அரசியலிலும் அனுசரிக்கும்படி சட்டமாக்கிக் கட்டாயப்படுத்தியதன் பயனாகத்தான் இதுவரை இந்தக்கவர்ன்மெண்டில்சரியான சீர்திருத்தம் ஏற்படுத்தமுடியாமலேயே இருந்து வருகின்றது. உதாரணமாக, சாரதாசட்டம் எடுத்துக் கொள்ளுங்கள். விவசாரிகள் சட்டம் எடுத்துக்கொள்ளுங்கள் சர்க்காரால் சட்டமாக்கப்பட்டும் ஒருசிலஜனங்கள் மனம் புண்படுகின்றதென்ற காரணம் கொண்டு அவர்களது முட்டுக்கட்டையாலேயே எதுவும் சரிவர அமுலுக்கு வரமுடியாமல் இருந்துகொண்டிருக்கின்றது. பார்ப்பனீயத்தொல்லை இல்லாதிருக்குமானால் அவை சரியாக அமுலில் இருக்கும். இவ்விஷயத்தில் இன்றும் சட்டத்தை மீறுகின்றவர்கள் ஜனங்களா? சர்க்காராரா? என்று கேட்கின்றேன். இந்நிலைமையுள்ள அரசாங்கத்திலும் 14, 17 பிரிவுகளை வைத்துக்கொண்டு எப்படி மாற்றக்கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள். பாமரமக்கள்-பகுத்தறிவற்ற மூடமக்கள் ஏமாறும்படி பேசிவிட்டால் போதுமா? உண்மையை பகுத்தறிவுடன் யோசித்துப் பார்க்க வேண்டாமா? என்று கேட்கின்றேன்.

மனம் புண்படாது

நடுநிலைமை வகிக்கும் சர்க்கார்-எந்த மனிதனுடைய மனதும் புண்படுத்தியாத சர்க்காரால் அது தன்னை எவ்வளவுதான் பூரண சுயேச்சை உடையது என்று சொல்லிக்கொண்டாலும் அதனால் நமக்கு என்ன பலன் உண்டாகக்கூடும்? வேண்டுமானால் பார்ப்பான் இன்றைய வாழ்வைவிட இன்னம் பலமடங்கு மேலாகவேவாழக்கூடும். ஆனால் தெருவில் நடக்க உரிமையில்லாத "பறையன்" நிலைமையும் சரீரத்தில் பாடுபட்டாகவேண்டிய "சூத்திரன்" நிலைமையும் என்னவாகும்? என்றுதான் கேட்கின்றேன். இப்பொழுதும் பறையன் வீதியில் நடந்தாலே எத்தனை பார்ப்பனர் மனம் புண்படும் என்பது உங்களுக்குத் தெரியாதா? ஒருவர் மனமும் புண்பட சகிக்காத சுயராஜியம் யாருக்குப் பயன்படக்கூடும்?

கோவில் பரிமுதல்

மற்றும் ஒரு சமயம் திரு ஜவஹர்லால் அவர்கள் பார்ப்பனரிடையே பேசும்போது 'யாருடைய, எந்த வகுப்பாருடைய உரிமையும் சுயராஜியத்தில் பரிக்கப்பட மாட்டாது' என்று சொன்னார். ஆனால் உடனேயே மற்றொரு கூட்டத்தில் பேசும்போது 'தீண்டாதாரை அனுமதிக்காத கோவில் பரிமுதல் செய்யப்படும்' என்று சொன்னார். இவற்றை திரு காந்தியவர்களும் ஆமோதித்து வருகிறார்.

அப்படியானால் மக்களின் மத, சாஸ்திர பழக்க வழக்க சம்பந்தமான உரிமைகளை எல்லாம் என்ன செய்வது? அவற்றை ஒழிக்க ஆரம்பித்தால் யாருடைய மனதுப்புண்படாதா? எந்த வகுப்பாருடைய உரிமையாவது இதனால் பாதிக்கப்படாதா? என்று யோசித்துப்பாருங்கள். இன்றைய நமதுநாட்டுவாழ்க்கையே மேல்கண்ட மதம், சாஸ்திரம், புராணம், பழக்க வழக்கங்களை ஆதாரமாகக் கொண்டுதானே இருந்து வருகின்றது? எனவே, இதிலிருந்து ஒருவனுடைய உரிமை என்றால் என்ன என்பதைக் கவனித்து முடிவு செய்ய வேண்டாமா? காங்கிரசில் மனித உரிமை என்பது மதக்கொள்கைப்படி ஏற்பட்ட உரிமையா? சாஸ்திரத்தில் ஏற்பட்ட உரிமையா? அல்லது இதுவரை அனுபவத்தில் பழக்க வழக்கத்தில் ஏற்பட்ட உரிமையா? அல்லது தேச ஆசாரத்திற்கு ஏற்பட்ட உரிமையா? மனித இயற்கைக்கு ஏற்பட்ட உரிமையா? எதைக் குறிக்கின்றது என்று கேட்கின்றேன்.

மத உரிமை என்றால் இந்து மதத்தின்படி மேளமடிக்கவேண்டும், இஸ்லாம் மதத்திற்கு மேளம் கூடாது. என்பது போன்ற உரிமைகளில் எதைக் காப்பாற்றுவது?

பார்ப்பனனுக்கும், பறையனுக்கும் உள்ள மதக்கொள்கை உரிமை, சாஸ்திர உரிமை, பழக்க வழக்க உரிமை ஆகியவைகள் என்ன ஆவது? மக்களுக்கு மக்கள், ஜாதிக்கு ஜாதி, ஊருக்கு ஊர் மாறுபட்ட தேசாச்சார உரிமை என்ன ஆவது? மனித இயற்கை உரிமை என்றால் பழக்க வழக்க மத உரிமை என்ன ஆவது? முதலாளிபாதுகாப்பும், ஜமீன்தாரன் பாதுகாப்பும், வருணாச்சிரம பாதுகாப்பும் என்ன ஆவது?

ஆகவே, இவர்கள் இருவரும் இதைக்கேட்கும் மக்களை முழு மூடர்கள் என்று கருதிக்கொண்டே இந்தப்படி அதாவது யாருடைய உரிமையும் காப்பாற்றப்படுமென்று ஒருபுறமும், பரிமுதல் செய்யப்படும் என்று மற்றொரு புறமும் பேசுகின்றார்கள் என்றே நான் கருதுகின்றேன். ஏனெனில்;

ஜன நாயகமா? ஏகநாயகமா?

முதலாவது திரு. காந்தியும், திரு. ஜவஹர்லாலும் கேட்கும் சுயராஜியம் ஜனநாயக சுயராஜியமா? ஏகநாயக சுயராஜியமா என்பதை முதலில் விளக்கப்படுத்திக் கொள்ளுங்கள். ஜனநாயகமானால் தீண்டாதவர்களை "கோவிலுக்குள் விடமாட்டேன், குளத்தில் விடமாட்டேன்" என்று சொல்லுகின்றவர்கள் யார்? பிறகு அந்தக் கோவிலையும், குளத்தையும் பரிமுதல் செய்கின்றவர்கள் யார்? என்று யோசித்துப்பாருங்கள். ஜனங்கள் விடமாட்டேன் என்று சொன்னால், அந்த ஜனப்பிரதிநிதி சர்க்கார், யார் மனதையும் புண்படுத்தாத சர்க்கார் கோவிலை எப்படி பரிமுதல் செய்ய முடியும்? கோவிலுக்குள் பறையனை விட இஷ்டப்படாத ஜனங்கள் இஷ்டப்படும் பிரதிநிதியை தெரிந்தெடுப்பார்களா? என்பதை யோசித்துப்பாருங்கள். ஜனங்கள் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்கும் இராஜியபாரம் ஜனநாயக ராஜிய பாரமாகுமா? மற்றும் இந்திய ஜனங்கள் தங்களுக்குள் இருக்கும் ஜாதி வித்தியாசத்தையும், தீண்டாமையையும் ஒழிப்பதற்கு ஜனநாயக சுயராஜியம் வேண்டுமென்றால் இதுபித்தலாட்டமா? அல்லவா? என்று யோசித்துப்பாருங்கள். இன்றைய தினம் தீண்டாமை ஒழிப்பதை யார் வேண்டாமென்கின்றார்கள்? இஸ்லாமானவர் ஆக்ஷேபிக்கின்றார்களா? கிறிஸ்தவர்கள் ஆக்ஷேபிக்கின்றார்களா? அல்லது பிரிட்டிஷ் அரசாங்கம் ஆக்ஷேபிக்கின்றதா? ஆரம்பத்திலேயே புரட்டு பேசும் சுயராஜியம் அதிகாரம் வந்தால் கொடுமை செய்யுமா? நன்மை செய்யுமா? இன்று தீண்டாமை அனுசரிக்கும் ஜனங்களுக்கு சர்வ அதிகாரம் வந்தால் தீண்டாமையை பலப்படுத்துவார்களா? தளர்த்துவார்களா? எந்த அரசாங்கத்தில் தீண்டாமை இருந்தாலும் தீண்டாமையை அனுசரிக்கின்றவர்கள் இன்று சுயராஜியம்கேட்கும் இந்துக்களே யொழிய பிறரல்ல.

ஆகவே இந்தமாதிரி வார்த்தைகள் மக்களை ஏய்க்கும் தந்திர வார்த்தை அல்லவா என்பதை யோசித்துப்பாருங்கள்.

எனது அனுபவம்.

சகோதரர்களே! காங்கிரசில் நான் இருக்கும்போது "காங்கிரசில் ஜாதி வித்தியாசம் பாராட்டக்கூடாது" என்று ஒரு தீர்மானம் காங்கிரஸ் கமிட்டியில் நானும் திரு. எஸ். இராமநாதனும் சேர்ந்து எங்கள் சொந்த செல்வாக்கில் நிறைவேற்றி வைத்தோம். ஆனால் உடனே திருவாளர்கள் சி. இராஜகோபாலாச்சாரி, டாக்டர் இராஜன், டி.வி.எஸ் சாஸ்திரி, என். எஸ். வரதாச்சாரி, கே. சந்தானம் முதலாகிய காங்கிரஸ் தலைவர்கள் என்கின்ற பார்ப்பனர்கள் இராஜினாமாச் செய்தார்கள் என்பது உங்களுக்கு தெரியாதா? என்று கேட்கின்றேன் காங்கிரஸ் பணத்தில் காங்கிரஸ் பக்தரால் நடத்திய குருகுலத்தில்தானே 'எல்லோரையும் சமமாய்வைத்து சாப்பாடு போடவேண்டும்' என்று நாங்கள் சொன்னதற்கு மேல்கண்ட தலைவர்களேதான் "அது அவரவர்கள் இஷ்டமேயொழிய யாரையும் கட்டாயப்படுத்தி யாருடைய மனதையும் புண்படுத்தி யாருடைய உரிமையையும் பறிக்கக்கூடாது" என்று பதில் சொன்னதோடு அதற்காக அந்த குருகுலமே கலைக்கப்பட்டுஇப்போது அதைஒரு பார்ப்பனர் தனதுசொந்த சொத்தாக அனுபவிக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்கின்றேன். இந்த விஷயத்தை திரு காந்தியும் ஒப்புக்கொண்டு அது அவரவர்தனி அபிப்பிராயம் என்று செட்டிமார் நாட்டு சுற்றுப்பிரயாணத்தில் சமாதானம் சொல்லவில்லையா? என்றே கேட்கின்றேன்.

இந்த மகாத்மாக்களும், தியாகிகளும், தலைவர்களும் இதற்குள்ளாக இப்போது புடம் போட்ட தங்கமாய் விட்டார்களா? அல்லது சலவை செய்த மக்களாய் விட்டார்களா? என்று கேட்கின்றேன். அல்லது இந்த விஷயங்கள் பொய்யா? என்று கேட்கின்றேன். அல்லது இன்றைய சுயராஜ்ய திட்டத்தில் பார்ப்பனருக்குள்ள இந்த உரிமை பறிக்கப்பட்டு விட்டதா? அல்லது இந்த "யாருடைய மனமும் புண்படக்கூடாது" என்கின்ற "தர்ம நீதி" எடுத்தெறியப்பட்டு விட்டதா? என்று கேட்கின்றேன்.

காங்கிரஸ் அங்கத்தினரில் ஜாதி வித்தியாசம் பாராட்டப்படுகிறதில்லை என்று ஒரு நண்பர் சொன்னார். என்னுடைய சொந்த அனுபோகத்தை இங்கு எடுத்துச்சொல்லுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். அதாவது நானும் உயர்திரு எஸ். சீனிவாசய்யங்காரும் காங்கிரஸ் பிரசார விஷயமாய் திண்டுக்கல்லுக்குப் போன போது ஒரு பார்ப்பனர் வீட்டுக்குப் போயிருந்தோம். அந்தக்காலத்தில் நான் வேறாக வைத்தே சாப்பாடுபோடப்பட்டேன். ஆனாலும் பகலில் சாப்பிட்ட எச்சிலை அப்படியே இருக்க அதன் பக்கத்தில் தான் இரவும் இலை போடப்பட்டு சாப்பிட்டேன்.

இது இப்படியிருக்க, மற்றொரு சமயம் நானும் தஞ்சை திரு. வெங்கிடசாமிபிள்ளையும் காங்கிரஸ் பிரசாரமாக பெரிய குளத்திற்குப் போன போதும் ஒருகாங்கிரஸ்பார்ப்பனர்வீட்டில் இறக்கப்பட்டோம். அப்போது காலை பலகாரம் சாப்பிட்ட எச்சில் இலைக்குப் பக்கத்தில் பகல் சாப்பாடும், பகல் சாப்பாடு சாப்பிட்ட எச்சிலைக்குப் பக்கத்திலும், காலை பலகாரம் சாப்பிட்ட எச்சிலைக்குப் பக்கத்திலும் இராத்திரி சாப்பாட்டுக்கும் இலை போடப்பட்டு எறும்புகளும் பூச்சிகளும், ஈக்களும் ஊரிக்கொண்டிருக்கவே சாப்பிட்டு வந்தோம் இவ

(தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

விருதுநகர் க்ஷத்திரிய பெண்பாடசாலை ஆண்டுவிழா.

திருமதி நீலாவதி அவர்களின் தலைமை உரை.

4000 ஜனக்கூட்டம். ஸ்டேஷனில் வரவேற்பு. 3000 பெண்கள் தனிக்கூட்டம்.

(நமது நிருபரிடமிருந்து,

விருதுநகர் க்ஷத்திரிய பெண் பாடசாலையின் பதினாறாவது ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு 6-7-31 திங்கட்கிழமையன்று பகல் 12மணிக்கு வரும் சௌத் ஈஸ்ட் மெயிலில் கொத்தமங்கலம் திருவாளர் ராமசுப்பிரமணியம் அவர்களும், திருமதி நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்களும் நண்பர்களும் வந்திறங்கினார்கள். ஸ்டேஷனில் இவ்வூர் முனிசிபல் வைஸ் சேர்மன் திருவாளர் பெ. சி. சிதம்பர நாடார் அவர்களாலும் மற்றும் பல கனவான்களாலும் மாலை சூட்டி வரவேற்கப்பட்டு திருவாளர் M.S.P செந்தில்குமாரு நாடார் அவர்கள் கட்டிடத்திற்கு அழைத்து வரப்பெற்றார்கள். பின்பு மாலை நான்கு மணிக்கு இந்து நாடார் க்ஷத்திரிய பெண்பாடசாலைக்கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப்பெற்றது. கூட்டத்திற்கு திருவாளர்களான ஈ. வெ. ராமசாமி W.P.A. சௌந்திரபாண்டியம், V. V. தனுஷ்கோடி, BA., V. V. ஷண்முகம், V. V. ராமசாமி, M S P. செந்தில்குமாரு நாடார் பெ. சி. சிதம்பரநாடார், K. V. அழகர்சாமி, "சண்டமாருதம்" ஆசிரியர் அ. பொன்னம்பலனார், சுலோஜனா அம்மையார், முனிசிபல்சேர்மன் T.M.M. சங்கரலிங்க நாடார், உடுமலைப்பேட்டை முத்துசாமி நாடார், டாக்டர் கிருஷ்ணசாமி, டாக்டர் நாச்சியப்பா, வக்கீல் V. A. கந்தசாமி நாடார் B. A. B L., அமெரிக்கன் குருசாமி நாடார், சிவந்திசிதம்பரநாடார், ஓ.பெ.பா. பெரிய கருப்ப நாடார், ஹெட்மாஸ்டர் மாசிலாமணிநாடார். S. S. S மாணிக்கவாசகம், B. A, S. உத்தண்டம், P. C. முருகையாநாடார், M. S. P. பெரியசாமிநாடார், V. A. M. அருணாசலம், ரத்தினநாடார், தனுஷ்கோடிநாடார். M. K. M. அண்ணாமலைநாடார், P. P. V. திருவண்ணாமலை, மிஸிஸ் திருவண்ணாமலை R. சிவகாமி, A. பாக்கியம் அம்மையார், முனிசிபல் மானேஜர் T. C, K. P. கந்தசாமி நாடார் ஆகியவர்களும் மற்ற உத்தியோகஸ்தர்களும் கனவான்களும் சுமார் 2000 பெண்மணிகளும் சுமார் 2000 ஆடவர்களும் பாடசாலை மண்டபத்திலமர்ந்திருந்தனர். மண்டபத்திலும், வழிகளிலும் கொடிகளாலும், தோரணங்களாலும், வளைவுகளாலும் அலங்கரிக்கப் பெற்றிருந்தன. சரியாக 4-30மணிக்கு திருவாளர் பெ. சி. சிதம்பர நாடாரவர்கள் திருமதி நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்களை தலைமைவகிக்கும்படி கேட்டுக்கொள்ள V. V. தனுஷ்கோடி B. A. அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

பின்னர் தலைவருக்கு மாலை சூட்டப்பெற்று இரண்டு சிறுமிகளால் வாழ்த்துப் பாடப்பெற்று திருவளர்செல்வி எம். சந்திர காந்தியால் இந்து நாடார் க்ஷத்திரிய பெண்பாடசாலை மாணவிகள் சார்பாக உபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்பெற்றது. காரிய தரிசியால் 16வது ஆண்டு அறிக்கை வாசிக்கப்பெற்றதும் தலைவர் முன்னுரையாகப் பேசியதன் சாரம் பின் வருமாறு:—

திரு. நீலாவதியம்மையார் முன்னுரை.

போன்புமிக்க பெரியோர்களே! சகோதர சகோதரிகளே!!

இன்று நமக்கு ஓர் சந்தோஷகரமான நாளாகும். இப்பாடசாலையின் 16-வது ஆண்டு விழாவிற்குத் தலைமை வகிக்கத் தகுதி வாய்ந்தவர் பலரிருந்தும் என்னைத்தலைமை வகிக்கக்கேட்டுக்கொண்டும் உபசாரப்பத்திரத்தில் புகழுரை பல கூறியிருப்பதுமானது நாங்கள் ஒரு சிறிய அளவு செய்த தொண்டின் காரணமாய் ஏற்பட்ட அன்பினால் ஆகியதென்றே எண்ணுகிறேன். பெண்பிறவி 'பாவமான' பிறவி என்று கூறும் இந்நாட்டில் மேடைமீதிருந்து பேசும் பாக்யம் கிடைத்ததற்கு முதலில் நன்றி செலுத்த வேண்டுவது அவசியமாகும். 'ஆயிரக்கணக்கான பாவமெல்லாம் ஒருங்கு திரண்டு பெண்ணாகப்பிறந்திருக்கிற' தென்று நூல்களில் கூறப்பட்டிருப்பதை பார்த்து நீங்கள் கூறுவீர்களேயானால் அப்பெண்கள் வயிற்றிலிருந்து பிறந்த ஆண்களாகிய நீங்கள் 'எத்தனைகோடி பாவங்களுக்கு ஆளாவீர்'களென்பதையோசித்துப்பாருங்கள். எம்மதிகொண்டு பெண்பிறவியைப் பாவப்பிறவி என்று கூறினார்களோ யாரறிய முடியவில்லை. எவர் எதைச் சொன்னாலும் அப்படியே நம்புகிற மக்கள் மலிந்த இந்நாட்டில் அவ்வார்த்தை அடிக்கடி சொல்லப்பட்டு வருகிறது. 'கேழ்வரகில் நெய்வடிகிறதென்றால் கேட்பாருக்குமதி எங்கு போயிற்று' என்றுதான் நான் கேட்கிறேன். பெண்களுக்குக் கல்விக்கண்களைக் கட்டிவிட்டு அவர்களைப்படு முட்டாள்களாக்கி அடுப்பூதவே பிரமன் அவர்களைப் படைத்தான் என்று சொல்லும் சொல் எவ்வளவு ஒழுங்கற்ற சொல் என்பதை உற்று நோக்குங்கள். அப்படி பிரமனோ மற்ற எவரோ கூறினால் அவர்களை சுக்கல் சுக்கல்களாகச் செய்யவேண்டுவதே அறிவின் கடமையாகும். அடுப்பூதும் பெண் என்ற சொல் நாட்டிலில்லாமல் செய்யவேண்டும் (கரகோஷம்.) பெண்கள் படித்தால் கள்ளப்புருஷனுக்குக் கடிதம் எழுதி விடுவாள் என்று சொல்லப்படுகிறது. கள்ளப்புருஷனின்கபடத்தனத்தை கண்டிக்கவேண்டியது ஆண்களாகிய உங்களது வேலையேயாகும். விபசாரத் தொழிலுக்கு மார்தட்டி நிற்கும் வஞ்சக ஆண்களுக்கே புத்திமதி கூறுங்கள். (கரகோஷம்) விபசாரமனைத்திற்கும் ஆண்களே ஆஸ்பதமாயிருந்தும் தங்களுக்குத்தான் படிப்புத்தெரியுமென்ற ஒன்றின் காரணமாக வஞ்சகமாகத் துவேஷிக்கத் தொடங்கிவிட்டார்கள். பெண்கள் ஒரு சொத்து என்றும் அவர்கள் இரண்டொரு உதவிக்குத்தான் ஆகக்கூடியவர்கள் என்று ஆண்கள் நினைத்தால் அவர்களின் கெட்ட எண்ணத்தை உணர்ந்து கொள்ளுங்கள். பெண்களை அடிமையாக்கி வைத்திருக்கும்வரை சுண்டக்காய் இராஜியம்கூட அடைய முடியாது என்பதை தேசியவாதிகள் என்போருக்கு கூறவிரும்புகிறேன். பெண்மக்களை வஞ்சகப்படுத்த என்று எண்ணினீர்களோ அன்றோடு பாழடைந்தது என்று எண்ணிக்கொள்ளுங்கள். உங்கள் தேவைக்குப் பெண்ணென்றும், தேவையில்லாததற்குப் பாவப்பிறவி என்றும் கூறுவதுதானா ஒழுங்கு? எனகேட்கின்றேன். கருவேப்பிலையை சமையலுக்கு உபயோகிப்பார்கள். ஆனால் சாப்பிடும் பொழுது நன்றி மறந்து எடுத்தெறிந்து விடுவார்கள். அது போலத்தானே இன்று பெண்களை நடத்தப்படுகிறது. கருவேப்பிலையை உபயோகிக்கும் நிலையில் பெண்களை நடத்திக்கொண்டு சுதந்திரம் பேசினீர்களேயானால் அது அறியாமையைத்தான் காண்பிக்கிறதேயன்றி வேறல்ல (கரகோஷம்.) பெண்கள் அடுப்பூதுதல் கூடாது என்று கூறவில்லை. அடுப்பூதினாலும், படித்தூதினால், அது சுகாதார முறையில் பூச்சி புழு இல்லாமல் சமையல் ஆக்கப்பட்டிருக்கும். படிக்காத பெண்கள் சாமான் கெட்டு விடுமே என்ற காரணத்தால் பழைய வஸ்துக்களைப்போட்டு சமயலைப் பாழாக்கி விடுவார்கள். பெண்கள் அடுப்பூதத்தான் வேண்டும் என்று சட்டம் செய்வீர்களேயானால் அது தவறு என்றுதான் கூறுவேன். படிப்பு ஆண்களுக்குத்தான் வரும் என்று சொன்ன பெரியார்கள் அதனுண்மையை இப்பொழுதுதான் கண்டு வருகிறார்கள். தமிழ் நாட்டுப்பெரியார்களில் ஒருவராகிய சுப்பிரமணிய பாரதியார் 'கண்களிரண்டினிலொன்றை குத்தி, காட்சி கெடுத்திடலாமோ' என்றும் 'பெண்களறிவை வளர்த்தால் வையம் பேதமையற்றிடும் காணீர்' என்றுகூறியிருப்பதை கவனியுங்கள். கல்வியில்லாமல் உலகில் மனிதர் மனிதராக வாழமுடியாது! சுதந்திரமே இன்னதெனத்தெரியாத தாய் மார்களிடம் வளரும் குழந்தைகளுக்கு எவ்வாறு சுதந்திர உணர்ச்சி உண்டாகுமென்பதை உணருங்கள். தமிழ் நாட்டு வீரர்களே! தேச சேவை செய்ய, சமூக சேவை செய்ய, நாடு முன்னேற்றமடைய முன் வாருங்கள் என்று கூறினால் எவ்விதம் முன்வரமுடியும்? அடிப்படையில் சரியாக வேலை நடைபெறவில்லை. ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாகவும், கல்வி, [illegible] கம் ஆகியவைகளில் வெற்றிபெற்ற பிறகு நீங்கள் சுதந்திர வாதிகள் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறீர்களா? அல்லது அத

தொடர்ச் 15ம் பக்கம் பார்க்கசி,

குடி அரசு

ஈரோடு 1931 ஞு ஜூலைமீ 12உ

சுயராஜியமும், சுதேச சமஸ்தானமும்.

இந்தியாவுக்கு வரப் போகும் சுயராஜியம் என்பதும்' சீர்திருத்த மென்பதும் இப்போதிருப்பதைவிட இன்னும் மோசமான அடிமை விலங்காகவே வந்து முடியப் போகின்றது.

இந்தியாவுககு வந்த சைமன் கமிட்டியானது இந்தியாவின் உண்மை நிலைமையையும், தேவையையும் அறியத் தொடங்கியதால், நமதுபார்ப்பனர்கள் அதற்கு இடம் கொடுத்தால் தங்களுக்கு ஆபத்து வந்துவிடுமெனக் கருதி, ஏதாவது ஒரு தந்திரம் செய்து கமிஷன் விசாரணையை வெற்றியடையாமல் செய்யவேண்டும்என்ற எண்ணத்தின்மீது அநேக சூட்சிகள் செய்தார்கள். அவையொன்றும் தமிழ்நாட்டுமக்களிடம் பலிக்காமல்போகவே, கடைசியாகச் சத்தியாக்கிரகம் என்பதாகஆரம்பிக்கச்செய்து ஒருபக்கம் கலகம் செய்தார்கள். இவற்றிற்கெல்லாம்காரணம் காங்கிரஸ்என் பதானபார்ப்பன ஸ்தாபனமொன்றுஅவர்களுக்கு கை ஆயுதமாய் இருப்பதால் எதுவும் செய்ய முடிகின்றது என்பதுடன் மற்ற மக்களுக்கும் அதனால் பல தொல்லைகள் ஏற்பட முடிந்தன. இதனாலேயே சென்ற வருஷம் சத்தியாக்கிரகம் என்னும் பேரால் (பார்ப்பனர்) தொல்லை நிகழ்ந்தது எனினும், மற்றொரு பக்கம் சமதர்ம உண்மைக் கொள்கைகள் முன்னிலும் அதிகமாகத் தலைகாட்ட ஆரம்பித்து விட்டது.

இந்த நிலைமையில் அரசாங்கத்தார்வருணாச்சிரம தருமத்திற்கு ஆதரவுகொடுத்தால் சமதர்மக்காரர்கள் தொல்லையும்,மற்றநேசதேசஅரசர்கள் இகழ்ச்சியும் ஏற்படுவதாய்க் காணப்படுகிறது. சமதர்மத்திற்கு ஆதரவு கொடுப்பதானாலோ, தங்கள் போக போக்கியங்களை விட்டுவிட வேண்டியதாக ஏற்படும்போல் காணப்படுகின்றது. ஆகவே, இந்தக் கஷ்டத்தில் இருந்து தப்புவதற்குப் பிரிட்டிஷார் பார்ப்பனர்களுடன் கலந்தே ஒரு தந்திரம் செய்யவேண்டியதாய்ப் போய்விட்டது.

அதாவது, தங்கள் (பிரிட்டிஷார்) நிலைமையையபந்தோபஸ்தாய் இருக்கும்படிபார்த்து,வருணாச்சிரமக்காரர்கள்நிலைமையும்கெடாமல், ஏதாவது வழிகள் கண்டுபிடித்து, அதை இந்தியர்கள் ஒப்புக்கொள்ளும்படி செய்து, சரிப்படுத்திக் கொண்டு வரவேண்டியது என்கின்ற ஒப்பந்தத்தின் மீது மற்ற விஷயங்களில் எந்த விதமானாலும் சரி என்கின்ற முறையில்ஒரு புதிய வழி கண்டு பிடித்தார்கள்.

அதாவதுஇந்தநிலைமையில்இந்தியப் பார்ப்பனரும், பிரிட்டிஷாரும்சேர்ந்து, இருவர் நிலைமையும் காப்பாற்றக்கூடிய சுதேச சமஸ்தான மன்னர்களையும், சீர்திருத்தத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வதென்றும், காங்கிரஸ், அதாவது திரு. காந்தி இதற்குச் சம்மதித்தால் எந்தவித அரசியல் கொள்கையை வேண்டுமானாலும் ஒப்புக்கொள்வதென்றும் முடிவுகட்டி, இராஜியின் மூலம் முதலில் திரு காந்தியை இதற்குச் சம்மதிக்கும்படி சரிபடுத்திக் கொண்டார்கள். திரு. காந்தியும் வர்ணாச்சிரமம் காப்பாற்றப்படவேண்டி ஐக்கிய அரசியல் திட்டத்தையும், அதில் சுதேச மன்னர்கள் கலப்பையும் ஒப்புக்கொண்டபின்பு தங்களுக்கு இனி எவ்வித ஆபத்தும் இல்லை என்கின்ற நிலைமையில்வெகுபந்தோபஸ்தாக இருக்கின்றார்கள்.

காங்கிரசுக்கும், யார் என்ன சமதர்மம் பேசினாலும், சுதேச அரசர்கள் வருணாச்சிரமத்தைக் காப்பாற்றுவதோடு சமதர்மத்திற்கும் விரோதமாயிருப்பார்களாதலால் எப்படியானாலும் அவ்விருவருக்கும் பயமில்லை என்கின்ற நிலைமையிலிருக்கின்றது.

இந்தத் தைரியத்ினாலேயே திரு. காந்தி வருணாச்சிரமம் பேசுவதும், திரு. ஜவஹர்லால் சமதர்மம் பேசுவதுமாயிருப்பதுடன் திரு. ஜவஹர்லால்பேச்சை கண்டிப்பவர்களுக்குக் காந்திபேச்சைக்காட்டி மயக்குவதும்,திரு. காந்தி பேச்சைக் கண்டிப்பவர்களுக்கு திரு. ஜவஹர்லால் பேச்சைக் காட்டி மயக்குவதுமான வேலையில் ஆட்களைப் பிடித்துப் பிரசாரம் செய்து, காங்கிரசை ஆதரிக்கச் செய்து வரவும் பாடுபடுகின்றார்கள்.

ஆகவே இதிலிருந்து இனி வரப்போகும் சுயராஜியம் வருணாச்சிரம இராஜ்யமாகவும், சமதர்மத்திற்கு முட்டுக் கட்டையான இராஜியமாகவும்தான் ஏற்படப் போகின்றது என்பது உறுதி! உறுதி!! உறுதி!!!

நமது சுதேச மன்னர்களை அடியோடு ஒழிக்கவேண்டும் என்று நாம் கருதிக்கொண்டிருக்கும் இக் காலததில்—இயற்கையாகவே அவர்கள் அழிந்து, ஒழிந்து போகசகலசௌகரியமுமஏற்பட்ட இந்தச்சந்தர்ப்பத்தில், காங்கிரசானதுஅவர்களுக்குச்சிரஞ்சீவிப் பட்டத்தைக் கொடுக்க முனைந்து கொண்டிருக்கின்றது.

ஆகவே பார்ப்பனீய சூட்சி வெற்றி பெறப்போகின்றது.

ஏனெனில்நமதுசுதேசசமஸ்தான அரசர்கள் என்பவர்கள் பார்ப்பனீயத்தைவிட மோசமானவர்கள். பார்ப்பனீயமோ பிச்சை கேட்பதின் மூலம் பாடுபடுபவர்களின் செலவத்தைக் கொள்ளை கொள்வதாகும். சமஸ்தானமோ பாடுபடுபவர்களின் செல்வத்தை அடித்து, உதைத்துப் பிடுங்கிக்கொள்வதேயாகும்.

பார்ப்பனர்களுக்கோ நமது நாட்டைப்பற்றிய எவ்விதப்பொறுப்பும் இல்லை. அதுபோலவே சமஸ்தானங்களுக்கும் நாட்டைப்பற்றியஎவ்விதகவலையுட இல்லை.

இந்திய சமஸ்தானங்களில் நடக்கும் அக்கிரமங்கள் போலவும், அவர்கள் செய்யும் அதிக்கிரமங்கள் போலவும் இந்த உலகத்தில் வேறு எங்குமே காணமுடியாது.

உதாரணமாக இரண்டொரு விஷயங்களை மாத்திரம் சொல்லுவோம். இவைகள் தக்க ஆதாரத்தின்மீதே சொல்லப்படுவதாகும்.

அதாவது இந்திய சமஸ்தான அரசர்கள் அரசியல் நடவடிக்கையையும், ஐரோப்பிய சமஸ்தான அரசர்கள் அரசியல் நடவடிக்கையையும் பற்றிய சில குறிப்புகளை குறிப்பிடுவோம்.

இந்தியாவிலுள்ள அரசர்கள் தங்களுடைய சொந்த செலவுக்கென்றுசமஸ்தானமக்கள் வரிப்பணத்திலிருந்துபெறும்தொகையானது அவர்களது சமஸ்தானமொத்தவரும்படியிலிருந்து $\frac{11}{16}$ $\frac{1}{8}$ 3|16 $\frac{1}{4}$,, $\frac{1}{3}$, $\frac{1}{2}$ வீதம் பங்குபாகத்திற்குக் குறைவில்லாமல் பெற்றுக் கொள்ளுகிறார்கள். உதாரணமாக நம்மரசர்களென்று சொல்லப்படும் திருவிதாங்கூர் மகாராஜா தேசவரும்படியில் 17ல் ஒருபாகமும் (அதாவது மாதம் 1,00,000 ரூபாயும் மைசூர் மகாராஜா 14ல்ஒருபாகமும்(அதாவது மாதம் 2,00,000 ரூபாயும் ஐதராபாத் நவாபு பதின்மூன்றில் ஒரு பாகமும் (அதாவது மாதம் 4,00,000 ரூபாயும்) தங்கள் சொந்த செலவுக்காகப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

பரோடா அரசரும் தனது வரும்படியில் 13ல் ஒரு பாகமும், காஷ்மீர், பிகானீர், இந்தூர் முதலிய அரசர்கள் 5ல் ஒரு பாகமும், மற்றும் சில ஆழ்வார் முதலிய அரசர்கள் 3ல் ஒரு பாகமும், சிலர் வரும்படியில் சரி பகுதியுமாக தங்கள் சொந்த செலவுக்கெனப்பெற்று, அனுபவித்துக்கொண்டு வருகின்றார்கள். ஆனால் ஐரோப்பிய அரசர்களோ, அவர்கள் பெறும் சொந்தச் செலவுப் பணத்தைக் கணக்குப் பார்த்தால், இந்திய அரசர்களைவிட எத்தனையோ மடங்கு குறைந்த அளவாகத்தான் பெற்றுவருகிறார்கள்.

உதாரணமாகச் சமீபத்தில் பட்டத்திலிருந்து துரத்தப்பட்ட ஸ்பெயின் தேசத்து அரசர் தனது தேச வரும்படியிலிருந்து 500ல் ஒரு பாகமும், ஜப்பான் அரசர் 400ல் ஒரு பாகமும், டென்மார்க் அரசர் 300ல் ஒரு பாகமும், இட்டாலி அரசர் 500ல் ஒரு பாகமும், நெதர்லேண்ட்ஸ் அரசர் 600ல் ஒரு பாகமும, நார்வே அரசர் 700ல் ஒரு பாகமும், பெல்ஜிய அரசர் 1000ல் ஒருபாகமும், நமது சக்ரவர்த்தியும், இங்கிலாந்து அரசருமான ஐந்தாவது ஜார்ஜ் அரசர் 1600ல் ஒரு பாகமும்தான் பெற்று வருகிறார்கள். அப்படி யிருந்தும், ஜனங்கள் அரசர்களைப் பட்டத்தைவிட்டு இறக்க வேண்டுமென்று அந்நாடுகள் முயற்சி செய்துகொண்டு வருகின்றன. ஆனால் 2ல் ஒரு பாகமும் 3ல் ஒரு பாகமும், 8ல் ஒரு பாகமும் கொள்ளை யடிக்கும் நமது நாட்டு அரசர்களை இன்னமும் பட்டத்தில் வைத்திருப்பதை சகித்துக் கொண்டிருப்பதோடல்லாமல், இந்திய அரசாங்கத்திலும் அவர்களுக்கு ஆதிக்கம் கொடுக்க வேண்டுமென்று நமது "பூரண சுயேச்சைக்கொள்கை கொண்ட காங்கிர"சானது சத்யாக்கிரகம் செய்து வருவதைப் பார்த்தால் நமது நாட்டு அரசியல் ஞானமும், யோக்கியதையும் நன்றாய் விளங்கும்.

நிற்க, 10லட்ச ரூபாய் வரும்படியுள்ள ஒரு அரசர் வருஷம் ஒன்றுக்கு 4,20,010 ரூபாய் வீதம் தனது சொந்த செலவுக்கு எடுத்துக் கொள்வதோடு, இவ்வளவும் போறாமல் 15,00,000 ரூபாய்

கடனையும் வைத்துக்கொண்டு முழுச் செலவையும் விபசாரத்திற்கே பயன் படுத்திக் கொண்டிருப்பதோடு, பல தாசிகளையும் இராணிகளாகக் கலியாணம் செய்து கொண்டிருப்பதோடில்லாமல், ஒரு தாசி இராணியின் சகோதரனும், சொந்தக்காரர்களும் அரசாங்கத்தில் செல்வாக்குள்ள ஆதிக்கக்காரர்களாயிருந்து கொண்டு, அரசாங்கத்தை ஆட்டி வருகின்றார்கள்.

மற்றொரு அரசர் 2,19,000 ரூபாய்வரும்படியுள்ள சமஸ்தானத்தில் 1,36,000 ரூபாய் வீட்டுச் செலவுக்கென கொடுக்கப்பட்டு வருகின்றார். இது தவிர அவருடைய குதிரை லாயத்திற்கென வருஷம் 14,000 ரூபாயும் செலவு செய்யப்பட்டு வருகின்றது, ஆனால் அந்த இராஜியத்தின் சுகாதாரத்திற்காக 5000 ரூபாய்தான் வருஷத்தில் செலவு செய்யப்படுகின்றது.

மற்றும், இந்தூர் சமஸ்தானத்தைப்பற்றி 14—6—27ல் வெளியான "சர்வென்ட்ஸ் ஆப் இந்தியா" என்னும் பத்திரிகையில் காணப்படும் குறிப்பாவது:—

"இந்தூர் சமஸ்தான வாசிகளுக்கு 1926ம் ஆண்டானது மிக முக்கியமான ஒரு வருடமாகும். ஏனெனில், அந்த ஆண்டில்தான் சிம்மாதனத்தை வகிப்பவர்களில் ஓர் பெரிய மாறுதலேற்பட்டது. துக்கோஜிராவ் அவ்வாண்டின் ஆரம்பத்திலேயே தனது சிம்மாதனத்தைத் துறந்துவிட்டார். அவருக்குப் பதிலாக அவருடையகுமாரர் எஸ்வந்ராவ் என்பவர் மகாராஜவாக முடிசூட்டப்பட்டார். அவ்வித மாறுதலால் எத்தகைய வித்தியாசங்கள் ஏற்பட்டபோதிலும் கூட, அரண்மனைச் செலவில் மட்டும் சிறிதுகூட வித்தியாசமேற்படவேயில்லை. 1924-25 வருஷத்தில் அரண்மனை செலவென 21,28,257 ரூபாயாக இருந்ததானது, அடுத்த வருஷத்திலேயே 23,22,924 ரூபாயாக உயர்ந்து விட்டது. அவ்வருஷத்திய வருமானம் 1,28,10,887 ரூபாய்தான் ஆகின்றது. ஆகையினால், அரண்மனை செலவுமட்டும் கணக்கிட்டால் 100க்கு 18-விழுக்காடாக ஏற்படுகின்றது. அரண்மனை செலவென்று குறிப்பிட்டிருக்கும் இதரகணக்கையும் நாம் இத்தொகையுடன் சேர்த்தோமானால், அப்பொழுது அரண்மனையின் மொத்த செலவு இன்னுமதிகமாகவே யிருப்பதைக்காணலாம். ஆனால், அந்த செலவெல்லாம் பல விஷயங்களுடனும் சேர்க்கப்பட்டு விட்டதால், இதுமட்டும் தனியாக காட்டப்பட்டிருப்பதே இத்தொகையாகின்றது. அத்தகைய அரண்மனை செலவு என்னும் தலைப்பின் கீழ் "லால்பாக் அரண்மனை வேலை" என்பதற்குச் செலவான தொகையையும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிக்க அவசியமாகும். இதனுடைய செலவுமட்டும் சுமார் ஆறு லட்சமாகின்றது ஆனால், ஆச்சரியகரமாகவே, 'மகாராஜாவின் வாசஸ்தான ரிப்பேர்செல' வென்பதாககுறிப்பிட்டு, இச்செலவையும் மராமத்து இலாகாவின் செலவோடு சேர்க்கப்பட்டிருக்கின்றது. உண்மையில் அரண்மனை ரிப்பேர்செலவு அவ்வருஷம் ஏறக்குறைய 6000ரூ.தானாகின்றது. இம்மாதிரியாகவேதான் வேட்டையாடுவதினிமித்தமேற்பட்டசெலவு சுமார் 12,000 ரூபாயும் "பாரஸ்ட்ஸ்" என்னும் தலைப்பின்கீழ் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்விதமாக செலவிடப்படும் பணங்களை எல்லாம் நாம் மொத்தமாகச் சேர்த்து கணக்கிட்டுப் பார்த்தோமேயானால், அப்பொழுது அவை சமஸ்தான மொத்த வரும்படியில் நூற்றுக்கு 18-பங்கு அல்லவென்றும், ஆனால், நூற்றுக்கு 22 பங்கு வீதமெனவும் ஏற்படும். இம்மாதிரியாக 'அரண்மனை செலவு' என்னும் தலைப்பின்கீழ் அபரிமிதமான பணம் செலவிடப்படுவதால்தான், அச்சமஸ்தானத்திலுள்ள, மக்கள் விருத்தியடைவதற்குரிய கல்வி நிலையங்களும், சுகாதார நிலைமையும் கவனிக்கப்படாமலிருக்கின்றன'.

மற்றொன்று.

"பிரிட்டிஷாரின் பாது காப்பில், இந்திய அரசர்கள்" அதாவது "Indian Princes Under British Protection" என்னும் புஸ்தகம், பக்கம் 147ல் திரு சட்கர் என்பவர் கீழேகானுவதுபோலுரைத்திருக்கின்றார்.

"தனது அரசாங்கத்தின் வரும்படியில் 100க்கு பத்துவீதம் தான் தன்னுடைய சொந்த செலவுக்கென எடுத்துக்கொள்ளுவதாகக்கூப்பாடு போட்டுவரும் பிகானீர் மகாராஜா அவர்கள், தான் வாசம் செய்யும் அரண்மனையைப் பழுதுபார்ப்பதாலேற்படும் செலவையும் "சிவில் ஒர்க்ஸ்" என்னும் தலைப்பின்கீழ், அரசாங்க செலவோடு சேர்த்து விடுகின்றார். 1926-27வது வருடத்திய பிகானீர் அரசாங்க அறிக்கையில் 'பழுதுபார்க்கவேண்டிய' தென்னும் தலைப்பின்கீழ் 47 இனங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கென்று 40.0000 பவுனும்செலவிடப்பட்டிருக்கின்றது. ஆனால், அவ்வறிக்கையில் காணப்படும் 47 இனங்களிலும், 4 இனங்கள் மட்டுமேதான் அரசாங்கப்பொதுக் கட்டடங்களாகும். அவைகளைப்பழுதுபார்ப்பதற்காக ஏற்பட்ட செலவோ மொத்த தொகையில் 100-க்கு 5 வீதம்தான் எனவுமேற்படுகின்றது."

மற்றுமோர் சான்று.

1925-26வது வருடத்திய ஜாம்நகர் சமஸ்தானத்தின் அறிக்கையை கவனித்தோமேயானாலும் இம்மாதிரியேதான் "சிவில் லிஸ்டு" என்னும் தலைப்பின் கீழ் செலவானமொத்தத்தொகை40000 பவுன் அல்லது 4,80,000 ரூபாய் என, அதாவது கட்டடங்களைப் பழுதுபார்த்ததனாலேற்பட்ட செலவென்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. "அரண்மனை செலவு" என்னும் தலைப்பின்கீழ் அரசரின் சொந்தசெலவுக்கென மட்டும் 1,25,000 பவுன் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டின் மொத்தத்தொகையும் 1,65,000 பவுன்களாகின்றது. அதாவது சமஸ்தானத்தின் மொத்தவரும்படியில் 100க்கு 20 வீதமாகின்றது. இத்துடனின்றி, "அரண்மனைச் செலவு" என்னும் தலைப்பின் கீழ் காணப்படுபவைகளைத்தவிர்த்து மீண்டும் தனியாக மோட்டார் செலவெனவும், அரண்மனைச் செலவுமென்பதாகவும் குறிப்பிட்ட வகைகளில் செலவானது 2,00,000 பவுனாகும். இதையும் அரசருடைய சொந்த செலவில் சேர்ப்போமேயானால் அப்பொழுது அவருடைய செலவுமட்டும் மொத்தம் பிரதி வருடமும் 3 75,000 பவுன் என அதாவது சமஸ்தான வருமானத்தில் சரிபாகம் தனது சொந்த செலவுக்காக அரசர் செலவிடுகின்றாரெனவும் ஏற்படுகின்றது. 1926-27 வருடத்திய அறிக்கையை நாம்பார்ப்போமேயானால், அப்பொழுது நாமின்னும் இதைவிடப் பன்மடங்கு பிரமிப்படைய வேண்டிவரும், அரசருடைய சொந்த செலவைக் குறிப்பிடப்பட்டிருக்கும் 6,00,000 பவுனிலும் 2,00,000 பவுன் எதிர்பாராத செலவு என்பதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது".

மற்றுமோர் அரசாங்கத்தில், (பெயரைப்பற்றி நாம் அதிகக்க கவலைப்பட வேண்டியதில்லை,) சில வருடங்களுக்கு முன்பதாகத்தான் முதன் முதலாக வரவும்-செலவும் கணக்கிடப்பட்டது. அந்த சமஸ்தானத்தின் அதிபர் தனது சொந்த செலவைக் குறைப்பதானது தன்னுடைய கௌரதையைக் குறைத்துக்கொண்டதாக வேற்படும் என நினைத்துக்கொண்டிருந்ததால் அவருடையசமஸ்தானத்தின் வரவு-செலவின் விபரமே ஒருவருக்கும் புலப்படாமலிருந்தது. பிறகு, அவரைப் போலுள்ள சகோதர அரசர்களால் தூண்டப்பட்டு, இப்பொழுதான் முதலாவதாக அவருடைய வரவு-செலவுகணக்கெடுக்கப்பட்டது;

கடைசியில் மொத்தம் பார்த்தபொழுது, அந்த அரசாங்கத்தின் மொத்தவருமானம் ஒருகோடி ரூபாயிக்கும் சற்று அதிகமெனவே ஏற்பட்டது. இந்த அறிக்கையானதுதான்யாவரும்பின்பற்றக்கூடியதெனவும் கூறப்பட்டு வந்தது. அவ்வறிக்கையை சுருக்கிக் கூறவேண்டுமானால், கீழே காணுவது போலதான் உரைக்க வேண்டும்.

அதாவது:-

"அரசாங்கத்தின் மொத்த வருமானம் 125 லட்சம். இந்த 125 இலட்சத்தில் 50 இலட்சம் "சம்பளம்" என்னும் தலைப்பின் கீழ் செலவிடப்படுவதற்கு ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டது. இத்தலைப்பின்கீழ் அரசாங்கத்திலுள்ள பட்டாளத்திற்குச் செலவாகும் 20 லட்சமும் சேர்ந்ததேயாகும். அவ்வப்போதேற்படும் செலவினிமித்தமென 15-லட்சம் தனியாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த 15 லட்சத்திலும் 10 இலட்ச ரூபாய் தனியாக அரண்மனை (அரசருடைய) செலவுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டது. படிச்செலவென்பதாகவும், வேலையிலிருந்து நீங்கியவர்களுக்கு உபகாரச்சம்பளமென்பதாகவும் 5 லட்ச ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டது. இவைகள் போக மீதி யிருக்கக்கூடிய 55-லட்சரூபாயும் அரசருடையசொந்தசெலவுக்கென ஒதுக்கப்பட்டு விட்டது. ஆகையினால், அவ்வப்போதேற்படும் செலவு, படிச்செலவு, உபகாரச்சம்பள செலவு என்பதாக அரசாங்கத்திற்கும்மொத்தம் 40 லட்சமே செலவிடப்படுகின்றது. இந்த 40 லட்சத்திலும் கல்விக்காக செலவிடப்படும் 2 லட்சமும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அவ்வப்போதேற்படும் செலவுக்கு என ஒதுக்கி வைக்கப்பட்ட 15 லட்

சத்தில் அரண்மனை (அரசருடைய) செலவுக்கு என ஒதுக்கி வைத்திருக்கும் 10 லட்சமும், வருமானத்தில்செலவுபோக மீதியேற்படும் 55 லட்சமும், ஆக 65 லட்ச ரூபாய் அரசரின் செலவுக்கென ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. பொருளாதாரத் துறையைக் கவனித்துக்கொண்டு வரும மாணுக்கர்களுக்கு 125 லட்ச ரூபாய் வரும்படியுள்ள ஒரு சமஸ்தானத்தில், 65 லட்ச ரூபாய் சமஸ்தான அதிபதியின் சொந்த செலவுக்கெனவும், 40-லட்சம் அரசாங்க சிவில் நிர்வாகத்திற்கெனவும், 20 லட்சம் ரூபாய் அரசாங்கமில்டேரி நிர்வாகத்தின்செலவுக்கெனவும் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதானது ஒரு சமயம் ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால், இந்த சமஸ்தானத்தில் கல்விக்கென இரண்டு லட்ச ரூ மட்டும்செலவிடப்படுவதானது இதைவிட இன்னும் பன்மடங்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்''.

இவர்களது தர்பார் செலவு விஷயங்கள் இவ்விதமிருப்பதொருபுறமிருக்க, இவர்கள் அரசநீதி, அரசாட்சி செய்யும் அரசியல் நீதி எப்படியிருக்கின்றதென்று பார்த்தோமானால், ஒன்னே முக்கால் கோடி ரூபாய் வரும்படியுள்ள ஒரு இராஜபுதன அரசாங்கத்தில 3,25,000 ரூபாய் மோட்டாருக்காக செலவு செய்யப்பட்டு வருகின்றது. ஆனால்கல்விக்கோ 2,75,000 ரூபாய் மாத்திரமே செலவு செய்யப்பட்டு வருகின்றது.

தவிர தலையொன்றுக்கு 15 ரூ. வீதம் வரி வசூல் செய்யும் பிகானீர் அரசாங்கம் கல்விக்குத்தலையொன்றுக்கு 5 அணா வீதமே செலவு செய்கின்றது. தலையொன்றுக்கு 20 ரூபாய் வீதம் வரி வசூல் செய்யும் நவநகர் அரசாங்கம், தலையொன்றுக்கு 6 அணா வீதமே கல்விக்காக செலவு செய்கின்றது. தலையொன்றுக்கு 10 ரூபாய் வீதம் வரி வசூல் செய்யும் ஆள்வார் அரசாங்கம் தலையொன்றுக்கு 3 அணா வீதமே கல்விக்காக செலவு செய்கின்றது. சுகாதாரத்திற்கோ தலையொன்றுக்கு 1 அணா வீதமே செலவு செய்கின்றது.

ஆனால், இந்தியாவில் தலையொன்றுக்கு 6-4-0 ரூபாய் வீதம் வரி வசூல் செய்யும் இந்திய அரசாங்கம் கல்விக்காகத் தலையொன்றுக்கு 9 அணா வீதம் செலவு செய்கின்றது.

இவை "பிரின்சுலி இந்தியா" என்னும் பத்திரிகையில் காணப்படும் விபரங்களாகும்.

இந்திய அரசர்களின் நிர்வாகம் இந்தப்படி பல இருந்தாலும், இவர்களுடைய ஒழுக்கங்களைப் பற்றி யோசிப்போமானால் ஒரு அரசர் தன்னுடைய அதிகாரியொருவருக்கு எழுதிய கடிதத்தைப்பார்த்தாலே விளங்கும் அதாவது:—

"பிரியமுள்ள............க்கு உம்முடைய லீவ் (ரஜா) விண்ணப்பம் கிடைத்தது. ரஜா அனுமதிக்கப்பட்டது. உன்னுடைய கடிதத்தில் காணப்படும் உடுப்படிகளுடன் நீர் சீக்கிரம் திரும்பிவர வேண்டும். அவைகள் மிக்க அழகாயிருக்கவேண்டும். அவைகளென்மனதிற்குத் திருப்தியை அளிக்குமானால் அப்பொழுதான் உம்மை இராஜபக்தியுள்ள ஓர் சிப்பந்தியாகக்கருதுவேன்.

உம்முடைய அன்பான
ராஜா சாகிப்"
என்று ஒரு கடிதம்
எழுதியிருக்கிறார்.

இந்த ரஜா விண்ணப்பம் எழுதிய சிப்பந்தி அந்தசமஸ்தானத்தில் ஒரு பெரிய அதிகாரியேயாகும். இதைப்படிக்க, எத்தனையோ அரசர்களுடைய நடவடிக்கைகள் நமக்கு வெளிப்படையாகவும், வெளிப்படையான இரகசியமாகவும் தெரிந்துவருகின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஆகவே, இப்படிப்பட்ட அரசர்களைக் கொண்டுவந்து நம்முடைய இந்திய அரசாங்கத்தில் ஒன்றுசேர்த்து விட்டால் இந்தியாவில் எந்தவிதமான சீர்திருத்தத்தை எதிர்பார்க்க முடியும்? என்பதை காங்கிரஸ் பக்தர்கள் தான் யோசிக்கவேண்டும்.

இவர்களோடு நமது நாட்டு பார்ப்பனர்களும், ஜமீன்தார்களும், மற்றும் நமது நாட்டு பெரும் மிராசுதாரர்களும், மைனர்களும், வக்கீல்களும், முதலாளிகளும் கலந்து கொண்டால் நாட்டில் எப்படி சமதர்மமும், பொருளாதார சமத்துவமும் ஏற்படுத்த முடியுமென்பதை சுயராஜ்யபக்தர்கள் தான் விளக்கவேண்டும்.

ஒரு சமயம் 'சுயராஜ்யம் வந்து விட்டால் சுதேச அரசர்களையும் கூட சேர்த்து, திருத்தப்பாடுசெய்யலா'மென்று சிலர் சொல்லக்கூடும். இது வார்த்தைக்கு அலங்காரமானதும், மூடர்களுடைய செவிக்கு இன்பமானதாகவுமிருக்கலாம். எல்லா மனிதர்களுக்குமே ஓட்டுரிமை இருப்பதாயிருந்தாலும், இந்த அரசர்கள் தேர்தலில் தங்களுடைய ஆட்களை நிறுத்தி, 10 லட்சக்கணக்கான பணங்களை செலவு செய்ய முன் வந்து, அவர்களுக்குதவியாக நமது நாட்டு ஜமீன்தாரர்களையும், மிராசுதாரர்களையும், பார்ப்பனர்களையும், முதலாளிகளையும் சேர்த்துக்கொண்டு, இப்போதைப்போலவே கூலி தேசபக்தர்களைக்கொண்டு, பிரசாரம் செய்யச்செய்தால், எப்படிப்பட்ட பிரதிநிதிகள் வரக்கூடுமென்பதைப்பற்றியும், எப்படிப்பட்ட நிர்வாகம் நடைபெறுமென்பதைப்பற்றியும் நாம் நமது வாசகர்களுக்கெடுத்துக்கூற வேண்டுமா? என்று கேட்கின்றோம்.

உலகம் இயற்கையாகப் போகும் போக்கானது இப்பொழுது எவ்வளவோ முன்னேற்றத்தையும், விடுதலையுணர்ச்சியையும், கண் விழிப்பையும் மக்களுக்குத் தானாக அளித்துக்கொண்டுவருமிந்த சமயத்திலிம்மாதிரி புதிய ஆபத்தொன்று முளைத்து, மக்களை இன்னும் அடிமைப்படுத்தத்தக்க நிலைமை யேற்பட்டிருப்பதானது, அதுவும் "பூரண விடுதலை"யின் பேராலும், "சுயராஜ்யத்தி"ன் பேராலும் யேற்பட்டிருப்பது மிகவும் துக்கப்படத்தக்க விஷயமேயாகும் என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

திருவாங்கூர் கோட்டாறு சுயமரியாதை வாசகசாலை ஆண்டு விழா.

தலைவர்

W P A சௌந்திரபாண்டியன் M L C

திருவாங்கூர் ராஜியம், நாகர்கோயிலைச் சேர்ந்த கோட்டாறு சுயமரியாதை வாசகசாலையின் இரண்டாவது ஆண்டுவிழா உயர்திரு டபுள்யூ. பி. ஏ. சௌந்திர பாண்டியன் அவர்கள் தலைமையில் 4-7 31ல் நடத்த ஏற்பாடு செய்திருந்தபடி திருவாளர்கள் சௌந்திர பாண்டியன் விருதுநகர் வி. வி. இராமசாமி, ஈ. வெ இராமசாமி, விருதுநகர் திருவண்ணாமலை, கே. வி. அழகர்சாமி. பொன்னம்பலம், சுலோசனா ஆகியவர்கள் திருநெல்வேலி ஜங்ஷனில் 4௳ காலையில் வந்து சேர்ந்தவுடன் திருநெல்வேலி திருவாளர்கள் இராமநாதன், குற்றாலலிங்கம் முருகேசம் மற்றும் பலரால் வரவேற்று மோட்டார் வழியாய் 50 மைல் தூரமுள்ள நாகர் கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். வழியில் ஆரமுனையில் மக்கள் கூட்டமாய் காத்திருந்து வரவேற்று உபசாரம் கூறியனுப்பினார்கள்.

பிறகு அங்கிருந்து சரியாய் 12 மணி சுமாருக்கு நாகர்கோவில் சென்றதும், அங்கு அநேகர் ஆவலாய் வரவேற்று வாசகசாலைத் தலைவர் திரு. திரவியம் அவர்களது புதிய சௌந்திர விலாஸ் பங்களாவில் ஜாகை ஏற்படுத்தி, பகல் சாப்பாடு செய்விக்கப்பட்டபின் சுமார் 3-மணிக்கு ஊர்வலமாக வாத்தியங்களுடன் வாசகசாலை ஆண்டு விழா முனிசிபல் சமரசவீதியில் போடப்பட்ட சமதர்ம மண்டபம் என்னும் பெரிய பெரியதொரு கொட்டகைக்கு எல்லோரையும் அழைத்துச் சென்றார்கள். அது சமயம் கொட்டகையானது ஏற்கனவே 2000 பேர்களுக்கு மேலாகவே நிறைப்பப்பட்டிருந்தது. சற்று நேரம் ஆவதற்குள் கொட்டகையிலிடம் போதாமல், கொட்டகையின்சுற்றுப்புறதட்டிகள் பிரிக்கப்பட்டு நான்கு புறமுமாக சுமார் 3000 பேர்களுக்கு மேலாகவே கூடிவிட்டார்கள். வீதிகள் எல்லாம் தட்டிகள் கட்டி, தோரணங்கள்கட்டி இருந்ததோடு, கொட்டகையில் சுயமரியாதை வாசகங்கள் கொண்ட பல தட்டிகள் கம்பங்கள் தோறும் கட்டப்பட்டிருந்தன. கொட்டகையில் பல படங்களும், கடிகாரமும் கட்டிட வளைவு தட்டிகளும் தொங்கவிடப்பட்டிருந்ததானது கண்களை கவரும் காட்சியாய் இருந்தது. கூட்டத்தில் இருந்த முக்கியஸ்தர்கள்.

திருவாளர்கள் எம். சிவதாணு பிள்ளை, சி. பசுபதி பெருமாள் செட்டியார் (பேங்கர்) பி. சிதம்பரம் பி. ஏ, பி. எல்., கா. சேகு தம்பிபாவலர், கே. நாராயணப் பெருமாள் நாடார் எம் எல். சி., எஸ். திரவியம் நாடார்பி ஏ., இ. வலியபெருமாள் நாடார் (மானேஜர்) டாக்டர் மத்தியாஸ் எம் பி பி. எஸ், டாக்டர் பப்பு எம். பி. பி எஸ்., ஞான சிகாமணி முன்சீப் (ரிட்டயர்டு) சி. தங்கையா நாடார், சி. எஸ். வேலாயுதன் பி. ஏ, ஏ. சங்கரப்பிள்ளை பி. ஏ பி. எல். பி. வேலாயுதன் முதலியார், கே. சுப்பையா பண்டாரம், ராம சுவாமி நாயுடு (முனிசிபல் கவுன்சிலர்) சு கோலப்பன் பணிக்கர், ரா. ம. கந்தசாமி பணிக்கர், சி. எம். காந்திதாஸ். இ. கந்தசாமி, சி. தாணுமலையப்பெருமாள் பிள்ளை (முனிசிபல் கவுன்சிலர்) எஸ் சண்முகம், சு. ஸ்ரீ கிருஷ்ணப்பெருமாள் உபாத்தியாயர், ப. பொன்னையா நாடார், ஆறுமுகம் பிள்ளை [ஆசிரியா], தாணுபிள்ளை [சுசீந்திரம் தலைமை ஆசிரியர்]. காந்திராமன் பிள்ளை, ஷியார்மனைவியார், நல்லசிவன், சி. ந. சுப்பிரமண்யம், குமாரசாமிநாடார், சி. சொ. சிவசிதம்பரம், எம். சுந்தரம் ஏ. சிதம்பர குற்

மூலம். பத்மநாபபிள்ளை, நடராஜ பிள்ளை [ஆசிரியர்], வைரமுத்து தேவர் [ஆசிரியர்] எம். சிதம்பரதாணு பிள்ளை [ஆசிரியர்], முத்துகருப்ப பிள்ளை, சி. வ. முத்துக்குமாரசாமி பிள்ளை, சுப்பிரமணிய செட்டியார் [ஆசிரியர்], சித்திரபுத்திரன் [ஆசிரியர்], வி. பிச்சையா [ஆசிரியர்], எஸ். அந்தோணி [ஆசிரியர்], திருமதிகள் எஸ். சொர்ணம், எம். ராமலெக்ஷுமி, தா. பகவதி,

மிஸிஸ். பல்பு, மிஸ். பல்பு, ராமலட்சுமி, சுலோசனா, பி. லட்சுமி, எஸ். காளியம்மாள், மிஸிஸ் பி. சிதம்பரம் [சிவஞானம்மாள்], ஷண்முகத்தாய், மகாலட்சுமி, பார்வதி, செல்லம்மாள், நாச்சியார், பொன்னம்பலத்தாய், ஆ. முத்துகிருஷ்ணன் [வீரசெல்லூர்] பூ. திரவியம். அ. சரவணை, ஆ. சுப்பையா, ந. பெருமாள், ஆ. இ. பெருமாள் ஆகியவர்கள்.

கூட்டம் துவக்கப்பட்ட உடன் சுயமரியாதைப் பாட்டுகள்பாடப்பட்டதும் உயர்திரு வக்கீல் பி. சிதம்பரம் அவர்கள் திரு. சௌந்திர பாண்டியன் அவர்களை விழாவுக்கு தலைமை வகிக்கக்கேட்டுக்கொண்டார்.

முறையே ஆமோதித்தபிறகு தலைவருக்கும், திரு. ஈ. வெ. இராமசாமிக்கும் உபசார பத்திரங்கள் வாசித்துகொடுக்கப்பட்டன. இருவரும் பதில் சொன்னபிறகு காரியதரிசியால் வாசகசாலை அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்டது. பிறகு சாத்தான்குளம் 'பண்டிதர் திரு. அ. இராகவன் அவர்கள் 'நாஸ்திகர் யார்'? என்பது பற்றியும் திருவாளர் அ. பொன்னம்பலனார் அவர்கள் 'விதவைமுழக்கம்' என்பது பற்றியும், திருவாளர் கே. வி. அழகர்சாமி அவர்கள் 'இழக்கும் மேதைகளும்' என்பது பற்றியும், நாகர்கோவில் திருவாளர் கே. நாராயணப்பெருமாள் பி. ஏ. எல். டி., அவர்கள் 'கோவில்' என்பது பற்றியும் பேசிய பிறகு சற்றுநேரம் ஓய்வு கொடுத்து சிற்றுண்டி அருந்தியபின் திரு. ஈ.வெ. இராமசாமி அவர்கள் 'காங்கிரசும் சுயமரியாதையும்' என்பது பற்றி 2-மணி நேரம் பேசினார். (அது மற்றொரு பக்கம் காண்க)

பிறகுதலைவர் முடிவுரைகூறியதும் வந்தனோபசாரம் சொல்லி கூட்டம் முடிவெய்தியது. பின் அன்றிரவு கழிந்தபின் மறுநாள் காலையில் நாடார் சமூகத்தாரின் அழைப்புக்கு இணங்கி பக்கத்துகிராமத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். அங்கும் வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டு பள்ளிக்கூடத்தில் ஒரு சிறு கூட்டம் கூட்டப்பட்டு திருவாளர்கள் பாண்டியனுக்கும் ஈ. வெ. இராமசாமிக்கும் இரண்டு உபசாரபத்திரங்கள் நாகர்கோவில் நாடார்சமூக சார்பாய் வாசித்துக்கொடுக்கப்பட்டபின் அவைகளுக்கு பதில் சொல்லப்பட்டதும் திரு கே. வி. அழகர்சாமி அவர்கள் அந்த ஊர் கோவிலை பள்ளிக்கூடமாக மாற்றி பூஜை வழக்கங்களை நிறுத்தியிருந்த பெருமையைபற்றி எடுத்துச் சொல்லப்பட்டபிறகு அங்கிருந்து கோட்டையிலிருந்து சேர்ந்து பிறகு அங்கிருந்து எல்லோருமாக கன்னியாகுமரிக்கு அழைத்துச்செல்லப்பட்டு சரியாய 12 மணிக்கு திரும்பி அழைத்துவரப்பட்டார்கள். சாப்பாடு ஆனதும் 2 மணிக்கு எல்லோருமாக அங்கிருந்து திருநெல்வேலிக்குப் புறப்பட்டார்கள், வழியில் பணக்குடியில் ஒரு பெரிய கூட்டம் நின்று எல்லோரையும் மறித்து இறக்கி சிற்றுண்டி அளித்து உபசாரமொழிகள் கூறி சில வார்த்தைகள் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டபின் சுருக்கமாக பதில்சொல்லிவிட்டு, கூட்டம் பெரியதாகவும் ஏமாற்றமடைந்ததாகவும் காணப்பட்டதால் திருவாளர்கள் அழகர்சாமியையும், பொன்னம்பலனாரையும் கேட்டுக்கொண்டு அங்கு இருத்திவிட்டு மற்றவர்கள் நேரே திருநெல்வேலி வந்து மாலை 5-மணி வண்டியில் விருதுநகருக்கு இரவு 9-மணிக்கு வந்துசேர்ந்தார்கள். மறுநாள் திருவாளர்கள் பொன்னம்பலனார், சுலோசனா, அழகர்சாமி ஆகியவர்கள் விருதுநகர் வந்து பெண்கள் பள்ளிக்கூட பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டார்கள்.

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ற்று முன்னேற விரும்புகிறீர்களா? ஆண்கள் பெண்களுக்கு சுதந்திரம் கொடுப்பதாகக்கூறுகிறீர்களேயல்லாமல் உண்மையில் நீங்கள் கொடுக்கவில்லை. ஏதோசில சந்தர்ப்பத்தில் அவர்களாகவே பெற்றுவிடுகிறார்கள். சாதிமத சமயகட்டுப்பாட்டில் கட்டுண்ட சுதந்திரவாதிகளே! உங்களால் என்னசெய்ய முடியுமென்று எண்ணுகிறீர்கள்? தாய்மார்களே! இந்தப்பெண்பாடசாலையில் 500க்கு அதிகமாக பெண்களும் இவ்வூரில் இன்னும் மற்ற பெண்பாடசாலைகளில் கல்வி கற்கும் 500 பெண்களும் பிற்காலத்தில் நாட்டிற்கு பொருத்த உபயோகமான தாய்மார்களாவார்களென்பதைத் தெரிவிக்கிறேன். இன்னும் உங்கள் வீடுகளிலுள்ள குழந்தைகளையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புங்கள். என்ன செலவானாலும் அதற்காக உபயோகியுங்கள். ஜோசியம், மாந்திரீகம், அர்ச்சனை, அபிஷேகம் ஆகியவற்றிற்கு செலவிடும் திரவியங்களை இதற்குக் கொட்டுங்கள். தங்கள் தங்கள் குழந்தைகளுக்கு நகை செய்து போடுவதற்குப் பதிலாக கல்வி செய்து வையுங்கள். பெண்கள் படிக்கவேண்டுமென்றால் 'விளக்கு மாற்றுக்கு பட்டுக் குஞ்சம் எதற்கு' என்று ஒரு பட்டபழமொழி கூறப்படுகிறது. நாம் விளக்குமாறு என்பதை ஒப்புக்கொண்டாலும்கூட, சுத்தமில்லாத ஒன்றை சுத்தம் செய்யும் என்று என்பதைக்கூட சொல்பவர்கள் அறியவில்லையா? மிருகங்களுக்கு இருக்கும் சுதந்திரம்கூட புண்ணிய இந்தியாவில் வாழும் பெண்களுக்கு இல்லையா? இரத்த ஓட்டமுள்ள சுயமரியாதைப்பெண்ணுக்குசுதந்திரஉணர்ச்சிவரும் என்பதைக்கூட பாவம் மறந்துவிட்டனர் பலர். 'ஆலகால விஷத்தையுநம்பலாம், ஆற்றையும் பெருங்காற்றையு நம்பலாம், கோலமாமதயானையை நம்பலாம், கொல்லும்வேங்கைப் புலியையும் நம்பலாம், காலனுர்விடு தூதரை நம்பலாம், கள்ளர் வேடர் மறவரை நம்பலாம், சேலைகட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே' என்று ஒரு பெரியார் கூறியிருக்கிறார். அந்த மகான் இந்தச்சுயமரியாதைகாலத்தில் இல்லாமல் போய்விட்டார். சேலை கட்டிய மாதரை நம்பக்கூடாதென்றால் கவிலி அல்லது ஜௌன் கட்டிய மாதரை நம்பச் சொல்லுகிறாரா? இங்கு இருக்கும் நீங்கள் யாராவது கோலமாதயானையையும், வேங்கைப் புலியையும், கட்டிக்கொள்ளுவீர்களென்று அப்பெரியார் எண்ணினார்போலும்! (சிரிப்பு) 'எண்ணறக்கற்றும் எழுத்தறவாசித்தாலும், பெண்புத்தி பின்புத்தி' என்று ஒரு திவ்ய பழமொழி கூறப்படுகிறது. பழமொழி நன்றாக இருக்கிறதற்காக அப்படியே ஒப்புக்கொண்டுவிடாதீர்கள். 'எண்ணறக்கற்றும், எழுத்தறவாசித்தாலும் ஆண்புத்தி வீண்புத்தி' என்று அழகான பழமொழி கூறிவிடுவோம். சொல்லும் வார்த்தையில் ஒழுங்கு, உண்மை, வீரம், உயர்தன்மை இருக்கிறதா? என்று கவனிக்கவேண்டும். 'பேதமை என்பது மாதர்க்கணிகலமா'ம் நல்ல அணிகலம்!! இதற்கு பல உதாரணங்களைகள் கூறப்படுகிறது. சீதை மானைப்பிடித்துத்தரும்படி இராமனிடம்கூற, இராமன்முடியாதென்றுகூறியும், தன் பேதமையால் பிடித்துக் கொடுக்கச்சொல்லிபல கஷ்டங்களுக்கு ஆளாக்கினாளாம். இது பிடிவாதமா? பேதமையா? என்று கேட்கிறேன். சுப்பிரமணிய பாரதியார் 'பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவிபேணி வளர்த்திடும் ஈசன், மண்ணுக்குள்ளே சிலமூடர் நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்.' என்று கூறியதை இப்பொழுது தான் உண்மையென உணர்கின்றனர். பெண்கள் அடிமை, தாழ்ந்தவர்கள் என்று சொல்லும் சொல்லை வேரோடு அழித்தொழிக்கவேண்டும். இன்னும் பெண்கள் முன்னேற்றத்திற்கு என்னென்ன வேண்டுமோ அவை அனைத்தையும் செய்ய ஆரம்பிக்கவேண்டும்"

என்று கூறியதும் 10 சிறுமிகளால் கும்மி அடிக்கப்பெற்றது.

எ. டி. தமயந்தியால் "மாதர் கடமை" என்னும் பிரசங்கம் செய்யப்பட்டது. அப்பிரசங்கத்தில் "ஆண்கள் புத்தி, பலம், ஆண்மை ஆகியவற்றில் சிறந்தவர்களென்று கூறப்படுகின்றதென்றும், பேதை என்று சொல்லப்படும் பெண்களை ஏமாற்றிப்பிழைப்பவர்கள்தானா புத்தி, பலம், ஆண்மை ஆகியவற்றில் சிறந்தவர்களென்றும் இங்கு தலைமை வீற்றிருக்கும், ஸ்ரீமதி நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்கள் செய்யும் பேருதவிக்கு வந்தனமளிக்கிறேன்" என்றும் கூறப்பெற்றது.

பின்னர் கே. இ. ராஜலட்சுமியால் ஆர்மோனியத்துடன் உயர்ந்த பாடல்கள் பாடப்பெற்றன. பல சிறுமிகளால் "விஷமந்திரம்" என்று ஓர் நாடகம் நடித்துக்காட்டப்பட்டது. மற்றும் சில மாணவிகளால் கோலாட்டம், கிரியாப்பாட்டு, கும்மி ஆகியவை நடைபெற்றதும் தலைவரால் சிறுமிகளுக்கு பரிசுகள்வழங்கப்பெற்றது. பின்னர்,

K. V. அழகர்சாமி.

சகோதரி! சகோதரர்களே !!

இம்மாதிரி ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைப்பது உங்களுக்கும், எனக்கும் அருமைதான். நாம் இது போன்ற கூட்டங்களைக்கூட்டுவதன் நோக்கமென்னவெனின் ஒவ்வொரு நிமிஷமும் முன்னேறுவதற்காகவே. துருக்கியில்கமால்பாஷா வினால் ஏற்பட்டிருக்கும் சீர்திருத்தம் அளவிடற்கரியதாகும். அங்கு மூன்று பெண் நீதிபதிகள் இருக்கின்றார்கள். அங்கோரா போன்ற இடங்களிலுள்ள கோர்ட்டுகளில் ஏராளமான உத்தியோகங்களை வகித்து வருகிறார்கள். துருக்கிஸ்தானம் பெரியஸ்தானமென்றால் காரணமென்ன? அங்கு 800 பெண்கள் நீதிபதிகளாகப்படிக்கிறார்கள். முக்காடு போடும் சமூகம் இவ்வளவு சீர்திருத்தம் அடைந்த பிறகுங்கூட நம் நாடு வாளாவிருப்பது மிகுந்த வெட்கமானதாகும் என்று கூறியதும் தலைவர் முடிவுரையின் சாரம்:—

முடிவுரை.

பெரியோர்களே! இதுவரை நடைபெற்ற கும்மி, கோலாட்டம், சங்கீதம், நடிப்பு ஆகியவற்

றை நேரில் கண்ட நாம் சந்தோஷப்படாமலிருக்க முடியாது. இந்தச் சிறுமிகளை இப்படிக்கு தயார் செய்திருந்தால் இங்கு இந்த நிகழ்ச்சி நடந்திருக்கவே முடியாது. மிஸ் அமிஜான்ஸன் என்ற 22 வயதுள்ள ஆகாயவிமானப்பெண்ணைப்பற்றி உங்களிற் சிலர் அறிந்திருக்கலாம். ஆகாய விமானம் ஓட்டிய பெண்ணின் சவுக்கடி பெண்களைப்பேதையர் என்று கூறிய வருக்குக் கிடைத்தால் என்ன பிழையாகும்?. நமது தாய்மார்களுக்கு ஆகாய விமானம் இன்னதென்றே தெரியாது. குழந்தையிலிருந்தே கோழைத்தனத்தில் வளர்ந்திருக்கிறார்கள். இனிவரும் குழந்தைகளையும் கோழைத்தனத்தில் வளர்க்கிறார்கள். ஆண் கல்வியை 10 வருஷம் நிறுத்தி வைத்தால் அறிவு யாருக்கிருக்கிறதென்று பார்த்துவிடலாம். பிறகு ஆண்கள் முன்னேற்ற சங்கம் வைக்கவேண்டி வந்துவிடும். (கரகோஷம்) பெண்களுக்கு மணச்சுதந்திரம் கொடுக்கவேண்டும். புரோகிதனை அழைத்து 10 பொருத்தம் பார்த்துச் செய்யும் மணங்கள் ஆயிரத்திற்கு ஒன்றுகூட த்தேறவில்லை என்பதை இங்கிருக்கும் அனைவரும் அறிவீர்கள். 18 வயதிற்குள் மணம் செய்து கொள்ளல் கூடாது. மணச்சுதந்திரம் இல்லையேல் ஒன்றும் உருப்படியாக வழியில்லை. எனக்கு இங்கு பேசும் சந்தர்ப்பம் கிடைத்ததென்றால் அது மணச்சுதந்திரந்தான். இம்மாதிரி மணச்சுதந்திரம் கிடைக்காவிடில் நான் எந்த மூலையில் இருந்திருப்பேன் என்பதை யோசித்துப்பாருங்கள். (கரகோஷம்) பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளை அவசரப்பட்டு சிறுவயதிலேயே கிழவர்களுக்கும், மூடர்களுக்கும் மணஞ்செய்து விடாதீர்கள். அவைகள் எங்கள் கண்ணுக்குப்பாழுங்கிணறுகளாகத் தோன்றுகின்றன. கண்ணோடு கல்யாணம் பார்க்கவேண்டுமென்றால் தங்கள் குழந்தைகள் போல் பொம்மை செய்து வைத்து, மணம் செய்து, கண்ணாலே பார்த்துவிட்டு செத்துப் போகலாமல்லவா? (கரகோஷம்) சமீபத்தில் கும்பகோணத்தில் நடைபெற்ற பார்ப்பனக் கூட்டத்தில் 'இந்நாட்டில் பெண்களால் செய்யப்பட்டிருக்கும் தீர்மானம் மேல்நாட்டு நாகரீகமுடைய பெண்களால் செய்யப்பட்டிருப்பதால் சரியில்லை' என்பதாகக் கூறப்படுகிறது. பெண்கள் செய்திருக்கும் தீர்மானங்கள் கல்வி கற்ற திறமையுள்ள பெண்களால் தான் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, கும்பகோணம் தண்ணீர் வாங்கிப் பிழைக்கும் மக்களைப் போன்றவர்களால் செய்யப்பட்டதல்ல. (ஷேம்! ஷேம்!!) பெண்களின் சுதந்திர உணர்ச்சியை இவர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து ஒன்றுமே செய்ய முடியாது. ஆண்கள் பெண் அடிமை என்ற உணர்ச்சியைப்போக்கிக்கொள்ள வேண்டும். ரஷ்யாவின் ஒரு பகுதியில் ஆண்களைப் பெண்கள் அடிமையாக்கி யிருக்கிறார்களாம். அங்கு ஆண்கள் முன்னேற்றச் சங்கம் வைக்கப்படுகிறது. அங்கு என் ஆண்களுக்குப் பின் புத்தியாகிவிட்டதோ தெரியவில்லை. (கரகோஷம்) எவரும் கல்வி கற்றிருந்தால் முன் புத்தி தானேவரும். பெண்களுக்குச் சொத்துரிமையும், கல்வியும் கிடைக்கத்தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பதோடு இப்பெண்பாடசாலையை நடத்தும் அன்பர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் எனது நன்றியைச் செலுத்துகின்றேன்.

பின்னர் திரு V. V. தனுஷ்கோடி B. A. அவர்களால் வந்தனம் கூறி மாலை சூட்டப்பெற்று இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

மறுநாள் மாலை 5 மணிக்கு இவ்வூர் திரு எ. பி. சங்காலிங்க நாடார் அவர்களின் பெண்பாடசாலை மண்டபத்தில் பெண் மக்களுக்காக திரு. நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்களால் ஓர் உபந்நியாசம் செய்யப்பெற்றது. சுமார் 3000 பெண்களுக்கதிகமாகவே மண்டபத்தில் நிறைந்திருந்தனர். மாதர்களுக்கு வேண்டியமுக்கிய சீர்திருத்தங்களெல்லாம் கூறப்பெற்றன. இரவு 7-30 மணிக்கு கூட்டம் இனிது நிறைவெய்தியது.

(10ம் பக்கத் தொடர்ச்சி)

த்தையெல்லாம் லட்சியம் செய்யாமல் தான் காங்கிரசில் உழைத்தேனென்றும் காங்கிரசில் ஜாதி வித்தியாசம் பாராட்டப்படுவதில்லை என்பதை நான் ஒப்ப முடியாது என்பதற்காக இதை சொல்லிக்கொள்ளுகின்றேன்.

ஜாதி போய் விட்டதா?

இவ்வளவு தூரம் போவானேன்? இன்றும் காங்கிரசிலுள்ள காங்கிரஸை ஆதரித்துப் பிரசாரம் செய்யும் மற்றும் "காங்கிரசும் மகாத்மாவும் தான் இந்தியாவுக்கு விடுதலை, சமத்துவம் வாங்கிக்கொடுப்பவர்" என்று சொல்லும் பார்ப்பனரில் 100க்கு 5 பேராவது ஜாதி வித்தியாசம் விட்டவர்களா? விடத்தயாராயிருக்கின்றவர்களா? என்று கேட்கின்றேன். பார்ப்பனரல்லாதார்களில் 100க்கு 10 பேராவது ஜாதி வித்தியாசம் விட்டவர்களா? என்று கேட்கின்றேன். முடிவைப்பற்றி பயமென்ன? 'வாயிக்கு ருசியான சாப்பாடு எனக்கு கிடைத்தாலும் சாப்பிடலாம்' என்கின்ற ஒன்றிரண்டு "துறவி"களைப் பார்த்து முடிவு கட்டலாமா? என்று கேட்கின்றேன்.

சுயராஜ்யம் வந்த காலத்திலும் இந்த மனிதர்கள் தானே இந்த நாட்டு மக்களாயிருக்க முடியும்? இவர்களது பிரதிநிதிகள் தானே ஜனநாயக ஆட்சி செலுத்துவார்கள். ஆகவே இந்த நிலையில் என்ன மாறுதலை ஏற்படுத்திவிட முடியும்?

பொருளாதாரம்

மற்றும் பொருளாதாரத் துறை யில் செல்வவான்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் தவிர மற்றவர்களுக்கு என்ன நன்மை செய்ய சுயராஜ்யத்தில் திட்டமிருக்கின்றது என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். பணக்காரன் பணத்தைப்பிடுங்கி மற்றவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுக்கும்படி நான் கேட்கவில்லை. தேசத்துப் பணமெல்லாம் சர்க்காருடையதாய் தானால் ஆகட்டும். இல்லையானால் பணம் ஒரே பக்கம் போய்ச் சேருவதற்கு மார்க்கமில்லாமலிருக்கவேண்டும் என்று நான் சொல்லுகின்றேன். இன்றையதினம் பணக்காரன் பணத்தைப் பிடுங்கி ஏழைகளுக்குப் பங்கு போட்டுக்கொடுத்து விட்டால் இந்த ஏழை நாளைக்கு சமாராதனையும், மதுரைவீரன் பூஜையும், காவடி, அபிஷேகமும், பண்டிகையும் செய்து வீட்டில் உட்கார்ந்து கொண்டே பணத்தைத் தொலைத்து விடுவான் என்பதும், பிறகு பழையபடி புரோகிதனும், தந்திரக்காரனும், ஏமாற்றக்காரனும்தான் மறுபடியும் பணக்காரன் ஆய்விடுவான் என்பதும் எனக்குத்தெரியும். ஆதலால்தான் நாட்டுச் செல்வம் ஒரு பக்கமே போய் குவியாமல் இருக்கும் திட்டமே போடவேண்டும் என்றும் யாருக்கும் எந்தத்தொழிலும் செய்யவும் எவரும் எதையும் படிக்கவும் சௌகரியமும், அனுமதியும் இருக்கவேண்டும் என்றும் தான் சொல்லுகின்றேன்.

வருணாச்சிரம சுயராஜ்யத்தில்-யார் மனதையும் புண் படுத்தாதசுயராஜ்யத்தில் இது முடியுமா? என்பதை யோசித்துப்பாருங்கள்.

மதமும் கோவிலும்.

மற்றும் இன்றைய இந்திய நாட்டின் அடிமைத்தனத்துக்கும், தரித்திரத்துக்கும் ஆதாரமாயிருப்பது மதமும் கோவில்களும் என்பது நீங்கள் எல்லோருமே ஒப்புக்கொண்ட விஷயமாகும். ஆகவே காங்கிரசினால் இந்த மதமும் கோவில்களும் ஒழியுமா? என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். இன்று நமது நாட்டில் காங்கிரசில் இருப்பவர்கள் பெரிதும் மதப்புரோகிதக் கூட்டத்தாரும், அவர்களது மக்களும், கோவில் பூசாரிகளும் அல்லவா? என்று கேட்கின்றேன். காங்கிரஸ்தலைவர்கள் என்பவர்கள் இவற்றை ஆதரிக்கின்றவர்கள் அல்லவா? என்று கேட்கின்றேன் மதமும் கோவிலும் போய் விடுவது உண்மையானால் இந்த ஆட்கள் 'காங்கிரசுக்குஜே! கார்த்திக்குஜே!!' என்று கத்துவார்களா? என்பதையும் யோசித்துப் பாருங்கள். ஏதோ பார்ப்பனருக்கு கையாளாய் இருப்பதின் மூலம் ஏதோ ஒருவிதத்தில் வாழ்க்கை நடைபெறுகின்றது என்பது தவிர காங்கிரசின் யோக்கியதை அறியாத காங்கிரஸ் பக்தர்கள் யார் இருக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே சகோதரர்களே! காங்கிரசு வைத்தியம் என்கின்ற பார்ப்பன ஆட்சியில் இதுவரை ஏழை மக்களுக்கு உண்மை சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டாலொழிய இந்த நாட்டுக்கோ, மக்களுக்கோ எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை என்பது தான் எனது உறுதி எனப்பேசினார்.

அறிவிப்பு.

திருவாளர்கள் வி. வி. இராமசாமி அவர்களுக்கும், கந்தநாடார் பி. ஏ. பி. எல். அவர்களுக்கும் விருதுநகர் காமராஜ் லிட்டன் கிளப்பில் தமது நண்பர்களால் அளித்த விருந்தின் நடவடிக்கைகளும், உயர் திரு பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் அவர்களின் காந்தியின் இராமராஜியம் என்ற கட்டுரையும் அடுத்த வாரம் வெளிவரும். பத்.

மணமகள் தேவை.

கம்மாளர் குலத்து வித்தவரும், மாதம் ரூ. 40 வருமானமுள்ள 37 வயதுடையவரும் மனைவியை இழந்த ஓர் மணமகனுக்கு ஷை வரு பிலேயே எழுதப்படிக்கத் தெரிந்த 25 வயதுக்குள்பட்ட ஓர் விதவை மணமகள் தேவை விருப்பமுள்ளவர்கள் முழுவிவரத்துடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித்தெரிந்து கொள்ளவும்.

பி. நாரம்புலிங்கம்.
சுயமரியாதைச்சங்கம்,
பிரசிடெண்டு, கல்லிடைக்குறிச்சி

அறிவிப்பு.

சென்னையில் "குடி அரசு" பத்திரிகையும், புஸ்தகங்களும் கிடைக்குமிடம்.

T. சுப்பிரமணியம்,
3, செங்கல்வராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

சென்னைமாகாண முதல் மந்திரியார் பங்களாபுதூர் விஜயம்.

சென்னை மாகாண முதல் மந்திரியார் கனம் திவான் பகதூர் பி. முனுசாமி நாயுடு காரு பி. எ. பி. எல். அவர்களும், ஜில்லா போர்டு தலைவர் அவர்களும், இன்னும் ஜில்லாபோர்டு மெம்பர்களும், தாலூகாபோர்டு தலைவர்களும், மெம்பர்களும், பழைய கோட்டை பட்டக்காரரும், ஊத்துக்குளி இளைய ஜமீன்தாரரும், ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் எம். எல். எ. அவர்களும் மற்ற பிரமுகர்களும் 29-6-31 காலை 9-மணிக்கு கோபி தாலூகா பவானி ஆற்றில் புதிதாய் கட்டப்பட்டிருக்கும் இரண்டு பாலங்கள் திறக்கக்கூடி, சவண்டப்பூர் பாலத்தை கனம் மந்திரியார் அவர்களால் வெகு விமரிசையாகவும், ஆடம்பரத்துடனும் திறந்து வைக்கப்பட்டது. வரும்வழியாக கள்ளிப்பட்டியில் கொணடையம்பாளையம் யூனியன் பஞ்சாயத்தார்களால் வாசித்துக்கொடுத்த வரவேற்பு பத்திரத்தைப்பெற்றுக்கொண்டு, கோபி போர்டு தலைவர் கே. ஆர். சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் வீட்டில் சிற்றுண்டி எடுத்துக்கொண்டு 10 மணிக்கு நஞ்சை புளியம்பட்டிக்கு அருகில் கட்டப்பட்டிருக்கும் பாலத்தைத் திறக்க சென்றனர். வந்தவர்களை மேள வாத்தியத்துடன் எதிர்கொண்டழைத்து அதற்கென அமைக்கப்பட்டிருந்த கொட்டகையில் உயராசனத்தில் கனம் மந்திரியாரும், ஜில்லா போர்டு தலைவரும் அமர்ந்ததும், கோபி, தாலூகா போர்டு தலைவரால் கனம் மந்திரியாருக்கு ஒரு வரவேற்புபத்திரமும், ஜில்லா போர்டு தலைவருக்கு ஒரு வரவேற்பு பத்திரமும் வாசித்துக்கொடுக்கப்பட்டு, மாலைகள் இருவருக்கும் போர்டு தலைவர் கே. ஆர். சுப்பிரமணியக்கவுண்டரால் சூட்டப்பட்டன.

அக்கரை கிராமவாசிகளின் சார்பாக பங்களாபுதூர் பி. கே. கருத்திருமகவுண்டர் அவர்களால் கனம் மந்திரியாருக்கு ஒரு வரவேற்புப் பத்திரமும், மேற்படி கிராமம் பி. ஓ. கருத்திரும கவுண்டர் அவர்களால் கோவை ஜில்லா போர்டு தலைவருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டு முறையே அவர்களுக்கு மாலை சூட்டப்பட்டது.

வரவேற்புப் பத்திரங்களுக்கு பதில் அளிக்கையில் பங்களாபுதூர் ஆஸ்பத்திரிக்காக திரு. தாசப்பகவுண்டர் அவர்கள் இலவசமாய் தன் சொந்தக் கட்டிடத்தைக் கொடுத்திருப்பதைப்பற்றி மந்திரியார் புகழ்ந்து பேசியதும், அத்தாணியைச்சேர்ந்த பெரும் பள்ளங்களுக்கு பாலம் கட்டும் விஷயமாயும் சத்தியமங்கலம் மார்க்கமாய் ரயில் போடும் விஷயமாய் தக்கமுயற்சி எடுத்துக்கொள்வதாயும் நமது கோவை ஜில்லா போர்டு தலைவர் சொன்னதும் குறிப்பிடத்தக்கது.

பிறகு ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கிடையே வாத்திய கோஷத்துடன் திருவாளர் திவான் பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் எம். எல். சி. அவர்களால் பாலம் திறந்து வைக்கப்பட்டது.

புளியம்பட்டியின் இடத்தில்பாலம் ஒன்று கட்டவேண்டுமென்று ஸ்ரீமான் தாசப்பகவுண்டர் கேட்டுக்கொண்டதை சர். பி. ராஜகோபாலாச்சாரியார், மேற்படி பாலம் விவசாயிகளுக்கு அவசியம் என்று உறுதி செய்து தாசப்ப கவுண்டர் பங்களாவில் இறங்கியிருந்து மேற்படி நதிக்கு பாலம் கட்டுவதை ஊர்ஜிதம் செய்துவிட்டுப் போனார், மேற்படி பங்களாவிலே கனம் மந்திரியார், ஜில்லாபோர்டு தலைவரும், உபதலைவர் திருவாளர் எஸ், என். பொன்னையகவுண்டர். பழைய கோட்டை பட்டக்காரர், ஊத்துக்குளி இளைய ஜமீன்தார், கோவை தாலூகா போர்டு தலைவர் பழனிசாமிகவுண்டர், பல்லடம் தாலூகா போர்டு தலைவர் ஆர். வி. ராமசாமி கவுண்டரும், கொள்ளேகாலம் தாலூகா போர்டு தலைவர் ஜி.பி. மல்லப்பா, பொள்ளாச்சி திருவாளர் ரத்தினசபாபதிகவுண்டர், இன்னும் ஜில்லா போர்டு, தாலூகா போர்டு அங்கத்தினர்களும் அக்கம் பக்கங்களிலுள்ள குடித்தனக்காரர்களும். ஸ்ரீமான் தாசப்பகவுண்டர் அவர்களின் பங்களாவில் பாலம்கட்டி முடிவு பெற்ற திறப்புவிழா நடத்த தற்சமயம் விருந்துண்டபின்பு புகைப்படம் பிடிக்கப்பட்டது. 3-மணிக்கு டீ எடுத்துக்கொண்டு கோபி மார்க்கமாக சத்தியமங்கலம் புறப்பட்டு போனார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

முதன்மந்திரி கோவை ஜில்லா போர்டு.

பிரசிடெண்டு திவான் பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் முதன் மந்திரி கனம் பி. முனுசாமி நாயுடுவுடன் கொள்ளேகாலம் சுற்றுப்பிரயாணம் சென்று, அங்கு பல விஷயங்களை பரிசீலனைசெய்துவிட்டுஇருவரும் மைசூருக்குச் சென்றார்கள்.

தொம்பக்குளம் வாலிபர் சமரச சன்மார்க்க சங்கம்.

ஸ்ரீவில்லிபுத்தூர்தாலூகாதொம்பக்குளம் வாலிபர் சமரச சன்மார்க்க சங்கத்தின் கூட்டம் 5 7.31ந்தேதி சங்கக்கட்டிடத்தில் கூடியது. அதுபோதுபொதுஜனமுறை பாடசாலைக்கு இச்சங்க அங்கத்தினர்களிருவரை அல்லதுமூவரை அனுப்புவதென்றும் சுயமரியாதை இயக்கத்திற்கென ஒரு தினசரிப்பத்திரிகை ஆரம்பிப்பதை இச்சங்கம் ஆதரிக்கிறதென்ற தீர்மானங்களும், இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேறியபின் கூட்டம் கலைந்ததென மேற்படி சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

சிதம்பரம் தாலூகா சேதியூரில் பிராமணீயம் ஒழிந்த திதி.

ஷெயூர் பாளேக்கார இராமலிங்கம் என்பவர் தமது இறந்துபோன தந்தையின் முதலாண்டு சிரார்த்ததினமாகிய 5-7-31தேதியன்று பார்ப்பனர்களால் நடத்தி வைக்கப்படும் முறையை அறவே ஒழித்து பலருக்கும் சாப்பாடு நடத்திவைத்ததோடு ஏழைமக்களுக்கும் அன்னமளித்தாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கடந்த 12 வருஷங்களாக இந்திய ஏழைமக்களின் கல்வி விஷயமாய் தபால் மூலமும், நேரிலும் உழைத்துவரும் ஸ்தாபனம் இதுவே!

| முந்துங்கள்! 2000 மாணவர்கள். | தமிழ்நாட்டு பெற்றோர்களே! | முந்துங்கள்!! 2000 மாணவர்கள். |

மெட்ரிக்குலேஷனுக்குரிய அறிவை

உங்கள் பிள்ளைகள் ஹைஸ்கூலில் படித்துப் பெற சந்தர்ப்பமில்லாவிடில், தபால்மூலம் வீட்டிலிருந்தபடியே, தொழில் செய்துகொண்டு சவகாச நேரங்களில் கற்றுக் கொள்ளலாம், கவர்ன்மண்ட் பரீக்ஷைக்கு போக இஷ்டப்படின் போகலாம். S. S. L. C. படித்து தவறியவர்கள் நமது கோர்ஸ்களை முடித்து சீனியர் பாஸ்செய்து காலேஜில் சேரலாம். தமிழ் (or) இங்கிலீஷ் பிராஸ்பக்டசுக்கு 1-அணா ஸ்டாம்பு உடன் அனுப்பவும்.

டைரக்டர்,
அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ்
இன்ஸ்டிடியூட், ஆறுமுகநேரி. S. I. R.

திருச்சிஜில்லா ஆதிதிராவிடர்கள்,

திருச்சி ஜில்லாபோர்டு தலைவர் ராவ்பகதூர் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்களை லால்குடி தாலுகா தாழ்த்தப்பட்ட வகுப்பார் பேட்டிகண்டு, தங்கள் வகுப்பாருக்கு லால்குடி பள்ளிக்கூட விஷயத்திலுள்ள கஷ்டங்களை யெடுத்துச் சொன்னதில், ராவ்பகதூர் பிள்ளை அவர்கள் பொறுமையாய்க்கேட்டு, தக்கது செய்வதாக வாக்களித்தார். அதன் மீது திரு. டி. வி. சோமசுந்திரம் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடி, ராவ்பகதூர் திரு. நாராயணசாமி பிள்ளை அவர்களுக்கு நன்றி செலுத்தியதோடு, திருச்சி, பொன்னையா ஹைஸ்கூல் அதிகாரிகளை பிறவி காரணமாக வித்தியாசம் பாராட்டக்கூடாதென கேட்டுக்கொள்ளுவதாக ஒரு தீர்மானமும் நிறைவேற்றினார்கள்.

சீர்திருத்தம்,

கராச்சி காங்கிரஸ் நடந்தசிந்து தேசத்தில் உள்ள மக்களுக்குமாத்திரம் சாரதா சட்டத்தை அமுலில் நடத்தமல் இருக்கவேண்டும் என்பதாக பம்பாய் சட்ட சபைக்கு ஒரு தீர்மானம் வரப்போவதாக பிரீபிரஸ் சேதி சொல்லுகின்றது. ஆகவே சீர்திருத்தத்திற்கு சர்க்கார்தான் எதிரியாக இருக்கிறது. சுயராஜியம் வந்தவுடன் எல்லா சீர்திருத்தமும் சரிப்பட்டுவிடும் என்று சொல்லும் 'சீர்திருத்தவாதிகள் இதை கவனிப்பார்களாக.

ஸ்ரீவில்லிபுத்தூரில் சாதிக் கொடுமை,

நாடார்கள் மண் குடம் உடைந்தது.

ஸ்ரீவில்லிபுத்தூரில் 5-7-31 வ காலையில் நாடார் கிளப்பிலிருந்து நாடார் சகோதரர் ஒருவர் நாடகசாலைத்தெருவிலுள்ள முனிசிபல் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கும்பொழுது அத்தெருவிலுள்ள பார்ப்பனர்கள் ஒன்று சேர்ந்து மேற்படி நாடார் சகோதரரை கம்பினால் மண்டையில் அடித்து இரத்தம் உடம்பெல்லாம் ஓட கிழே தள்ளி பலம் கொண்டமட்டும் அடித்தார்கள். இதுவிபரம் தெரிந்து மற்றும் 2 நாடார்கள் அவ்விடம் போக அவர்களையும் மண்டையில் அடித்து இரத்தம் பீரிட்டோட அடித்துவிட்டார்கள். அத்துடன் தண்ணீர் எடுத்த குடத்தையும் பிடுங்கி வைத்துக்கொண்டார்கள். முனிசிபல் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுத்ததற்காக இவ்விதம் கொடுமை நடந்தால் இதையாரிடம் சொல்வது? இச்செய்தியால் இவ்வூர் நாடார்களுக்கு மனக்கொதிப்பும், பரபரப்பும் ஏற்பட்டிருக்கிறது இதற்குமேல் என்ன நடக்குமென்று தெரியவில்லை எனஒரு நிருபர் எழுதுகிறார்.

அதைவிட இதுமேலானது எது?

தருமபுரம் மடத்துக்கொலை.

தஞ்சை ஜில்லா தருமபுரம் மடத்தில் இருந்துவந்த இராமசாமி பண்டாரச்சியை சிலர்கூடி கொன்றுவிட்டார்கள். இதற்காக கைது செய்யப்பட்ட ஆறு பேரில் ஒருவன் மடாதிபதி அவர்கள் உத்திரவின்மீது இந்தக்கொலையை செய்ததாகச் சொன்னான் ஆனால்போலீசார் என்ன காரணத்தாலோ அதை நம்பாமல் இந்த ஆறு பேர் மீதில் கேசு நடத்துகிறார்கள். அன்புமயமான சைவ சமயத்தைப்பிரசாரம் செய்ய ஏற்பட்ட மடங்கள் எப்படியாவது மனிதக்கொலை இல்லாமல் வாழமுடியவில்லை. ஆயிரக்கணக்கானவர்களை கழுவேற்றினசைவராஜாவைவிட நமது சைவமடாதிபதிகள் எவ்வளவோ மேலானவர்கள் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் கழுவேற்றுவது வெளிப்படையாய் நடக்கும் கொலைகளாகும். ஆனால் சாமானைப்பிடித்துக் கசக்கிக்கொல்லுவது மிகவும் ரகசியமான கொலைகளாகும் இதனால்பொது ஜனங்களுக்கு அதிக கஷ்டம் விளைவதற்கு இடம் இல்லையல்லவா? ஆகவே இது அதைவிட நல்லகாரியமாகும்.

வெண்பாக்கம்.

ஜெயினமகாசபை:

செய்யாரு தாலுகா வெண்பாக்கம் கிராமத்தில் சுமார் 400 ஜனங்களடங்கிய ஜெயின மகா சபை 30-6-31ல் இலக்ஷ்மி ஸெந பட்டாரக பட்டாசார்ய வர்ய சுவாமிகளின் தலைமையில் கூடியது. அவ்வமயம் பல அறிஞர்களால் சொற்பொழிவாற்றப்பட்டு, ஸ்தல ஸ்தாபனங்களில் இரண்டு ஸ்தானங்கள் ஜெயினர்களுக்கென ஒதுக்கிக்கொடுக்கும்படி ஸ்தல ஸ்தாபன மந்திரியைக் கேட்டுக்கொள்ளுகின்றதெனவும். ஜெயினர்கள் கல்வியில் முன்னேற்றமடையாதிருப்பதால் அவர்களை பிற்போக்கானவர்களின் (Backward Class) வகுப்பில் சேர்த்து,வேண்டியஉதவியளிக்க வேண்டுமென கல்வி மந்திரியைக் கேட்டுக்கொள்ளுவதாகவும், இவ்விஷயங்களை இரு மந்திரிகளுக்கும் நேரில் அறிவிக்க, ஒருடெபுடேஷன்செல்லுவதெனவும், ஜெயினர்களின் முன்னேற்றத்திற்காக ஒரு பொது நிதி சேர்க்கவேண்டுமெனவும், இத்தீர்மானங்களின் நகல் எல்லா ஜெயினர்களுக்கும் அனுப்பவேண்டுமெனவு மாகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டமினிது முடிந்ததென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

கலப்பு திருமணம்.

அந்தணர் பேட்டையில் சுயமரியாதை முழக்கம்.

22-6-31 தேதி 10 மணிக்கு நாகை அந்தணர் பேட்டையில் பிரபல நாயடு குடும்பத்தைச் சேர்ந்த திரு வி. சுப்பராயலுக்கும், பிரபல கள்ளர் வகுப்பைச் சேர்ந்த திருச்செல்வி செகுபதி அம்மையாருக்கும், எவ்வித சடங்குகளின்றி சுயமரியாதை முறையில், மணமக்களின் மனமொத்தப்படி, விவாகம் நடந்தேறியது.

இவ்வைபவத்திற்கு உயர்திரு. ரா. மு. கோவிந்தசாமி அவர்கள் (நாகை தாலுகா காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி) தலைமை வகித்து கலப்புமண அவசியத்தைப்பற்றி பேச, திரு. வி. சாமிநாதன் அவர்களை திருமணத்தை நடத்திதரக் கேட்டுக்கொள்ள அது சமயம் திரு. வி. சாமிநாதன் அவர்களும் வந்திருந்தவர்களுக்குப் புரோகித சடங்குமணத்தின் ஆபாசத்தைப்பற்றி விவரித்தபின் மணமக்களைக்கொண்டே திருமணத்தை இனிது நடத்தி வைத்தாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருமயிலையில் சுயமரியாதைத்திருமணம்.

சென்னைத் திருமயிலை நாட்டு முத்துக்குமரப்ப முதலித்தெரு 9வது எண்ணுள்ள இல்லத்தின்கண், சுயமரியாதைப்பற்றுடையவரான திரு. சி. உலகநாதன் அவர்கட்கும், செல்வி திரு. பார்வதி அம்மாள் அவர்களுக்கும் 1-7-31ல் வைதீகப் பெரியார்களுக்கிடையே அறிவிற்குப் பொருத்தமற்றச் சடங்குகளை ஒழித்து தமிழ் மொழியில் பிராமணரல்லாதாரைக்கொண்டு, திருமணம் நடத்தப்பட்டது. அதுகாலை அநேக பருவதராஜகுலமக்களும், மற்றுஞ் சில நண்பர்களும் வந்து குழுமியிருந்தார்கள், திருமன்றல் விழாவிற்கு வந்திருந்தவர்கள் எல்லாரும் (வைதீகர்கள் தவிர) இச்சீர்திருத்தத்திருமணத்தை மிகவும் மெச்சினார்கள் இத்திருமணம் சென்னையில் நாடார் குலத்தில் (பருவதராஜ குலத்தில்) நடந்த சுயமரியாதைத் திருமணத்தில் இரண்டாவதாகுமென திரு. சி. பஞ்சாட்சரம் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

24

வருடங்களாகப் புகழிற் சிறந்து விளங்கும் பண்டிட்

ஆனந்தரின்

மகா சந்தன தைலத்தை

உபயோகித்து நலமடையுங்கள். அது சாஸ்திர விதிப்படி தயார் செய்யப்பட்டது மூளைச்சோர்வையும் நரம்புத்தளர்ச்சியையும் போக்கி பலத்தைக்கொடுக்க வல்லது பொதுவாக எல்லாப்பிணிகளையும் கண்டித்து தேக ஆரோக்கியத்தைத்தருவது. கோடை காலத்தில் எல்லோருக்கும் இன்றியமையாதது.

6 அவுன்சு ரூ. 1—0—0.
12 ,, ரூ. 1—14—0.

இனாம். கேட்லாக்கும் சுகவழியும்

தந்தி விலாசம்:— "மருத்துவன்" சென்னை.

டெலிபோன் நெ. 2584.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

மட்டற்ற வீர்யம்!

ஒரு வேளை மருந்தில் குணம்.

நமது மருந்தை குணமில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம். இன்றே நமது பிரசித்திபெற்ற சக்திலேஹ்யமும் தங்கபஸ்பமும் சாப்பிடுங்கள். நரம்பு தளர்ச்சி, வீர்யக்குறைவு நபும்ஸகத்வம் முதலியவற்றை உடனே பறக்கடிக்கும். விலை ரூ 5—0—0 தான்.

Neo Sakthi & Co.,
10 th Beat
Madras Vepery.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டு பண்ணலாம். இடிமேல் இடிவிழுந்தாற்போல் இளமணத் தடைச்சட்டம் ஆட்சேபிக்கப்படும் சமயத்தில், எரியும் அடுப்பில் எண்ணெய் வார்த்தார்போல், சொத்துரிமைச்சட்டமும் பத்தாக்குறைக்கு நிறைவேறிவிட்டால், வைதீகருள்ளம் அனலென எரியாது குற்றாலம் "தென்றல்"லென குளிர்ந்து படுமோ! 'பொருளிலார்க்கிவ்வுலகமில்லை' என்னும் பொய்யாமொழிக்கேற்பப் பொருளின்றி நடைபெறக்கூடிய காரியம் ஒன்றுமில்லை. மற்ற சாதாரண விஷயங்களிலேயே பெண்களை ஒரு புறமாய் ஒதுக்கித் தள்ளியவர்கள் சொத்து விஷயத்தில் தானா அணைத்து ஆதரவு காட்டப்போகின்றார்கள்? இருபிள்ளையையும் ஒரேவித இன்பதுன்பத்தில் பெற்றெடுத்து சீராட்டுவதில் மட்டும், ஒரு பிள்ளைக்குப்பால் சோறும், ஒருபிள்ளைக்கு உப்பில்லாக்கூழும் இட சொன்னவர் சொன்னாலும் பெற்றவர் மனம் எவ்விதத்தில் சம்மதப்படுகின்றது என்பதே வியப்பாயிருக்கிறது. பத்துமாதம் சுமந்து பெற்றதில் வித்தியாசமொன்றுமில்லையே! பட்ட கஷ்டத்தில் வேற்றுமையொன்றும் காணப்படவில்லையே? அங்ஙனமிருக்க, வளர்ப்பதில்மட்டும் பாராட்டுவதில்மட்டும், நஞ்சையும், சர்க்கரையையும் உபயோகிப்பது எந்தநீதியைக்கொண்டென்பதன்றோ எளிதில் புலப்படேனென்கின்றது! நிற்க சொத்துரிமை இல்லாத காரணத்தால் பெண்கள் சிலரின் வாழ்வு, இரந்துண்ணலிலும், விபசாரத்திலும் வந்துவிடுகின்றது. பெண்கள் சுயேட்சையாய் சம்பாதித்து வயிறு வளர்க்கவும், சுதந்தரமில்லையென்பதோடு கல்விவசதியும் அளிக்கப்படவில்லை. மற்ற உரிமைகளைவிட பெண்களுக்கு சொத்துரிமை அவசியம் முதலில் வேண்டப்படுவதாகும். சொத்துரிமை இல்லாதவரைப்பெண்மக்கள் சுதந்திரத்தோடு வாழமுடியவே முடியாது. என்ன சுதந்தரம் வந்தாலும் நிலைத்து நிற்கவும் மாட்டாது. எவ்வளவு சொத்து இருந்தாலும் பெற்ற பெண் பிள்ளையார்போல் இருக்க நாலாங்கால் எட்டாங்கால் என்றிருக்கும் ஒருவரையே போய்ச் சேருகின்றது எவ்வளவு கொடுமையென்பதை யோசித்துப்பார்க்கவேண்டுகிறேன். எனவே இக்கொடுமையை ஒழிக்கமுன் வந்த மைசூர் அரசாங்கத்தைப் பன்முறை வாழ்த்துகிறேன். வைதீகவெறியர் தமக்கு வாய்ப்பூட்டிட்ட மைசூர் அரசாங்கம் நீடூழிவாழ்க! சட்டத்தை ஆதரித்த அன்பர்களெல்லோருக்கும் பெண்ணுலக சார்பாக எனது நெஞ்சுகந்தவந்தனத்தைச் செலுத்துகின்றேன். சொத்துரிமைச்சட்டம் நிறைவேறியதைக்கண்டாவது மைசூரிலுள்ள வைதீகர்கள் அறிவிவரப்பெற்று வாலாட்டாமல் வாய் மூடிவாளா விருப்பார்களாக! மற்றவைகளைப்பற்றி அடுத்த கட்டுரையில் தொடுப்போமாக!

(தொடரும்.)

சென்னிமலை யுவர் சங்கம். முதலாவது ஆண்டு நிறைவு விழா.

காரியதரிசி திருவாளர். எல். வி. பழனியப்பன் அவர்களால் வாசிக்கப்பட்ட முதலாவது ஆண்டு அறிக்கையின் சுருக்கம்.

பீடிகை: — நமது தாய் நாடாகிய இந்தியா மேம்பாடடைய வேண்டுமானால் ராஜியம், பொருளாதாரம், ஆசாரச் சீர்திருத்தம் முதலியவைகளில் முற்பட வேண்டியிருப்பதுடன் கல்வித் துறையிலும், நாகரீகத்திலும் முன் செல்லவேண்டியிருக்கிறது. இவைகள் முற்போக்கு அடையும்படி செய்ய வாலிபர்களால் தான் முடியும்.

நமது நாடானது கிராமத் தலைவர்களால் நடத்தப்பட்டு வந்தபடியால், யுவர்களுக்குச் சுதந்திரம் முதலியன கொடுக்காமல் பழைய, பழைய வழக்கங்களை அனுஷ்டித்து வந்ததாலும், புதிய முறைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து சீர்திருத்தம் செய்யாததாலும், தற்காலம் நமது தேசம் சகல விஷயங்களிலும் அயல்நாட்டை எதிர்பார்க்க வேண்டியதாய் விட்டது. இக்குறைகளை யெல்லாம் நிவர்த்தி செய்ய வாலிபர் சங்கங்களால் தான் இயலும்.

தற்காலம் உலகில் பல பாகங்களிலும், பல தேசங்களிலும் பல நன்மைகளும், காரியங்களும் முடிக்கப்பெறுவது சங்கங்களே. பெரும்பாலும், சுதந்திரம் பெற்ற நாடுகள் சங்கங்களால்தான் என்பதும், அவைகளை ஆட்சி புரியப்படுவதும் சங்கங்களால் தான் என்பதும் தெரியக் கிடக்கிறது.

யுவர்கள் தாங்கள் தொடங்கும் காரியங்களை கைகூடும் வரையில் தங்கள் கொள்கைகளைக் கண்ணெனக்காத்து, ஆண்மையுடன் போருக்கெனினும் முன்னணியில் நின்று போராடத்தக்கமனோதிடங்கொண்டவர்களாயிருக்கவேண்டியவர்கள். ஆனதால் யுவர்களுக்கென ஓர் ஸ்தாபனம் இருக்கவேண்டிய தவசியமாக இருக்கிறது.

ஆனதுபற்றி இந்நகரில் சகலமான யுவர்களும் தாராளமாய் அங்கத்தினர்களாக இருக்கத் தக்கவிதமாய் இரண்டணா மாதச் சந்தா ஏற்படுத்தி, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்ற கொள்கைகளைக் கொண்டும் கல்வியபிவிருத்தி செய்தல், கைத்தொழில் வளர்ச்சி, கிராமப்புனருத்தாரணம், சமூக சீர்திருத்தம், சுகாதார வசதி, மதுவிலக்கு, பெண்கள், சமய, சமூக, ராஜீய விடுதலை முதலியவைகளை நோக்கமாகக்கொண்டு 1930-ஆம் ஜூன் மீ 7-உயன்று ஸ்தாபிக்கப்பட்டது.

அங்கத்தினர்கள்:— ஆரம்பத்தில் பதிவு செய்துகொண்டவர்கள் 34 ஆக இருந்தது. வருஷக் கடைசியில் 67 ஆகப் பெருகியிருக்கிறது.

மூலதனம்:-நன்கொடை மூலம் ரூ. 59-12-0. பிரவேசக் கட்டணம் சந்தாவசூலானது ரூபாய் 37-14-0 நாடகம் நடத்தியவகையில் மீதி ரூ. 236-7-0 ஆக ரூ. 334-1-0 சேர்க்கப்பட்டிருக்கிறது. சங்கத்தின் செலவு வகைகளில் நிர்வாக சபையாரால் மிக்க கவனிப்புடன் சிக்கனத்தைக் கையாண்டு வந்திருக்கிறது.

பிரஸ்தாப வருஷத்தில் மகா சபைக்கூட்டம் 12, டைரக்டர்கள் கூட்டம் 5, நிர்வாகக்கூட்டம் 5, ஆக 22 கூட்டம் கூட்டியிருக்கிறது.

பொதுக்கூட்ட நிகழ்ச்சி காலங்களில் யுவர் சங்க நோக்கம், சங்கத்தின் அபிவிருத்தி, கல்வியபிவிருத்தி முதலிய விஷயங்களைப் பற்றி ஸ்ரீமான்கள் ஜி. இராஜமண்ணார் (தலைவர்) எல். வி. பழனியப்பன் (காரியதரிசி) எஸ். புலியூர் உடையார்பிள்ளை (ஐக்கிய சங்கப் பிரசாரகர்) எஸ். என். துரைசாமி எம். எஸ். சுந்தரம் முதலியவர்களால் அறிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன.

இவ்வூர் உற்சவ காலத்தில் அங்கத்தினர்கள் 12 பெயர்கள் வாலண்டியர்களாக இருந்து பொதுஜன சௌகரியம் செய்திருக்கிறார்கள்.

மாரியம்மன் திருவிழா காலத்தில் சென்னை ஜீவகாருண்ய சங்கத்தாரிடமிருந்து துண்டுப்பிரசுரங்களையும் சுவரொட்டி விளம்பரங்களையும் வரவழைத்து 'உயிர்ப் பலி மதுவருந்தல் இவைகளைத் தடுக்க' விநியோகிக்கப்பட்டது.

வாசகசாலை ஏற்படுத்த நிச்சயிக்கப்பட்டு சில புஸ்தகங்கள் ஜனவரி மாதத்தில் வாங்கி அவைகளை இலவசமாக வாசிக்கக்கொடுத்து வந்திருக்கிறது. மேற்கொண்டு வாசக சாலையை விரிவுபடுத்த பொருளுதவி பெற சில பொது ஸ்தாபனங்களுக்கு மனுச்செய்து கொள்ளப்பட்டது.

ஐக்கிய சங்கத்தார் சில புஸ்தகங்கள் வரவழைத்துக்கொடுத்திருக்கிறார்கள். மேற்படி வாசக சாலையை இன்று ஈரோடு 'குடி அரசு' பத்திராதிபர் உயர் திருவாளர் ஈ. வெ. இராமசாமி பெரியாரால் திறந்து வைக்கப்படவிருக்கும் செய்தியை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

வாசகசாலை நிதி திரட்டும் நிமித்தம் சங்க அங்கத்தினர்களால் 4-1-31, 5-2-31 உகளில் "மார்க்கண்டேயா" 2-2-31, 6-2-31 தேதிகளில் "காதலர் கண்கள்" என்ற நாடகங்களை அதிவிமரிசையாய் நடத்திக்காண்பிக்கப்பட்டது.

சங்கத்திற்கும் வாசகசாலைக்கும் சாஸ்வதமாக ஓர் கட்டடம் இருக்கவேண்டியதை முன்னிட்டு அதற்காக பொருள் திரட்ட சங்கத்தின் சார்பாக லாட்டரி சீட்டு நடத்த ஸ்ரீமான்கள் ஜி. இராஜ மண்ணார், எல். வி. பழனியப்பன், ஒ. என். பழனியப்பன், ஒ. எ. கிருஷ்ணன், ஒ. எ. மாரியப்பன், எம். எஸ். கே. பழனியப்பன், எஸ். கே. மாரியப்பன் ஆகியவர்களைக் கமிட்டியாக இருக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆரம்பக்கல்வியை அபிவிருத்தி செய்ய இரவுபாடசாலை வைத்து நடத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பொதுஜன சகாயமும், போதுமான மூலதனமும் சேர்ந்தவுடன் சங்கம் தனது தீர்மானத்தை நிறைவேற்றத்தவறாது.

முடிவுரை.

சங்கம் தனது முதலாவதாண்டிலேயே கூடுமானவரை தன்னாலியன்ற மட்டும் பொதுக்காரியங்களில் உழைத்து வந்திருக்கிறது. இதுவரை அங்கத்தினர்களாகப் பதிவு செய்து கொள்ளாதவர்கள் உடனே பதிவு செய்து கொண்டு தங்களது பூரண ஆதரவைக்கொடுத்து வந்தால் தேச சமூக சேவைகளை முன்னின்று நடத்தி வருமென்பதில் ஐயமில்லை.

சங்கம் தனது கடைமைகளைச் செவ்வனே செய்ய பொருள் அவசியம். அது சங்கத்தின் அங்கத்தினர்களிடையே வசூலிக்கப்படும் சந்தாத் தொகையைக்கொண்டு தான் இருக்கிறது. ஆதலால் அங்கத்தினர்கள் சந்தாபாக்கிகளை உடனே செலுத்தவேணுமாயும் அங்கத்தினராயில்லாத யுவர்கள் பலரும் அங்கத்தினர்களாகச் சேர்ந்துகொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கணக்கு. வரவு இனம் நன்கொடை ரூ. 59—12—0, பிரவேசக்கட்டணம் பாக்கியுக

"மதமே வேண்டாம்" சுயமரியாதை இயக்கமே சிறந்த மதம்.

(முத்துப்பேட்டை எம். என். கோவிந்தசாமி)

நம் நாடு சீர்குலைந்து ஒற்றுமையின்றி வறுமைப்பிணியால் ஆழ்ந்து தள்ளப்பட்டு என்றும் அடிமைகளாகவும், மூடர்களாகவும் வாழும்படி செய்தது மதம் என்னும் பேய்தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்நிலையில் நம்மில் சிலர் இஸ்லாம் மதம் சிறந்ததா? கிறிஸ்து மதம் சிறந்ததா? என்று ஆராய்ச்சிசெய்து கொண்டும் எம்மதத்தில் சேரலாம் என்று வீணே யோசித்துக் கொண்டும் இருக்கின்றனர். இன்னுஞ்சிலர் இஸ்லாம் மதம் சிறந்ததென்றும் அம்மதத்தில் அடைக்கலம் புகவேண்டுமென்றும் கூறுகிறார்கள். அப்படிக்கூறுவதற்கு அது தற்காலத்திற்கேற்ப சீர்திருத்தமுள்ள மதம் என்பதைக் காரணமாக எடுத்துக்கூறுகிறார்கள். ஆம். அதைப் பின்பற்றுவதில் நமக்கும் ஒன்றும் ஆக்ஷேபனை இல்லை. ஆனால் அதிலும் சில ஊழல்கள் மறைந்து கிடக்கின்றன என்பதை நேயர்கள் அறிவார்கள். தற்காலத்தில் நம்மில் பெரும்பான்மையோர் மதமே வேண்டாமென பிரசாரஞ்செய்து கொண்டிருக்கையில் நாம் இஸ்லாம் மதத்தைப்பற்றிப் பேசவேண்டிய அவசியமில்லை. மதமென்னும் வார்த்தையே கூடாது என்பது நமது நோக்கம். இது காரணம்பற்றியே கவி தாகூர் அவர்கள்

"நான் தழுவும் ஜாதி ஒரே ஜாதி; அது மானிட ஜாதி. நான் வாழும் நாடு ஒரே நாடு; அது மானிட உலகம்" என்று கூறியிருக்கிறார்.

அறிவிற்சிறந்த பெரியோர்களே! அன்புடையவர்களே! நாம் சேரவேண்டிய மதமும், உண்மையையும், நன்மையையும் பயக்கக்கூடிய மதம் சுயமரியாதை மதம்தான். ஆனதால் நாம் யாவரும் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். இந்த இயக்கமே நமக்குச் சிறந்த மதமாகும். நாம் ஒரு மதத்திலும் அடைக்கலம் புகவேண்டிய அவசியமில்லை.

உலகத்திலே மிகச்சிறந்ததும் உண்மையும் தன் மதிப்புடையமதம் எது என்று யாராவது கேட்பார்களானால் அதற்குச் சுயமரியாதை மதமே எல்லாவற்றிலுஞ் சிறந்தது, உயர்ந்தது என்று நம் காதில் விழக்கூடும். எப்படி Martin Luther தான் கிறிஸ்து மதத்திற்கு எதிர்பிரசாரஞ்செய்து தான் தோற்றுவித்த மதத்திற்கு "எதிர்ப்பு" என்னும் பொருள்படும்படி பிராட்டஸ்டெண்ட் என்னும் பெயருடன் வெளிக்கிளம்பியதுபோல் நாம் பின்பற்றும் மதம் சுயமரியாதை இயக்கம் என்னும் தனிப்பெயருடன் வெளிக்கிளம்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

படட ரூ. 16—12—0, சந்தா பாக்கியுள்படட ரூ. 90—14—0, டிராமா நடத்தியதில் மீதி ரூ. 23○—7—0, அனுமத்து ரூ. 3—0—0, ஆக ரூ. 406—13—0

செலவினம். தபால் 1-8-0, ஸ்டேஷனரி ரூ 11—12—0, பிரோ 2க்கு ரூ. 68—12—0, புஸ்தகங்கள் ரூ. 30—9—0, பாக்கி சந்தா இதர வகைகளில கூடிய ரூ. 145—2—3, இருப்பு ரூ. 149—1—9, ஆக ரூபாய் 406—13—0)

G. இராஜமன்னார்,
பிரசிடெண்டு.

L. V. பழனியப்பன்,
காரியதரிசி.

(3ம் பக்கத்தொடர்ச்சி)

யத்திற்குள் விழுவதால் நமக்கு வரும் கஷ்டமென்ன? உண்மையில் சந்தியத்தில் ஒன்று மில்லை.

தெரிந்தோ தெரியாமலோ தீண்டாமை உண்டாய் விட்டது. அந்தத்தீண்டாமையால் பெருந்துன்டம் வந்ததும் கண்டோம். அந்தத்தீண்டாமையைப் போக்குவதற்கு சாஸ்திமோ, பிராயச்சித்தமோ, தெண்டனையோ, அறிவோ, மனிதனோ, அதிகாரமோ இல்லாத சனசமூகம் என்றைக்கும் முன்னணிக்கு வராது.

தீண்டாமை போகவேண்டுமென்று சொல்லுவதற்கு வைதீகர்களைக் கேட்க வேண்டும். அவர்கள் சாஸ்திரங்களைப் பார்த்துச் சொல்ல வேண்டுமென்று காங்கிரஸ் பெரியார்கள் சொல்லுவார்கள். சாஸ்திரத்திலில்லாத காரியங்களெல்லாம் வைதீக இந்துக்கள் செய்கிறார்களே. அவர்கள் யாரைக்கேட்டுச் செய்கிறார்கள்? எந்த சாஸ்திரத்தைப் பார்த்துச் செய்கிறார்கள்? என்பதைக் கேட்க காங்கிரசுக்கு அதிகாரமில்லை. கேட்டால் பாவம் வந்துவிடுமோ? சுயராஜிய வழியும் தடை பட்டு விடுமோ?

சுயமரியாதைத்திருமணம்.

திண்டுக்கல் சௌடாம்பிகை கோயில் தெருவில் சடச்சி பட்டி திருவாளர் குருசாமி நாயுடு அவர்கள் செல்வக் குமாரன் நரசிம்மலு நாயுடுவுக்கும், மராபட்டி மிராஸ்தார் திருவாளர் வெங்கிடசாமி நாயுடு செல்வக் குமாரத்தி ஸ்ரீமதி நாச்சேரம்மாளுக்கும் 1-7-31ம் தேதி புதன்கிழமை காலை 7-30 மணிக்கு பார்ப்பன புரோகிதமன்னியில் திருவாளர் ஆர். நரசிம்மலு நாயுடு மிகவும் சிறப்பாக நடத்தி வைத்தது குறிப்பிடத்தக்கதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

மக்களைக்கொல்வது

வியாதி.

வியாதியை விதியென்றே சே.
ஆலசியத்தால் வியாதி விதியாய் முடியும்.

க்ஷயம், காசம், இருமல் எவ்வளவு அசாத்தியமாயிருந்தாலும் திருவாரூர் டாக்டர் கண்ணுசாமி அவர்களின் க்ஷயகுலாந்தக சுவர்ணரஸ தாளக டற்பம் சாப்பிட்டால் குணமாகும். 40 நாள் மருந்து ரூ. 50—0—0.
ஏழைகளுக்குப் பாதிவிலை.

ஷண்முகானந்த வைத்தியசாலை,
திருவாரூர்.

ஓர் அதிர்ஷ்ட ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணெயை உபயோகியுங்கள்.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்று தர்மார்த்தமாக குறைந்த விலைக்கு வெளியிட்டு வருகிறது.)

சகோதர. சகோதரிகளே, வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கெர்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேகவாய்வு என்று பெயர் பெற்ற கோடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, தெனரல், கொக்கிருமல், காசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும் நரம்புகளில் தங்கி முன்-பின் (வீக்கங்கள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு,சூதககட்டிகள், பக்க விலா இழுப்பு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் (விரிக்கின் பெருகும்) அனந்த வெட்டவாய்வு ரோகிகளும், 3 நேரம் சம், பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணெ சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள் பாலிய தேசசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்றுவருவது பிரத்தியக்ஷம்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள தூர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் பிரம்ம முடிகோஷாயி மேக எண்ணெ கொண்ட சீசா 1க்கு ஏழைகளுக்கு ரூ. 7—0—0.

பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவும் வேண்டும்.

பிரம்மமுடி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ...	0—8—0
மனு நீதி மருமம் ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ...	0—2—0
சோதிடப் புரட்டு. ...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ...	0—2—0
சுயமரியாதைப் பாடல் ...	0—2—0
தர்ம பரீசை அல்லது புராண ஆபாசம். ...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ...	0—4—0
ஞானசூரியன் ...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்	0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ...	0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)	0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ...	0—2—0
*குறள் ...	0—8—0
* இயற்கைமதம் ...	0—8—0
* சிதம்பர ரகசியம் ...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.	0—4—0
* சுயமரியாதைத்தத்துவங்கள் ...	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ...	0—6—0
* ஆராய்ச்சி அணிகலம்	0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம்
கோட்டார்.

*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.

*கால்மாபாலிட்டன் கிளப்
விருதுநகர்.

*A. V. பாலசுப்ரமணியம்
23, எடய தெரு,
திருவாரூர்.

பி. சாமுவேல் பிள்ளை,
ஜெனரல் நியூஸ் ஏஜண்ட்
தூத்துக்குடி.

*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.

S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாட்சிபுரம் திருநெல்வேலி.

S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.

P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.

T. சேத்துநாயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.

K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.

மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.

P. R. C. எல்லப்பன்,
மரக்கடை வியாபாரம்,
கொசத்தெரு, காஞ்சீபுரம்.

A. S. முருகேசம், பஜார்
திண்டுக்கல்.

*T. சுப்ரமணியபிள்ளை,
3, செங்கல்வராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை.

A. R. M. சுந்திர பாண்டியன்
கடைவீதி,
அருப்புக்கோட்டை.

G. V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்.

*B. ரங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.

ஹாஜி முகமது ஷேக் உசேன்,
57. சுண்ணாம்புக்காரத்தெரு,
காரைக்கால்,

*M. ரத்னம்,
கிரோசினாயில் டிபோ,
நெல்லிக்குப்பம்.

K. N. தங்கவேலு,
காரியதரிசி
சமூகசீர்திருத்த சங்கம்
கல்லிடைக்குரிச்சி.

C. S. ஜோசப்
159 கேவல்ரி ரோடு,
பெங்களூர் Cant

M. N. M. பாவலர்,
நியூஸ் ஏஜண்ட், விழுப்புரம்.

S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
துறையூர்.

முத்துசாமி
நாடார் ஹைஸ்கூல்,
பொறையார்.

P. S. ஜீவரத்னம் பிள்ளை,
2. மலாய்வீதி, ஸ்லேவ்ஐலண்டு,
கொழும்பு.

A. S. பரமசிவம்
நியூஸ் ஏஜண்ட்,
பமபலபிட்டியா,
கொழும்பு.

எட்வர்ட்பால்
திருமலராபுரம்.

செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்.

S. அப்பாதுரை
மண்டி, ராசிபுரம்.

M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட்,
திருப்பாபுலியூர்.

S. C. கந்தசாமி,
26, குமாரசாமி செட்டி வீதி,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

சிதம்பரம்.
எம். கலியாணசுந்திர முதலியார்
கதர்ஸ்டோர் மேலவீதி

சாத்தான் குளம்.
பெரியசாமி நாடார்
ஷாப் வியாபாரம்

பட்டுக்கோட்டை
கே. சாரங்கபாணி
கொண்டப்பநாயடுபாளையம்

ஸ்ரீவில்லிபுத்தூர்.
பி. ஞானதேசிகம்

மாயவரம். எம். கலியாணசுந்திர
முதலியார் கதர்ஸ்டோர்,

* இந்த புள்ளியுள்ள விலாசதார்களிடம் குடி அரசு பதிப்பு புஸ்தகங்களும் கிடைக்கும்.

கீழ்கண்ட நகரங்களிலுள்ள ஹிகின்பாதம் புஸ்தகசாலைகளில் குடி அரசு பிரதிகள் கிடைக்கும்.

காட்பாடி.
திருநெல்வேலி.
அரக்கோணம்.
சென்ரல் ஸ்டேஷன்.
மதுரை.
மாயவரம்.
நாகபட்டணம்,
சேலம்.
தஞ்சாவூர்.
பௌரிங்பெட்.
எக்மூர்.
ஜோலார்பேட்டை.
திருச்சி.
போத்தனூர்.
ஈரோடு.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

R. S. Naidu,
86, Ampang St.

O. M. Ali Saiboo & Co,
27, Java Stree

The Selanger Stamp Co.,
Market Street

S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang

Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S

The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

:0:

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சொ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0

ஆசிரியர்: S. குருசாமி B.A.

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு " 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0

ஆசிரியர்: அ. பொன்னம்பலம்

மானேஜர், "சண்டமாருதம்"
கோட்டையூர்,
ராமனுதபுரம் ஜில்லா.

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்

சித்தர் பார்மஸி

விஷகடிகளினுலுண்டான ஊரல் தடிப்பு பத்து குணமடையும். 3 நாள் சாப்பிடும் விஷமை ரூ. 2. சூதபற்பம், நாட்பட்ட வயிற்று வலி, வாய்வு ரோகங்கள் 7 வேளையில் குணமடையும். ரூ. 3-8-0. கேட்லாக் இனும்.

Dr. P. M.
சங்கரலிங்கம் பிள்ளை,
கோவில்பட்டி, S. I. R.

அநேக பரிசுகளும், தங்க மெடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பெற்று உலகமெங்கும் புகழ்பெற்று விளங்குவதோடு 25—8—23-ல் சென்னையிலும், 14—4—27-ல் மதுரையிலும் நடந்த வைத்திய மகாநாடுகளில் இவர் மருந்துகள் முதல்தர தேவ ஔஷதங்களென தங்க மெடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

பழநி, சி. எம். சாமி.

குருதாம்பர பஸ்பம்

இது சகல வியாதியையும் வேரற நீக்கும் சக்தியுடையது. முக்கியமாய் சூலை, கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம் சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், நீராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்க்கவுசை அண்டவாய்வு, ஆனைக்கால், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், கிரேகம் அழுகி துர்நாற்றமுடையவர்கள், ஆணிப்புண்கள், கிராணி இன்னும் அநேக விதமானகொடிய கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். 100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 25-வேளை ரூ. 12-8-0. ஏழைகளுக்குப் பாதிவிலை. பிரபுக்களுக்கு ரேட் வேறு.

இழந்த பலத்தை திரும்பப் பெறவேண்டுமா? மூளைக்கொதிப்பும், பலஹீனமும் நீங்க வேண்டுமா? எமது **மன்மத குளிகையை** உபயோகியுங்கள் திடகாத்திரர்களாய், வீர புருஷர்களாய், நல்ல ஆரோக்கியமும் ஆயுள் விர்த்தியு மடைந்து உலக வாழ்க்கையில் இன்புற்று வாழ்வீர்கள்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும பலமும் திரும்பி வரும். நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி, இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரித ஸ்கலிதம், இடுப்புவலி உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே உண்மை விளங்கும் 60 குளிகை ரூ. 5, 30 குளிகை ரூ. 3, மாதிரிக்கு கு. 20 ரூ. 2.

குரு அப்ரேக் சேந்தூரம்—நீரழிவுக்குக் கைகண்டது புட்டி 1-க்கு ரூ. 15.

பிரமேக நிவாரணி:—பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர் எரிச்சல், குத்துதல் நிர்க்கும் புட்டி 1-க்கு ரூ. 2.

குறிப்பு:— பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் அட்வான்ஸ் ரூ. 5 உடன் ஆர்டரும் வி. பி. யில்லாத தேசவாசிகள் ரூ. 2 தபால் செலவும், மருந்துக் கிரயமும் சேர்த்து முன் பணத்துடன் ஆர்டரும் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளையும், மற்ற அவிழ்தங்களையும் கியாட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் **சி. மஹலயப்பசாமி,** நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு ஸ்ரீமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.